கல்கி

KALKI 15-6-80 90

வாழ்த்துகிறேம் —



செய்திகள் வாசிப்பது, செம்பியன்



இந்திரா காங்கிரஸுக்குள்ளேயே சஞ்சய் காந்திக்குப் பரம விரோதிகள் இருக்கிறார்கள் என்பது சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிகிறது. இந்த ஆசாமிகள் சஞ்சய் காந்தியை உ. பி. முதல்வராக்க முனைந்திருக்கிறார்கள். என்ன அநியாயம் பாருங்கள்! ஓர் அனைத்திந்திய தலைவரின் அதிகாரங்களைக் குறைத்து மாநிலத் தலைவராக்கிவிடுவது எவ்வளவு பெரிய துரோகம்!

அது மட்டுமா? முதலமைச்சரானதும் பொறுப்பு வந்துவிடும். பொறுப்புணர்வுடன் காரியங்களைச் செய்து வெற்றி காணவில்லையானால் மக்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். அப்புறம் அடுத்த தேர்தலில் அவர் தோற்றுக்கூடப் போய்விடலாம்.



ஆனால் இன்றைய நிலைமையிலோ அவர் ஜம்மென்று இங்குமங்கும் தனியாரின் பிரத்யேக விமானங்களில் பறந்து எல்லா இ. காங்கிரஸ் மாநில அமைச்சரவைகளையும் கதிகலங்க அடித்துக் கொண்டிருக்கலாம். அதே சமயம் மத்திய அமைச்சரவையிலும் 'ஃபைலை என் வீட்டுக்கு அனுப்புங்கள்' என்று மந்திரிகளை மிரட்டித் தர்பார் நடத்தலாம். நல்லது நடந்தால் தமக்குப் புகழ் தேடிக் கொள்ளலாம். கெடுதல் நடந்தால் அமைச்சர்கள் மீது பழியைப் போட்டுவிடலாம். இப்படிப்பட்ட உன்னத நிலையிலிருந்து சில துரோகிகள் அவரைக் கவிழ்த்துவிடப் பார்க்கிறார்கள்! சஞ்சய் அதற்கெல்லாம் மசிந்து விடாது தமது தனித் தன்மையைக் காத்துக் கொள்வாராக. மாநில முதல்வர் என்ற பதவியைவிடப் பிரதமரின் மகன் என்ற பதவி தான் எனக்கு முக்கியம் என்று முகத்திலடிப்பது போல் கூறிவிடுவாராக!

• • •

இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ள மாநிலங்கள் பலவற்றில் பதவிப் போராட்டம் ஆரம்பமாகி விட்டது. இதில்போராட்டம் என்ன வந்தது? சட்ட மன்றத்துக்கு மக்களால் அனுப்பப்பட்டவர்கள் கூடித் தங்களுக்குள் ஒரு தலைவரை ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியதுதானே என்று யாரும் அசட்டுத்தனமாகக் கேட்டுவிடக் கூடாது. இந்திராபாணி ஜனநாயகம் என்பது அலாதியான ஒன்று. அது மேதைகளுக்குத்தான் புரியும். மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் தலைவரை மேலிடத்துக்குப் பிடிக்கவில்லையானால் என்ன செய்வது? மேலிடத்துக்குப் பிடித்தமான தலைவரை மக்கள் பிரதிநிதிகள் தங்களுக்குப் பிடிக்கவில்லை என்று கூறிவிடத்தான் முடியுமா? சட்ட மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமின்றி, நாடாளு மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் எதற்குமே தேர்ந்தெடுக்கப்படாதவர்களும் கூட முதல்வர் பதவிக்குப் போட்டியிடலாம் என்று கூறியுள்ளார் இந்திரா காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஏ. ஆர். அந்துலே! இதையொட்டி சஞ்சயின் ஆத்ம நண்பரும் தொழிலதிபருமான கமல்நாத்தை மத்திய பிரதேசத்தின் முதல்வராக்கவும் சிலர் முனைந்து நிற்கிறார்கள்.

இது ஜனநாயகமா? இதெப்படி சாத்தியம் என்றெல்லாம் கேட்காதீர்கள். இ. காங்கிரஸ் மேதைகளுக்கிடையில் நமது அசட்டுத்தனத்தை அம்பலப்படுத்திக் கொள்வானேன்?

• • •

உட்கார்ந்த இடத்தில் அப்பளம் இடுவது போல் கதைகளையும் தொடர் கதைகளையும் எழுதித் தள்ளிய காலம் மலையேறிவிட்டது. மேனாடுகளில் ஃபோர்ஸைத், ஹெய்லி, மக்லீன், வாலஸ், உரிஸ் போன்றவர்கள் சரித்திர நாவல் மட்டுமின்றி சமூகக் கதை எழுதுவதற்குக் கூட ஏராளமான ஆராய்ச்சிகளை நடத்துகிறார்கள். இன்றைய அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், பல்வேறு தொழில்கள் பற்றியெல்லாம் தீவிரமாக ஆராய்ந்து தகவல்கள் சேகரித்து ஒழுங்குபடுத்தி அதன் அடிப்படையில் கதைகள் புனைகிறார்கள். வாசகர்கள் கதை படிக்கும் போதே விஷய ஞானமும் பெறுகிறார்கள்.



'நள்ளிரவில் சுதந்திரம்' நூல் நினைவிருக்கிறதா? டாமினிக் லாபியரும் லாரி காலின்ஸும் இந்தியா சுதந்திரம் பெற்ற வரலாற்றுக் கட்டத்தை ஒரு நாவல் போல் எழுதினார்கள். அவர்களே இப்போது ஒரு நாவலை வரலாற்று நூல்போல் அத்தனை கவனத்துடன் ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளார்கள்.

அரக்க குணமுடைய அராபியன் கடாபி, விஞ்ஞானிகளை விலைக்கு வாங்கி ஹைட்ரஜன் குண்டு ஒன்றினைத் தயாரித்து விடுகிறான்

அமெரிக்கா மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள நினைக்கும் பாலஸ்தீன பயங்கரவாதிகள் நியூயார்க்கில் அந்த ஹைடிரஜன் குண்டை ஒளித்து வைத்து விடுகிறார்கள். 36 மணி நேரத்தில் இஸ்ரேல் தான் ஆக்கிரமித்துள்ள எகிப்திய மண்ணை விட்டுப் பின்வாங்கவில்லையெனில் குண்டு வெடித்துவிடும் என்று கடாபி, அமெரிக்க ஜனாதிபதிக்கு எச்சரிக்கை விடுக்கிறான். இதுதான் கதை.

ஐந்தாவது குதிரை வீரன் என்ற தலைப்பு கொண்ட இந்த நாவலின் 453 பக்கங்களில் பல்லாயிரக் கணக்கான வியத்தகு உண்மைத் தகவல்கள் உள்ளன. இவற்றைச் சேகரிக்க இந்த எழுத்தாளர்கள் நான்கு ஆண்டுகள் பாடுபட்டனர்!

இந்த அளவுக்கு இல்லையெனினும் தீவிர ஆராய்ச்சிகளுடன் கூடிய தமிழ் நவீனங்களும் ஒருசில வெளிவராமலில்லை. அவற்றுள் ஒரு சமீபத்திய வெற்றி, புஷ்பா தங்கதுரையின் கடலுக்குள் ஜூலி.

• • •

புத்தகங்களை வைத்துக் கொண்டே மாணவர்கள் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஓர் அபிப்பிராயம் கல்வியாளர்களிடையே வலுப்பெற்று வருகிறது. இன்னும் கொஞ்ச நாள் போனால் புத்தகத்திலிருந்து விடைகளை எடுத்து எழுத வேண்டாம் விடைகள் அச்சாகியுள்ள பக்கங்களை விடைத் தாளில் குறிப்பிட்டாலே போதும் எனலாம். அதன் பிறகு அப்படித் தேடி எடுத்துப் படிக்கும் வேலையையும் ஆசிரியர்களிடமே ஒப்படைத்துவிட்டு ஒவ்வொரு மாணவனும் பரீட்சையின்போது வினாத் தாளுடன் புத்தகத்தையும் மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்துவிட்டுப் போகலாம்.

புத்தகத்தைப் பார்த்துப் பரீட்சை எழுதும் முறை மேனாடுகளில் இல்லாது போகவில்லை. அது மிகவும் உயர்நிலைக் கல்வியில்தான் அமல்படுத்தப்படுகிறது. இன்று விஞ்ஞான உண்மைகளும், கண்டுபிடிப்புக்களும் மூளையில் இருத்திக்கொள்ள முடியாத அளவில் பெருகிவிட்டன. வங்கிகளில் பணத்தைச் சேமிப்பது போல் கம்ப்யூட்டர்களில் விஞ்ஞான அறிவைச் சேமிக்கிறார்கள். எனவே எந்த அம்சத்தை எந்த இடத்தில் எவ்விதம் தேடி அறிய முடியும் என்று தெரிந்து வைத்திருப்பதே பெரிய சாதனை என்று கருதப்படுகிறது.

பரீட்சைகளே இல்லாத பாலர் பள்ளிகள் பலவும் மேனாடுகளில் உண்டு. அவற்றில் அதிகப்பட்சம் பத்துப் பதினைந்து மாணவருக்கு ஓர் உபாத்தியாயர் இருப்பார். பரீட்சை இல்லாததற்குக் காரணம், பரீட்சைக்கு அவசியமில்லாத படிக்கு அனைத்து மாணவர்களும் நல்லறிவு பெற்றிருப்பார்.

அங்குள்ள நிலைமையையும் நமது கல்வி முறையையும் குழப்பிக் கொண்டால் முட்டாள்களை உருவாக்குவதில் முன்நின்றவர்களாவோம்!

வெற்றிக்கு வாழ்த்து;
தோல்விக்கும் வாழ்த்து!

முதல்வர் எம். ஜி. ஆரின் புதிய அமைச்சரவையை ஆர்வத்தோடு தமிழகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ''நல்வாழ்வுத் திட்டங்களுக்கு ஆதரவு தருவோம்'' என்று எதிர்க் கட்சித் தலைவர் கருணாநிதி கூறியிருப்பது நல்ல ஆரம்பம். சாய்ப்புணர்ச்சி..ன் ஏதுமின்றி இரு தரப்பினருமே தமிழகத்தின் நன்மையை மனத்தில் கொண்டு தத்தமக்குரிய ஜனநாயகப் பணிகளைக் கண்ணியமான முறையில் பொறுப்புணர்வோடு நிறைவேற்றட்டும்.

இவ்விதழ் மேலட்டையில் திரு ஹாண்டே அவர்களின் படத்தை வெளியிடுவதிலும் மகிழ்கிறோம். அண்ணாநகர் தொகுதியில்



கலைஞர் பெற்ற வெற்றியை வாழ்த்தும் போதே ஹாண்டேயின் பெருமிதத்துக்குரிய தோல்வியையும் வாழ்த்தத்தான் வேண்டும்!

படத்தில் ஹாண்டேயின் கரத்திலிருப்பது ஒரு சவுக்கு. சாதாரணச் சவுக்கல்ல! எதேச்சாதிகார எதிர்ப்பணியினர் சில ஆண்டுகளுக்கு முன்பு அவருக்குப் பரிசளித்த வெள்ளிச் சவுக்கு! நாடு தழுவிய நோக்கில் யதேச்சாதிகார சக்திகள் எங்கு தலையெடுத்தாலும் அவர்களை அடக்க ஹாண்டே முன்னிற்க வேண்டும் என்ற நமது விருப்பத்துக்கு ஒரு சின்னம் அந்தச் சவுக்கு.

திரு ஹாண்டே கலைஞருக்கு எதிராகத் தேர்தல் வழக்குப் போடப் போவதாகச் செய்திகள் அடிபடுகின்றன. இது நாகரிகமில்லை; இதற்குத் தேவையுமில்லை என்பது நமது கருத்து. திரு எம். ஜி. ஆர். இதனைத் தடுத்துவிடுவார் என்றும் நம்புகிறோம். அசல் டாக்டர், கௌரவ டாக்டருக்கு ஏற்கனவே தேவையான வைத்தியம் செய்தாகி விட்டது. திரு கருணாநிதியின் அறிவும் அனுபவமும் சொல்லாற்றலும், வாதத் திறமையும் நுணுகி ஆராயும் நோக்கும் தமிழக சட்ட மன்றத்துக்குத் தேவைதாம். ஹாண்டே அந்த அளவில் கலைஞரை வாழ்த்தித் தமக்குக் கௌரவம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

எம். ஜி. ஆர். வண்ணப் படம்:
- ஏ. சுந்தரம்

ஹாண்டே புகைப்படம்:
- முரளி ஸ்டில்ஸ்

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான்® ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

வளரும் குழந்தைகளுக்கென்றே சிறப்பான சில தேவைகள் உள்ளன—வளரும் வயதிலே உடம்புக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த புரதம், 22 மூலாதார ஊட்டச் சத்துக்கள் —அளிக்கிறது காம்ப்ளான். மறவாதீர்கள் டாக்டர்களின் சிபாரிசு பெற்ற, திட்டமிட்ட உணவு காம்ப்ளான்.

இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப் புத்தகம்.

''குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி''
50 பைசா தபால்தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக :
தபால் பை நம்பர் 19118, (Comp) G-78, பம்பாய் 400 025.

லிண்டாஸ்—GLC-6-3012 TH

திட்டமிட்ட பரிபூரண உணவு — காம்ப்ளான்®


இன்றைய
சிறு மகள்
நாளைய
மணமகள்
The Wild Swans
by HANS CHRISTIAN ANDERSEN

சட்டமன்றத்தில் புதுமுகங்கள்

முதன் முதலாகத் தமிழக சட்டமன்றத்துக்குள் அடியெடுத்து வைக்கிற மக்கட் பிரதிநிதிகளை வாசகர்களுக்கு அறிமுகப் படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.



டாக்டர் க. சௌரிராஜன்

டாக்டர் க. சௌரிராஜன்

(காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்)

சென்னை தியாகராயநகர் தொகுதியில் இருபத்தைந்து வருடங்களாக மருத்துவத் துறையில் பணியாற்றிவரும் இவர் காமராஜரின் சீடர்.

''மருத்துவன் என்கிற முறையில் நோயற்ற சமுதாயத்தைப் பார்க்க விரும்புகிறேன். சாதாரணமாக ஒரு ஹோட்டல் அறைகூட 10 × 8 நீள அகலம் இருக்க வேண்டுமென்றுவிதி உண்டு. என் தொகுதியிலோ அதைவிடச் சின்ன இடத்தில் பெரிய குடும்பங்கள் வாழ்வதைப் பார்க்கிறேன். சுகாதாரத்துக்கு அடிப்படையால் கழிவறைகள் கட்டுவது அவசியம். இதைச் செய்தாலே நோய்கள் பல ஒழிந்து, மக்கள் ஆரோக்கியம் பெறுவர். இந்தப் பிரச்னையைத் தான் நான் மன்றத்தில் எடுத்து வைக்கப் போகிறேன்'' என்கிறார் இவர்.

ஆர். தியாகராஜன்



ஆர். தியாகராஜன்

(இந்திரா காங்கிரஸ், விருத்தாசலம்)

விவசாயத் தொழில் செய்யும் இவர், விருத்தாசலம் பஞ்சாயத்து யூனியன் உதவித் தலைவர்.

''எங்கள் ஊரில் குடிநீர் முக்கிய பிரச்னை. எங்கும் முந்திரிக் காடு. 300 அடி தோண்டினால்தான் தண்ணீரையே பார்க்க முடிகிறது. வண்டலான சிவப்புத் தண்ணீரைத்தான் எல்லோரும் குடிக்கிறோம். தொகுதியில் உள்ள முப்பது கிராமங்களுக்கும் குடிநீர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதே என் முதல் முயற்சியாக இருக்கும்'' என்கிறார்.

பா. விஜயலக்ஷ்மி

(அ. இ. அ. தி. மு. க. வீரபாண்டி, சேலம்)

அரசியல் காரணங்களுக்காகச் சுட்டுக் கொல்லப்



பா. விஜயலக்ஷ்மி

பட்ட பூலாவாரி சுகுமாரனின் தங்கை.

''எங்கள் தொகுதிக்கு முக்கிய தேவை குடிதண்ணீர் மற்றும் சாலைகள் வசதிதான்'' என்று கூறும் இவர்தான் சட்டமன்றத்தில் வயதில் மிகச் சிறியவர்.

ஜி. மூர்த்தி

(இந்தியக் குடியரசு கட்சி பேரணாம்பட்டு, வ. ஆ.)



ஜி. மூர்த்தி

இவர் சாதாரண பீடி தொழிலாளியின் மகன். பீடிவேலை செய்துகொண்டே படிப்பதைத் தொடர்ந்தார். இன்று சிறந்த வழக்கறிஞர், நல்ல பேச்சாளர். டாக்டர் அம்பேத்காரின் சமூக, பொருளாதாரக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் உள்ளவர்.

என். வி. என். சோமு

(தி. மு. க. பார்க் டவுன், சென்னை)

மறைந்த முன்னாள் தி.மு.க. அமைச்சர் திரு என்.வி. நடராஜன் மகனான இவர் சிறந்த வழக்கறிஞர். அரசியலில் 25 ஆண்டு அனுபவம் உள்ளவர். 1972ம் ஆண்டு சென்னையில் துணை மேயராகப் பதவி வகித்தவர். பல தொழிற் சங்கங்களில் ஈடுபாடு உடையவர்.


''மூன்று ஆண்டுகளாகச் சரியாகச் செயல்படாத குடிசை மாற்று வாரியத் திட்டத்தை அரசிடம் மீண்டும் வற்புறுத்தப் போகிறேன்'' என்கிறார்.

பேட்டி: சிக்கி

(இந்த அம்சம் 29-6-80 இதழில் தொடரும்)

என். வி. என். சோமு




புதிய
மாநில முதல்வர்கள்
சஞ்ஜய்ஜியை
முதல்வரா
தேர்ந்தெடுத்
திருக்கிறோம்!
உ.பி.
எம்.எல்.ஏக்கள்
பிரதமரா ஆக வேண்டியவனைப்
போய் முதல்வரா தேர்ந்தெடுத்தா
எங்க குடும்ப கௌரவம்
என்ன ஆகிறது?
முன்னாள்
பிரதமர்
பிரதமர்
எம்.ஜி. ஆரா..!
வாங்க..வாங்க!
இப்படி வந்து
உட்காருங்க!

1980 ஜூன் 15
ரௌத்திரி ஆனி 1
மலர்: 38 இதழ்: 46



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

கலைஞர்

வெற்றி பெற்ற தருணத்தில்தான் பெருந்தன்மை காட்ட வேண்டும். கலைஞரின் பிறந்த நாளுக்கு வாழ்த்துத் தெரிவித்ததில் பெருந்தன்மையை வெளிப்படுத்திய எம். ஜி. ஆர். அடுத்து ஒரு நிருபர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அந்த உயர் நிலையிலிருந்து விழுந்து விட்டார்!

''கருணாநிதி உங்களுடன் சேர முன் வந்தால் சேர்த்துக் கொள்வீர்களா?'' என்ற ஒரு நிருபரின் கேள்விக்கு, ''துப்பறியும் அதிகாரியும் திருடனும் ஒன்றாக கம்பெனி நடத்த 'முடியுமா?'' என்று திருப்பிக் கேட்டது சாதுர்யமாக இருக்கலாம், உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் அபசுவரமாக ஒலிக்கிறது.

கருணாநிதி இதையே திரித்துக் குழப்பப் பார்த்ததில் வெற்றி பெற முடியவில்லை. ''துப்பறிபவன் என்று என்னைத்தான் எம். ஜி. ஆர். குறிப்பிட்டார்'' என்று முதலில் கூறிச் சமாளிக்கப் பார்த்தார் மு. க. பிறகு, ''இல்லை, கருணாநிதியைத்தான் திருடன் என்று தாம் குறிப்பிட்டதாக எம். ஜி. ஆர். கூறுவாரேயானால், திருடனுக்குத் துப்பறியும் அதிகாரி இன்று பிறந்த நாள் வாழ்த்துக் கூறினால் நாளை அரசாங்கம் எப்படி நடக்கும்?'' என்று மு. க. வே கேட்டிருக்கிறார்.

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பது போல் இதென்ன வாதம்?

* * *

மேலே நாம் பார்த்தது அரசியல்வாதி கருணாநிதியை. இலக்கியவாதியாகவும் அதே நேரத்தில் காண்கிறோம். இலக்கிய சிந்தனையாளனுக்கு அபரிதமான மகிழ்ச்சி அல்லது அளப்பரிய சோகம் ஏற்படும் போது மற்ற தருணங்களை விடக் கற்பனையும் சொல்லாட்சியும் அபரிதமாய்ப் பெருகும். கலைஞரின் பிறந்த நாள் சொற்பொழிவில் அவரது இதயத்தாபம் காரணமாக எழுந்த சொற்பிரவாகம், படிக்கும்போது மெய்சிலிர்க்க வைக்கிறது; கண்களில் நீர் தளும்பக் கூடச் செய்கிறது! இலக்கிய நயமும் பளிச்சிடுகிறது:

''தமிழர்களே!

நீங்கள் என்னைக் கடலில் தூக்கி எறிந்தால் கட்டுமரமாக மிதப்பேன்—அதில் நீங்கள் ஏறிச் சவாரி செய்யலாம்!

என்னை நீங்கள் நெருப்பிலே தூக்கி எறிந்தால் நான் விறகாக மாறி அடுப்பெரிக்கப் பயன்படுவேன். நீங்கள் சமையல் செய்து சாப்பிடலாம்!

என்னை நீங்கள் பாறையிலே மோதினால் வெறும் கல்லைப்போல் பொடியாகி விடமாட்டேன். தேங்காய் சிதறுவது போல் சிதறி உங்களுக்குத் தின்கிற பண்டமாக மாறுவேன்!

ஆகவே, தமிழர்களே, தமிழர்களே! என்னை நீங்கள் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்! உங்களுக்காகவே பயன்படுவேன்!

எத்தனை தோல்விகள் தந்தாலும் நான் உங்கள் வீட்டு நாய்!

நன்றியை எதிர்பார்த்துத்தான் நான் நடை போடுகிறேன் என்று நீங்கள் யாரும் எண்ண வேண்டாம்!''

என்று இப்படி அலை அலையாக அழகிய கருத்துக்கள், இலக்கியங்களிலிருந்து நயமான மேற்கோள்கள் முட்டி மோதிக் கொண்டு பொங்கிப் பிரவகிக்கின்றன கலைஞரின் பேச்சிலே.

இத்தனை பேசுகிறவரிடம் இன்னும் ஒன்றே ஒன்றைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அது, ''என் ஆட்சிக் காலத்திலே நடக்கக் கூடாத தவறுகள் பல நேர்ந்து விட்டிருக்கின்றன; மக்களின் மன்னிப்பை வேண்டுகிறேன்'' என்ற எளிய, அலங்காரமற்ற, அகங்காரமற்ற, உண்மை ஒளியுடன் கூடிய சொற்கள்.

கடல் ராணி

சாண்டில்யன்

அத்தியாயம் 46

காமஜோதி

இரு பெண்களும் ஆடை அணியச் சென்று மூடிய அறைக் கதவைத் திறக்க முயன்ற இந்திரஜித் அனந்தின் கை, துலாஜியின் எச்சரிக்கையாலும், செய்தியாலும் சட்டென்று நின்றது. சபலப்பட்டிருந்த அவன் மனம்கூட துலாஜியின் சொற்களால் திசை திரும்பவே, அனந்த் கதவு மேலிருந்த கையை அகற்றிவிட்டு துலாஜி இருந்த பாறையிடம் வந்து அதன் மீது உட்கார்ந்துகொள்ள, துலாஜியும் அவன் பக்கத்தில் அமர்ந்து, தனது மடியிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்து அனந்திடம் கொடுத்தான். அந்தக் கடிதத்தைப் படித்த அனந்தின் முகத்தில் தீவிர சிந்தனை படர்ந்தது. ''இது எப்போது வந்தது?'' என்று வினவினான் தனது நண்பனை நோக்கி.

''இன்று விடியற்காலையில்'' என்றான் துலாஜி.

''கவலைக்கிடமான செய்தி'' என்று கூறினான் அனந்த் அந்தக் கடிதத்தை இன்னொரு முறை படித்துப் பார்த்து.

''கவலைக்கு ஏதுமில்லை. கடிதம் விவரமாயிருப்பதால் நடந்தது தெளிவாகத் தெரிகிறது'' என்று துலாஜி கூறினான்.

''உன் தகப்பனார் முதலில் கொடுத்த ஓலையில் இந்தத் தகவல்கள் ஏதுமில்லையே, வால்டர் ப்ரௌன் மறுபடியும் போருக்கு வருவதாகத்தானே எழுதியிருக்கிறது?'' என்று துலாஜியைக் கேட்டான் அனந்த்.

''இந்தச் சமயம் வால்டர் ப்ரௌனுடன் வருவது காப்டன் அப்டன் அல்ல, மாக்ரே வருகிறான்'' என்றான் துலாஜி.

இந்தச் சமயத்தில் இரு பெண்களும் ஆடைகளை அணிந்து அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வரவே அவர்களையும் தங்களருகில் வருமாறு அழைத்தான் துலாஜி. ''அவர்கள் எதற்கு?'' என்று அனந்த் அவர்கள் வருவதைத் தடை செய்யப் பார்த்ததும் துலாஜி பெரிதாக நகைத்தான்.

''எதற்கு நகைக்கிறாய்?'' என்று சீறினான் அனந்த்.

''காதல் உன் கண்ணை மறைப்பதைப் பார்த்தேன்.'' துலாஜியின் பதிலில் கேலி இருந்தது.

''எப்படிக் கண்டாய் அதை?'' அனந்தின் கேள்வியில் சீற்றம் முன்னைவிட அதிகமாகக் காணப்பட்டது.

''உன் கண்களை மட்டுமல்ல, உன் மூளையையும் பெண்ணாசை மறைத்திருக்கிறது'' என்ற துலாஜி, ''அனந்த்! இவர்கள் பெண்கள் மட்டுமல்ல'' என்று சுட்டிக்காட்டினான்.

''வேறு என்ன?''

''வீராங்கனைகள். ஒருத்தி கடற் போரில் நிகரற்றவள். இன்னொருத்தி வேவுகாரி. தரைப் போரில் மிக வல்லவள். இவர்களையும் நம் மந்திராலோசனையில் கலந்து கொள்வது நல்லது.''

''என்ன மந்திராலோசனை?''

''போரைப் பற்றி.''

''அதற்கு அவகாசமிருக்கிறது.''

''இருக்கலாம். ஆனால் கடந்த கால விளைவுகளிலிருந்து நாம் படிப்பினை தெரிந்து கொள்ள வேண்டும். எதற்கும் தயாராக இருக்க வேண்டும்'' என்று துலாஜி சொல்லிக் கடைசி வார்த்தையை முடித்த சமயத்தில் இரு பெண்களும் அந்த இடத்துக்கு வரவே இருவரையும் உட்காரும்படி சைகை காட்டினான் அனந்த்.

இரு பெண்களும் அவன் இரு புறத்திலும் உட்காரவே விஷயத்தை விவரிக்கத் துவங்கினான் துலாஜி. ''அதிகப்படியாகப் போனால் இன்னும் பத்து நாட்களுக்குள் சிந்து துர்க்கம் தாக்கப்படலாம். நம்மிடம் உறுதி கூறியபடி மாக்ரே கவர்னரை அணுகிவிட்டான். கவர்னரும் இதுவரை தோல்வியைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கும் காப்டன் அப்டனை நீக்கிவிட்டு மாக்ரேயை அவன் ஸ்தானத்தில் நியமித்திருக்கிறார். அதைப் பற்றி

விவரமாக எனக்குச் செய்தி வந்திருக்கிறது'' என்று கூறி அனந்தின் கையிலிருந்த கடிதத்தைச் சுட்டிக் காட்டினான். மேலும் சொன்னான்: ''அந்தக் கடிதம் என் தந்தையால் எழுதப்பட்டது. முதல் கடிதத்தை அனந்த் கொண்டு வந்தான். அதில் மாக்ரே நம்முடன் சேருவானென்றும் கொங்கணி நாட்டின் கரைகளைக் கொள்ளையிடும் ஆங்கில கொள்ளைக்காரர்களான இங்க்லண்டையும் டெய்லரையும் தீர்த்துக் கட்டுமாறும் எழுதியிருந்தார். மாக்ரே எப்படி வருவான், எந்தக் கப்பல்களுடன் வருவான் என்பது இக்கடிதத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது'' என்று. அத்துடன் ''அனந்த்! அந்தக் கடிதத்தை அவர்களிடம் கொடு'' என்றும் கூறினான்.

அனந்த் கொடுத்த கடிதத்தை வாங்கிப் படித்த இரு பெண்களும் அதை துலாஜி யிடம் கொடுத்தார்கள். ''அனந்தும் நானும் எந்தக் காரியத்தை முன்னிட்டுப் புறப்பட்டோமோ அந்தக் காரியம் முடியும் சமயம் நெருங்குகிறது. அதற்கு நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்'' என்று கூறிய துலாஜி சிறிது நேரம் சிந்தனையிலிருந்து விட்டு மீண்டும் பேசினான்.

''அனந்தும் நானும் நம் நாட்டின் மேலைக் கடற் கரையின் நிலையைச் சரிக்கட்டக் கிளம்பினோம் நீண்ட நாட்களுக்கு முன்பு. அதை எப்படிச் செய்வது என்ற ஒரு முடிவுக்கும் வந்திருந்தோம். அந்த ஒப்பந்தப்படி இருவரும் இரு திசைகளில் கிளம்பினோம்; இருவரும் இரு விதமான அனுபவங்களைப் பெற்றோம். அனந்த் எதிர்பாராத விதமாக கார்வார் போரில் சிக்கிக் கொண்டு பிறகு இங்கு வந்து சேர்ந்தான். நான் கடற் போரில் சிக்கிக் கொண்டேன். அது ஒரு விநோதக் கதை'' என்று கூறிச் சிறிது நிதானித்தான்.

''அதையும் சொல்லுங்கள்'' என்று கேட்டாள் கடல் ராணி.

துலாஜி தலையை ஆட்டினான். சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்தான். பிறகு சொன்னான்: ''கவர்னர் பூன் என்ற பைத்



தியத்தை உங்களுக்குத் தெரியும் என நினைக்கிறேன்.'' என்று.

''பார்த்ததில்லை, கேள்விப் பட்டிருக்கிறோம்'' என்றான் சாரு.

''ஆங்கிலேயரில் இத்தகைய மட சாம்பிராணியை நான் பார்த்ததில்லை'' என்று துலாஜி. ''அவனது சரித்திரமே தோல்விகளின் தொகுப்பு. இந்த நாட்டுக்கு வர்த்தகம் செய்ய வந்த ஆங்கிலேயருக்கு நாடாளும் ஆசை வந்தது. அந்த ஆசையைப் பூர்த்தி செய்ய கவர்னர் பூன் வந்தார். வந்ததும் பம்பாயைச் சுற்றிச் சுவர் எழுப்பினார், சுவர் நகரத்தைக் காத்துவிடும் என்ற நினைப்பில். புதுப் புதுக் கப்பல்களைக் கட்டினார், கப்பல்கள் தாமாகவே போரிட்டுவிடும் என்ற நம்பிக்கையில். கோட்டைச் சுவரோ, கப்பலோ வெறும் வசதிகளே தவிர, போர்கள் வீரர்களால், வீரர்களின் அறிவால், போர்த் தந்திரத்தால், போர்த் திறமையால் சாதிக்கப்படுகின்றன என்பதை கவர்னர் பூன் உணரவில்லை. தம்மிடம் குமாஸ்தாவாக இருந்த வால்டர் ப்ரௌனைத் தமது கடற்படைத் தளபதி ஆக்கினார். என் தந்தை மீது பலமுறை படையெடுத்துத் தோல்வியடைந்த ப்ரௌனை இன்னும் விடவில்லை கவர்னர்., காரணம், ஒவ்வொரு தோல்விக்கும் காரணத்தை ப்ரௌன் தனது உப தளபதிகள் மீது சுமத்தினார். அதை உண்மையென்று நம்பினார். இன்னும் நம்புகிறார் கவர்னர். காண்டேரி தீவில் அடைந்த தோல்வி, இருமுறை விஜயதுர்க்கத்தில் அடைந்த படுதோல்வி, கார்வார் தோல்வி எதுவும் கவர்னர் பூனின் கண்களைத் திறக்கவில்லை. இத்தகைய ஒரு படையெடுப்பின்

இங்கேயும் கேள்வியா?

பகவான் ரமணர் நன்கு பிரபலமடைந்ததும் சிறிய வயதில் அவருக்கு ஆசிரியராக இருந்த ஒருவர் மதுரையிலிருந்து திருவண்ணாமலைக்கு அவரைப் பார்ப்பதற்காக வந்தார். ரமணரின் சொற்பொழிவின்போது அவருக்கு ஒரு பகுதி புரியவில்லையாதலால் எழுந்து அதற்கு விளக்கம் கேட்டார்.

உடனே ரமணர் எல்லோரிடமும் அவர் தமது ஆசிரியர் என்று அறிமுகப் படுத்தி விட்டு, ''இவருடைய கேள்விகளுக்குப் பயந்துதான் நான் இங்கே வந்தேன்; இவர் இங்கு வந்தும் என்னைக் கேள்வி கேட்பதை விடவில்லை!'' என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டு, அவருக்கு விளக்கமளித்தார்!

- பவன்ஸ் ஜர்னல்

- என். எஸ். மூர்த்தி.



சமீபத்தில் ஒரு தினசரியில் நெஞ்சைத் தொடும் விசித்திரமான நன்றி அறிவிப்பு வெளியானது:

''திண்டுக்கல் To ஒட்டன் சத்திரம். வழி: கன்னிவாடி, வீரக்கல், தருமத்துப்பட்டி. பொது மக்களுக்கு, முன்னாள் அருணா பஸ் டிரைவரின் நன்றி அறிவிப்பு.

''இதுவரை எனக்கு பஸ்ஸில் ஆதரவு அளித்த அன்புள்ளம் கொண்ட பெரியவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், எனது அபிமான மாணவ, மாணவிகளுக்கும் மற்றும் எனது சக ஊழியர்களான கோகுல், ஸ்ரீதேவி, தரயிப் ஆகியோருக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்து உங்கள் அன்புள்ளங்களை மறக்க இயலாது விடை பெறுகின்றேன்.

இப்படிக்கு

அருணா செல்வராஜ்

(டிரைவர்) வீரக்கல்

தகவல் : வளர்மதி தாசன்

போது ஏற்பட்ட ஒரு தொந்தரவால் கடற்கொள்ளைக்காரர்களான டெய்லரையும், இங்கிலாண்டையும் அழிக்கவும் காஸண்ட்ராவைக் கைப்பற்றவும் வால்டர்ப்ரௌனுக்கு உத்தரவளித்தார் கவர்னர்'' என்று கூறினான்.

''சுவாரஸ்யமாக இருக்கிறது. சொல்லுங்கள்'' என்றாள் கடல் ராணி.

சாரு ஏதும் கேட்கவில்லைதான். இருப்பினும் அவள் மேலெழுந்த புருவங்களில் கேள்வி இருந்தது.

* துலாஜி சொன்னான்: ''காஸண்ட்ராவையும், விக்டரியையும் பார்த்தவுடன் ப்ரௌனுக்குக் குலைநடுக்கம் கண்டது. அப்பொழுது இங்க்லண்ட் காஸண்ட்ராவை இயக்கி வந்தான். டெய்லர் விக்டரி என்ற துணைக் கப்பலிலிருந்தான். விக்டரி என்ற பெயரைப் பார்த்ததும் அது தன்னுடைய கப்பல்தான் என்று ப்ரௌன் தீர்மானித்தான். ப்ரௌனின் கடற்படையிலும் விக்டரி என்ற பெயருடைய கப்பல் இருந்தது. அதனால் குதூகலித்த ப்ரௌனின் கப்பல் மீது தனது பீரங்கிகளை இயக்கி இங்க்லண்ட் உடனே ப்ரௌன் தனது கப்பலைத் திரும்பி ஓடுமாறு கட்டளை இட்டான். அவன் துணைத் தலைவன் காப்டன் அப்டனும் தாங்கள் விஜய துர்க்கத்தைத் தாக்குவதற்காகத்தான் அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறினான். இப்படி இரு கோழைகளும் முடிவுகட்டிக் கப்பலைத் திருப்பிய சமயத்தில் எதிரியைப் பற்றிச் சரியாக மதிப்பிட்ட இங்க்லண்ட் காஸண்ட்ராவைப் பிரிட்டிஷ் கடற் படைக்குள் செலுத்தி ஊடுருவி இருபுறமும் பீரங்கிகளை இயக்கித் தாக்கினான். விக்டரியிலிருந்து டெய்லரும் பிரிட்டிஷ் கடற் படையை மும்முரமாகத் தாக்கத் தொடங்கினான். இரு வேட்டை நாய்களால் துரத்தப்பட்ட ஆட்டுக் கூட்டம் போல பிரிட்டிஷ் கப்பல்கள் ஓடின. 'ப்ராம்' என்று கவர்னர் பூனால் கட்டப்பட்டு நாமகரணமும் செய்யப்பட்ட பெரும் கப்பல் தீப்பற்றி எரிந்தது. போதாக் குறைக்கு 'லண்டன்' என்ற கப்பலிலிருந்த பிரிட்டிஷ் மாலுமிகள் பக்கத்தில் வந்து

* For these Naval Actions Refer 'The Pirates of Malabar" - By Col. John Biddulph P.P. 151 To 153

கொண்டிருந்த ''வாஸரெட்டா'' என்ற கப்பலுக்கு மாறி அங்கு நன்றாகக் குடித்து விட்டுத் தளத்தின் மீது ஆடத் தொடங்கினார்கள். இந்தக் கேளிக் கூத்தின் விளைவாக அவர்களை விரட்டியடித்த இங்கிலாண்டும் டெய்லரும் எதிரிக் கப்பல்களில் ஒன்றான ''எலிஸபெத்''தையும் கைப்பற்றிக் கொண்டார்கள். இப்படி வெற்றி பெற்று அவர்கள் திரும்பிய சமயத்தில்தான் நானும் எனது மாலுமிகளும் காஸண்ட்ராவில் வேலைக்கு அமர்ந்தோம்.''

''விசித்திரம்'' என்றாள் ராணி.

துலாஜி மேலும் பேசத் தொடங்கினான்:

''இத்தகைய தோல்விகளால் சீற்றத்துக்கும் அவமானத்துக்கும் உள்ளான கவர்னர் பூன் இப்போது வால்டர் ப்ரௌன் தலைமையில் க்ரீன்விச் (42 பீரங்கிகள் உடையது,) சான்டோஸ் (40 பீரங்கிகள்) விக்டரி (புதுக் கப்பல் 26 பீரங்கிகள்), பிரிட்டானியா (24 பீரங்கிகள்) ரிவெஞ்ஜ் (16 பீரங்கிகள்) இவற்றைக் கொண்ட ஒரு படையை அனுப்ப இருக்கிறார். இந்தப் படையில் ஒரு மாற்றமிருக்கிறது. காப்டன் அப்டனுக்குப் பதில் காப்டன் மாக்ரே காப்டனாக வருகிறான். காப்டன் மாக்ரேயின் துணிவும், போர்த் திறமையும் இங்கிலாண்டுக்குக்கூடத் தெரியும். ஆகையால் இப்பொழுது வரும் கடற் படை பலமாயிருக்கும். இதில் ஒரே ஒரு விஷயம் கவர்னருக்குத் தெரியாது....'' இங்கு கதையைச் சிறிது நிறுத்தினான் துலாஜி.

''எது?'' கடல் ராணி கேட்டாள்.

''காஸண்ட்ரா இங்கு இருப்பது'' என்றான் துலாஜி.

''ஏற்கனவே அனந்துக்கும் மாக்ரேக்கும் ஒப்பந்தம் இருக்கிறதே'' என்றாள் சாரு.

''அது கவர்னருக்குத் தெரியும். ஆனால் அதனால் பயனில்லை. கவர்னர் நம் யாரையும் நம்பவில்லை. காஸண்ட்ராவைப் பிடித்து அனந்த் கொடுத்ததும் அனந்தையும் எங்களையும் சிறை செய்ய மாக்ரேக்கு உத்தரவிட்டிருக்கிறார் கவர்னர்.'' என்று விளக்கிய துலாஜி குறுநகை கொண்டான்.

''அப்படியானால் நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினாள் சாரு.

இதுவரை மௌனமாயிருந்த அனந்த் ''கவர்னர் முறையை நாமும் கடைப்பிடிப்போம்'' என்றான்.

''என்ன முறை அது?'' என்று வினவினாள் கடல் ராணி.

அவளுக்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை அனந்த். ''துலாஜி! நீ வந்த வழியே சிந்து துர்க்கத்துக்குள் சென்றுவிடு. நேற்றிரவு நீயும் நானும் இட்ட திட்டத்தை அவர்களுக்குச் சொல்லுகிறேன். இன்று மாலை உன்னைப் பழைய இடத்தில் சந்திக்கிறேன்'' என்று கூறவே, துலாஜி எழுந்து பழையபடி பாறைகளில் மறைந்து சென்று விட்டான் துரிதமாக. போகு முன்பு ''இவர்களிடம் அடுத்து வரும் போரைப் பற்றி மட்டும் பேசினால் போதும்'' என்று சொல்லி விட்டுச் சென்றான்.

அவன் சென்றதும் அனந்த் தனது பக்கத்தில் உட்கார்ந்திருந்த இரு பெண்களின்



சென்ட் வாசனை ஸ்டாம்ப்

டாங்கா என்பது ஒரு குட்டி நாடு. இந்த நாட்டில் தபால் தலைகள் நாணயம் போலவும், வாழைப்பழம் போலவும் வேடிக்கையான வடிவங்களில் வெளியிடப்படுகிறது. சமீபத்தில் வெளியிடப்பட்ட ஸ்டாம்புகளில் சென்ட் வாசனை கமகமவென்று வீசுகிறதாம்! -வ. தேனப்பன்

தோள்களைப் பிடித்துப் பாறையில் படுக்க வைத்தான். அவர்களுக்கு நடுவில் தானும் படுத்துக் கொண்டான். தனது இரு கைகளையும் இரு பெண்களின் உடல்களுக்குக் குறுக்கேயும் போட்டான்.

''இதுதான் உங்கள் திட்டமா?'' என்று வினவிச் சிரித்தாள் கடல் ராணி.

''வேறென்ன இருக்கும்?'' என்றாள் சாரு.

''சாரு, ராணி'' என்று அழைத்தான் அனந்த்.

''உம்'' ஏககாலத்தில் பெண்களின் இரு 'உம்'கள் எழுந்தன, இணைந்தன.

''இருவரும் சிறிது ஒருக்களித்து என்னை அணைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறித் தனது கைகளை எடுத்துக் கொண்டான் அனந்த்.

''நல்ல அழகு'' என்றாள் கடல் ராணி.

''மிக நேர்த்தி'' என்றாள் சாரு.

''சொன்னபடி செய்யுங்கள்''. கடுமையுடன் ஒலித்தது அனந்தின் கட்டளை.

''இதில் மிரட்டல் வேறு?'' என்றாள் சாரு.

''எப்படியும் நம்மைக் கட்டிக்கொள்ளப் போகிறவர். கட்டளைதான் இடுவார்'' என்றாள் ராணி.

''ராணி! உனக்கு வெட்கமில்லை?'' என்று சீறினாள் சாரு.

''இருந்தால் இவர் பக்கத்தில் ஏன் படுத்திருக்கிறோம்'' என்று கேட்டாள் ராணி.

அடுத்து எதுவும் இருவரும் கேட்கும் நிலையில் இல்லை. இருவரையும் தனது இரும்புக் கைகளால் பலவந்தமாகத் திருப்பி அனந்த் அணைத்துக் கொண்டான். அப்பொழுது சூரியனால் பிரதிபலிக்கப்பட்ட கண்ணாடி வெளிச்சம் அவர்கள் மீது விழுந்து உலாவியது.


''இது என்ன?'' என்று ராணி கேட்டாள், அவன் அணைப்பிலிருந்து விடுபடாமல்.

''காம ஜோதி'' என்றான் அனந்த்.

''என்ன?'' என்று சாரு கேட்டாள்.

''நம்மீது காரணமாகத்தான் உலாவுகிறது'' என்ற அனந்த் பூர்ண திருப்தி நிலவிய புன்முறுவல் கொண்டான்.

(தொடரும்)



‘குரு’ படத்தின் தயாரிப்பாளர் பிரகாஷ் ‘‘நாளைக் காலை அவுட்டோர் படப்பிடிப்புக்காகச் செல்கிறோம். உங்களை எங்கள் ஹெலிகாப்டர் வந்து அழைத்துச் செல்லும்’’ என்றார். நான் முதலில் எப்பொழுதும் போல் தலையாட்டிவிட்டேன். பிறகுதான் அவர் சொன்ன வார்த்தைகளை உணர்ந்து திடுக்கிட்டேன்.


‘‘என்ன சார் ஹெலிகாப்டர் என்கிறீர்கள்!’’ என்றேன். ‘‘ஓ! அப்படியா சொன்னேன். அதனால் என்ன? மகாபலிபுரம் வரை காரில் போவோம். அப்புறம் ஹெலிகாப்டரிலும் ஒரு குட்டி ரவுண்ட் அடித்தால் போயிற்று’’ என்றார்.

காலையில் மகாபலிபுரத்துக்கு அருகே ஒரு வெட்ட வெளியில் பல கார்களும் வான்களும் நின்றிருந்தன. ஒரு ஹெலிகாப்டரும் தயாராக நின்றிருந்தது. பிரகாஷ் சொன்னதன் பொருள் அப்போதுதான் எனக்கு விளங்கியது. ஹெலிகாப்டர் காட்சி பற்றியே நினைத்துக் கொண்டிருந்தவர் அப்படிப் பேசியிருக்கிறார்!

ஹெலிகாப்டர் அருகே கமல், ஸ்ரீதேவி தம்பியார் ஆகியோர் காணப்பட்டனர். இயக்குனர் ஐ. வி. சசி மனம் நிறைய வரவேற்றார். காட்சி ஆரம்பமாகியது. ஹெலிகாப்டரில் ஸ்ரீதேவி ஏற வேறொரு சிறிய விமானத்தில் கமலஹாசன் பறக்க மிகவும் பரபரப்பாகப் பறந்து கொண்டே படமாக்கினார் ஒளிப்பதிவு மேதை வின்சென்டின் மகன் ஜெயனன் வின்சென்ட். என் அருகில் நின்றிருந்த புகைப்படக்காரர் ‘மோஹ விலா’ ரமாமணியைச் சில பிரத்தியேகப் புகைப்படங்கள் எடுத்துத் தரும்படி கூறினேன்.

‘‘ஹெலிகாப்டர் வாடகை மட்டுமே ஒரு நாளைக்குப் பதினையாயிரம் ரூபாய்! கிட்டத்தட்ட நாலு நாட்களுக்கு மேல் ஹெலிகாப்டர் தேவைப்படுகிறது. டில்லியிலிருந்து அதைச் சென்னைக்கு எடுத்துவர லாரிக் கூலி தனி! டில்லியிலிருந்து பறந்தே வந்துவிடலாமே என்று பலர் கூறக்கூடும். அதற்கு உபயோகப்படுத்தப்படும் தனி வகை பெட்ரோல் விலை மிகவும் அதிகம். கட்டுப்படியாகாது. அதனால் அதை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து லாரியில் இங்கு கொண்டுவந்து திரும்பவும் ஒன்று சேர்த்தோம். இதைத் தவிர அதை ஓட்டும் பைலட்டுக்கு பேட்டா, தங்கும் செலவு, அதனுடன் வந்த இன்ஜினியருக்குச் செலவு ஆக மொத்தத்தில் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் ஆகிவிட்டது’’ என்றார் தயாரிப்பாளர் பிரகாஷ் சிரித்துக் கொண்டே.. எப்படித்தான் தைரியமாகச் சிரித்தாரோ! (புது முகங்களை வைத்து ஒரு கறுப்பு வெள்ளைப் படமே இந்தப் பணத்தில் தயாரித்து விடலாமே என்று நான் நினைத்தேன்.) தயாரிப்பாளர் கூறியதைக் கேட்டுவிட்டு மேலே

விமானத்தில் கமல்,





× ஒளிப்பதிவாளர் ஜெயனன் வின்சென்ட், இயக்குனர் ஐ. வி. சசி
× குரு படத்தின் தயாரிப்பாளர் பிரகாஷ்



பார்த்தால் பகீரென்றது எனக்கு. நம்பியார் ஒரு கயிற்றைப் பிடித்துக் கொண்டு அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தார் ஹெலிகாப்டரிலிருந்து.

'டூப்' போடாமல் நடிக்கும் தைரியம் படைத்த ஒருசிலரில் அவரும் ஒருவர். மெல்ல ஹெலிகாப்டர் இறங்க அவரும் கயிற்றை விட்டு விட்டுக் கீழே இறங்கவும் திடீரென்று எஸ். பி. பாலசுப்ரமணியம் பாடவும் சரியாக இருந்தது. சிறிய விமானத்தில் பறந்து கொண்டே கமலஹாசன் பாடுவது போல் காட்சியாம். கமல் அட்டகாசமாகத்தான் விமானம் ஓட்டுகிறார்—பைலட்டை அருகில் வைத்துக் கொண்டு தான்!

இதுவரை எந்த ஒரு தமிழ்ப் படத்துக்குமே ஆகாத அளவுக்குச் சுமார் அரைக் கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து 'குரு' படத்தை எடுத்து வருகிறார் தயாரிப்பாளர் பிரகாஷ். இதில் பல புதுமையான காட்சிகள் உண்டு. ''ஒரு காட்சிக்கு புல்டோசர் வேண்டும் என்று கேட்டேன். அடுத்த நாளே அதற்குத் தயாரிப்பாளர் வழி செய்துவிட்டார். முத்துராமனும் கமலஹாசனும் புல்டோசரின் கீழே விழுந்து புரள வேண்டும். இதில் 'டைமிங்'தான் முக்கியம். கரணம் தப்பினால் மரணம். ஒரு நிமிடம் தாமதமானாலும் இரு கமலஹாசன்; இருமுத்துராமன்களைப் பார்த்து விடலாம். ஆனால் இருவருமே தைரியமாக நடித்தார்கள்'' என்றார் இயக்குனர் ஐ. வி. சசி.

இதற்குள் ஸ்ரீதேவி வேறொரு படப்பிடிப்புக்கு அவசரமாகப் போக வேண்டுமென்றார். ''கவலைப்படாதீர்கள் தாமதமானால் ஹெலிகாப்டரிலேயே அனுப்பி விடுகிறேன்'' என்றார் தயாரிப்பாளர் பிரகாஷ். ''நேராக உங்களை வாஹினி ஸ்டுடியோவில் இறக்கும். பத்தே நிமிடத்தில் அந்தப் படப்பிடிப்புக்குச் சென்றுவிடலாம்!'' ஸ்ரீதேவி தயார்தான். ஆனால் அவர் தாயார் 'வேண்டாம்'' என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டார். அவர் மட்டும் சரி என்று கூறி இருந்தால் 'ஹெலிகாப்டரிலே படப்பிடிப்புக்கு வந்த ஒரே நடிகை இந்தியாவிலேயே ஸ்ரீதேவி ஒருவர்தான்' என்ற புகழ் பெற்றிருப்பார்!

தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் எடுக்கப்பட்டு வரும் 'குரு' மகத்தான படமாக மட்டுமல்ல, வெற்றிப் படமாகவும் இருக்கும் என்பது வெளிப்புறப் படப்பிடிப்பைப் பார்த்தாலே தெரிகிறது.


—சலன்

ஹெலிகாப்டரில் ஸ்ரீதேவி!

Kalki Shopping Page

மல்லிகைபோல் மென்மையாகத்
துல்லியமாய் மாவரைக்க....

"கணேஷ் & சௌபாக்யா"
மாவரை இயந்திரங்கள்



- உத்திரவாத உழைப்பு
- கவர்ச்சிகர அமைப்பு

தயாரிப்பாளர்:
ஸ்ரீ கணேஷ் இண்டஸ்டிரீஸ்
119, சத்தி ரோடு, ஈரோடு-1.
(போன்: 73513)

ஏன்
வெஸ்டெர்லி ?

கவர்ச்சி-
அழகுமிகு அமைப்புடன்
நான்கு வித குளிர்ச்சிமிகு
வண்ணங்களில் கிடைக்கிறது.

சிக்கனம்-
தனித்தன்மை வாய்ந்த சோக்
ரெகுலேட்டர் மின்சாரச்செலவை
30% வரை மிச்சப்படுத்துகிறது.


சிறப்பு-
அதிக அளவு காற்றை அளிப்பதுடன்
சப்தமின்றியும் சுழல்கிறது.

சிறந்ததை நாடுங்கள்—
வெஸ்டெர்லியை
வாங்குங்கள்

வெஸ்டெர்லி
ஸீலிங் ஃபேன்களில் சிறந்தது

national 747

HMV
fiesta
popular




India's largest selling record player.

Max. rec. retail price Rs 514/- including excise duty Local taxes extra

HMV

HMV STEREO 1010



Rs 1484/- Max. Rec. Ret. Price incl. Excise Duty. Taxes extra.

HMV STEREO SYSTEMS

Available at

LAKSHMI MUSICALS
61, Usman Road, Madras-17
Ph: 444629, 442290

V. G. PANNEERDAS & CO
Victory House, Mount Road,
Madras-2 Ph: 88184

POPPAT JAMAL & SONS
36-B Mount Road,
Madras-2 Ph: 88532

● ''வாக்காளரின் வேண்டுகோள்'' ஆட்சியாளருக்கும், எதிர்க் கட்சியினருக்கும் சரியான நேரத்தில் எடுத்துரைத்த சிறந்த தலையங்கம். தனியே துண்டுப் பிரசுரமாக அச்சடித்து 234 சட்ட மன்ற புதிய உறுப்பினர்களுக்கும் தனித் தனியே அனுப்ப முடிவு செய்துள்ளேன்.

காட்டு எடையார் — சு. மணிமொழி

● மோஷே தயானின் ரகசிய விஜயத்தை அரசியல் பிரச்னையாக்கியதை திரு கே. ஸ்ரீனிவாசன் அவர்கள் சாடியது பாராட்டுக்குரியது. ஆனால் இந்த விஷயத்தை முதலில் மறுத்து மறைக்கப் பார்த்த வாஜ்பாய் பற்றிக் குறிப்பிடாதது வருத்தத்துக்குரியது.

கோபிசெட்டி பாளையம் — கே. பி. ஆண்டவன்

● மோஷே தயானின் ரகசிய இந்திய விஜயத்தை மறைக்க முயன்ற வாஜ்பாயின் 'புளுகை' இருட்டடிப்புச் செய்து விடாமல் 'செய்திகள் வாசித்தார்' செம்பியன்.

தயானின் இந்திய விஜயம் முதன் முதலில் வெளியானது இஸ்ரேலியப் பத்திரிகையில் தான். அதன் பிறகுதான் இந்திரா காந்தி அதைப்பற்றி வெளியிட்டார். அது தேர்தல் நேரமாக உள்ளது. இதற்கு இந்திரா காந்தி பொறுப்பல்ல.

சென்னை—61 — வி. ஜி. நேசன்

● 'நரகத்துக்குப் போய்...' சிறுகதை மனத்தை நெகிழச் செய்தது. பெண்மைக்கும், தாய்மைக்கும் பெருமளவு மதிப்புக் கொடுக்கக் கூடிய இதுபோன்ற கதைகளினாலாவது மூட நம்பிக்கைகள் குறையாதா?

சென்னை-38 — சரோஜா · ராஜாராமன்

● ஜெயரதனின் ''அம்மா'' சிறுகதை நெஞ்சை நெகிழ வைத்தது. மகனுடைய மற்ற தவறுகளையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்த அந்தத் தாயார் ஒரு பெண்ணைக் கெடுத்துவிட்டான் என்று தெரிந்ததும் கொதித்து எழுந்தது நல்ல முடிவு.

சென்னை—10 — கலாமூர்த்தி

● மூன்று மினி நாவல்களை வெளியிட்டு அதை முப்பது முறை படித்தால் இன்றைய முழு நாவலுக்கு ஈடாகும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே. அதை முப்பது முறை படிப்பதைத் தவிர வேறு வேலையே எங்களுக்கு இல்லை என்ற எண்ணமா உங்களுக்கு?

பெங்களூர்—53 — மலர்மடந்தை

● 'நான் செய்த பாவம் நான் ஓர் இந்தியன்' என்று கண்ணதாசன் வருத்தப்படத் தேவையில்லை. ஒவ்வொரு நாட்டின் நிலைமையை விட இந்தியா நூறு மடங்கு பரவாயில்லை. அண்டை நாடான பாகிஸ்தானையே எடுத்துக் கொள்ளுங்கள். எழுத்து சுதந்திரமா? பேச்சு சுதந்திரமா? மூச்.... ராணுவ ஆட்சி! இட்லரையும் டால்டாவையும் பருப்பையும் உதாரணம் காட்டி தாம் நாட்டைத் தாளுகவே தாழ்த்திக் கொள்வதை விடக் கேவலம் வேறு ஏதுமில்லை.

கல்லிடைக்குறிச்சி — எஸ். கைலாசம்

● 1—6—80 கல்கி கடைசிப் பக்கம் படித்த போது என்னை அறியாமல் என் கண்களில் கண்ணீர் வழிந்தது. அதை எழுதும்போது கவிஞர் கண்ணதாசன் ரத்தக் கண்ணீர்தான் விட்டிருக்க வேண்டும்.

திருச்சி — ஆர். எஸ். ராமமூர்த்தி

● 1—6—80 கல்கி வட்ட மேஜையில் வெளியான திரு வி. கன்னையாவின் கடிதத்துக்குப் பதில்:

திருக்குறள் அரங்கேற்றத்தின்போது சங்கப் புலவர்கள் திருக்குறளைச் சிறப்பித்துப் பாட, அவருள் ஒருவராகிய இடைக்காடர்,

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி
குறுகத் தறித்த குறள்

என்று பாடக் கேட்ட ஔவையார் 'அப்படியன்று.

அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி
குறுகத் தறித்த குறள்

என்று இருப்பதே நேர்' என்று கடுகு என்ற சொல்லை அணு என மாற்றினார். இதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

சென்னை—17 — சுந்தா



வட்டமேஜை



தேர்தலுக்கு முந்தைய உமாபதி கார்டூனில் உள்ள மாலையை (கல்கி 1. 6. 80 இதழ்) வெட்டி எடுத்துத் தேர்தலுக்குப்பின் திரு எம்.ஜி.ஆர் கழுத்தில் அணிவித்து அனுப்பியுள்ளார் திருக்கோவிலூர் கல்கி வாசகர் எஸ். சந்திரமௌலி.

வெப்பத்தால் நீங்கள் வலுவிழந்து வாடுகையில்



உட்கொள்ளுங்கள்

க்ளாக்ஸோஸ்-D*

புத்துணர்ச்சி பெருகும். குளுமை பரவும்.
மேற்கொண்டு வேலையில் ஈடுபட உடனடி சக்தி கிடைக்கும்.

வெப்பத்தைப் போல் உங்களை வலுவிழக்கச் செய்வது பிறிதொன்றில்லை. கோடையின் வெப்பத்திலே வடிந்துவிடும் உங்கள் சக்தியெல்லாம். உடனடி புத்துணர்ச்சி பெறத் தேவை க்ளாக்ஸோஸ்-D.

பழரசம், பால், தேநீர், காபி, நீர் ஆகியவற்றோடு க்ளாக்ஸோஸ்-D சேர்த்து அருந்துங்கள். அல்லது, நேரடியாகவே உட்கொள்ளுங்கள். உங்கள் குடும்பத்தினர் அனைவர்க்கும் கொடுங்கள் க்ளாக்ஸோஸ்-D. திரும்பவும் பெருகிவரும் சக்தியை உணர்வீர். மேற்கொண்டு வேலையில் ஈடுபட உடனடி சக்தி—வேலையிலும், விளையாட்டிலும்.



GFP. 5840-TL

க்ளாக்ஸோஸ்-D* –குடும்பத்தினர் அனைவர்க்கும் உடனடி சக்தி.

அருள்வாக்கு

தேசத்தின் மோசநிலை:

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகள்



ஸ்வதந்திரம் வந்து விட்டால் காந்தி நினைத்த மாதிரி எல்லாம் ராமராஜ்யமாகி, லோகத்திலேயே தார்மீக அந்தஸ்தில் நம் தேசம் ஆதியில் இருந்தாற்போல் முதல் ஸ்தானம் பெற்றுவிடும் என்று எதிர்பார்த்தவர்கள் நாளுக்கு நாள் ஏமாற்றமே கண்டு வருகிறோம்.

ஜனங்கள் அத்தனை பேரும் சிரமப்பட்டுக் கொண்டும், தங்களுக்குள்ளேயே பரஸ்பரம் பிரிந்து ஒருத்தரை மற்றவர் சிரமப்படுத்திக் கொண்டும், மொத்தத்தில் ஹீன ஸ்திதிக்குப் போனபடி இருக்கிறோம். பெற்றோரிடம் நன்றி, அறிவு புகட்டும் ஆசிரியரிடத்தில் நன்றி என்று ஆரம்ப காலத்தில் இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளிலிருந்தே எல்லாம் நசித்திருக்கின்றன. ஸமூஹ வாழ்க்கையில் முதலாளி — தொழிலாளி, பண்ணையார் — உழவர், அதிகாரி — சிப்பந்தி என்று பல தினுசில் ஒருவருக்கொருவர் உபகாரமாக இருந்து கொண்டிருப்பதாலேயே பொது வாழ்க்கை என்பது நடக்க முடிகிறது. இதிலே ஒருத்தருக்கொருத்தர் நன்றியும் அன்பும் கொண்டிருந்தால்தான் ஸௌக்யமான, ஸௌஜன்யமான வாழ்க்கை அமையும். பொருளாதாரத்தில் எத்தனை உச்சாணிக்குப் போய் விட்டாலும் பரஸ்பர த்வேஷம், மனக் கசப்பு, பேதங்கள் இதுகளோடேயே இருந்தோமானால் சாந்தமுமில்லை; ஸௌக்யமுமில்லை — 'சாந்தமுலேக ஸௌக்யமு லேது' ஆனால் இப்போது நாம் பார்ப்பது ஸகல துறைகளிலும் இரண்டு எதிர்க் கட்சிகளாகப் பிரிந்து பேதப்பட்டு நிற்பதைத்தான். பெரும்பாலும் ராஜீயவாதிகள் ஸ்வந்த அபிவிருத்தியை மட்டுமே கருத்தில் கொண்டு இந்த மாதிரி வர்க்க பேதங்களைத் தூண்டிவிட்டு லாபமடைகின்றனர் என்று பொதுப்படை அபிப்ராயமிருக்கிறது. பிறருடைய சொத்து ஸ்வதந்திரங்கள் என்பதில் கண்யமான நடத்தையே போய், எல்லாம் பறிமுதல் போல ஆவதற்கு ராஜாங்கமே தூண்டுகோலாகி இப்படி ஒழுங்கு முறைகளைப் பங்கப்படுத்திக் கொண்டு வருகிறதே என்று ஸாதுக்கள் துக்கிக்கிறார்கள். எங்கே பார்த்தாலும் டெமான்ஸ்ட்ரேஷன், அஜிடேஷன், ஸ்ட்ரைக் என்று இருக்கிறது. மாணவர்கள் ஆசிரியர்களை அடிப்பது, பெண்கள் தங்களுடைய பாதிவ்ரத்யம் முதலான ஸ்திரீ தர்மங்களை அலட்சியம் பண்ணுவது, கோயில் விக்ரஹத்திலிருந்து எதை வேண்டுமானாலும் திருடுவது, கொள்ளையடிப்பது, வெளியில் யோக்ய வேஷம் போட்டுக் கொண்டே இதுவரையில் கண்டும், கேட்டும் இராத முறையில் லஞ்ச ஊழலும், பிளாக் மார்க்கெட்டும் பண்ணுவது; எலெக்ஷன் என்ற பெயரில் ஏதோ அப்படியே ஸத்யமாக ஜனங்களின் அபிப்ராயப்படி ஜனங்களின் நல்லதற்காகவே—ராஜாங்கம் ஏற்படுத்துவதாகச் சொல்லிக்கொண்டு எத்தனை ஏமாற்றலாமோ அத்தனை ஏமாற்றி, நாட்டின் நல்ல பாமர ஜனங்கள் எல்லோருடைய புத்தியையும் குழப்பி, அவர்களையெல்லாம் லஞ்சத்துக்கும் ஆளாக்குவது; கபடமறியாத ஸாதுக்களைக் கண்ட இடத்தில் அவமதிப்பது, நல்ல ஸ்திரீகளைக் கெடுக்க யத்தனிப்பது என்றிப்படிப்பட்ட அக்ரமங்கள் எல்லை கடந்து விட்டன. வயது வந்த மாணவ மாணவிகள் சேர்ந்து படிப்பது, அப்புறம் ஒன்றாக உத்தியோகம் பார்ப்பது என்று ஏற்பட்டதில் உண்டாகியிருக்கிற தர்மஹானி கொஞ்ச நஞ்சமில்லை. இதையெல்லாம் நன்றாகக் கொழுந்து விட்டு எரியப் பண்ணக் கன்று பின்று பத்திரிகைகளும் ஸினிமாக்களும் ஏராளமாக விருத்தியாகியிருக்கின்றன.

தேசத்துக்கு எது பிராண ஸ்தானமோ அப்படிப்பட்ட தர்மம் இப்படி ரொம்பவும் வேதனைப்படுகிற அளவுக்கு மோசமாகியிருப்பதைப் பற்றி ராஜாங்கமானால் உதாஸீனமாயிருக்கிறது! நிஜமான வாழ்க்கைத் தரமான quality of life பாதாளத்துக்குப் போய்க் கொண்டிருக்கிற போது, ஜனங்களுடைய போக்ய வஸ்துக்களின் quantityஐ விருத்தி பண்ணுவதுதான் வாழ்க்கைத் தர (Standard of life) அபிவிருத்தி என்று சொல்லிக் கொண்டு ராஜாங்கத்தார் ப்ளான்

இது சுமார் பதினைந்தாண்டுகளுக்கு முன்பே ஸ்ரீ பெரியவாள் பகர்ந்தது. இன்றைய நிலவரத்தில் அவர்களது தீர்க்க திருஷ்டியை வியக்கிறோம்.

விமோசனம் என்ன?

ப்ளான் என்று போட்டுக் கொண்டே யிருக்கிறார்கள். அதற்கு வாஸ்தவத்தில் ப்ளான் போட வேண்டுமோ, அந்த தர்மம் தங்கள் விஷயமில்லை என்று நினைக்கிறார்கள்.

தர்மம், தர்மம் என்று கண்டிப்பாக ஒழுங்குமுறைக் கோட்பாட்டு நெறிகளை (Code of Conduct) போட்டுவிட்டால் ஜனங்கள் கடைப்பிடித்து விடுவார்களா என்ன? அந்த தர்மத்தை நடத்தி வைத்து அதன்படி நம் தர்மங்களுக்குப் பலனைத் தருகிற ஈச்வரனிடம் பயம், பக்தி என்ற அன்பு இரண்டையும் உண்டாக்கித் தருகிற மத உணர்ச்சி இல்லாமல் தர்மம் வளராது. ராஜாங்கமோ ஸ்வாமியே கூடாது, மதமே கூடாது என்பதாகிவிட்டது. அதிலும் 'ஸெக்யூலரிஸம்' (மதச் சார்பின்மை) என்பதற்கு விசித்திரமாக அர்த்தம் பண்ணிக் கொண்டு மற்ற மதங்கள் விஷயங்களில் குறுக்கிடாமலிருப்பது, ஹிந்து மதத்தின் விஷயத்தில் மட்டும் பாதகமாக மாத்திரம் குறுக்கிடுவது — என்கிற அடிப்படையில் போகிறது.


ஸ்வதந்திரம் வந்த பிறகுதான் ஈச்வர ஸாக்ஷியாகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வதே குறைந்து போய், "மனஸாக்ஷிப்படி" எடுத்துக் கொள்வது ஜாஸ்தியாகி வருவதைப் பார்த்தால் வேதனையாயிருக்கிறது. இப்படி எடுத்துக் கொண்டவர்கள் எந்தெந்தச் சந்தர்ப்பத்தில் எந்தெந்தக் கட்சிக்கும் கொள்கைகளுக்கும் மாறினவர்கள் என்பது நமக்குத் தெரியுமாதலால், "மன ஸாக்ஷி" என்கிறபோது நமக்கு ஒரு 'வால்யூ'வும் 'அட்டாச்' பண்ணத் தோன்றவில்லை. இப்படி மூலமான ராஜ்ய பீடத்தின் பதவிப் பிரமாணத்திலேயே ஸ்வாமியை விட்டதுதான் அத்தனை துறைகளிலும் பரவி எல்லாம் மாறி விட்டிருக்கின்றன.

ராமா ராமா என்று ராஜ்யம் பண்ண வேண்டும் என்றுதான் காந்தி ஒவ்வொரு கூட்டத்திலும் "ராம்துன்" (ராம த்வனி) கோஷிக்கப் பண்ணினார். ஜனங்களுக்கு எழுச்சிவர அந்த நாமா பரோபகாரம் பண்ணிற்று. காந்திக்குப் பிறகு தொடர்ந்து கடைப்பிடித்திருந்தால் இப்போதும் அந்த நாமம் நம்மைத் தூக்கி விட்டிருக்கும். V for Victory என்பதை ஒரு மந்திரம் மாதிரிப் பிரசாரம் பண்ணியே "ஸெகண்ட் வொர்ல்ட் வாரி"ல் நொடித்து விழுந்த இங்கிலாண்டை சர்ச்சில் தூக்கி எழுப்பி விட்டதை பிரத்யட்சமாகப் பார்த்தோமே! அப்படியானால் அசல் மந்திரமேயான பகவந் நாமாவை மட்டும் தொன்று தொட்டு அதிலேயே ஊறிவிட்ட இந்த நாட்டின் ஜனங்களுக்கு விடாமல் பழக்கப்படுத்தி யிருந்தால் இந்தத் தாழ்ச்சி நிலை நமக்கு வந்தேயிருக்காது என்பதில் என்ன ஸந்தேஹம்?

மத உணர்ச்சி போனதுதான் நம் ஹீன நிலைக்குக் காரணம். அந்த உணர்ச்சி தருகிற சக்தியிலேதான் துளியூண்டு பாகிஸ்தான் நம்மோடு பயப்படாமல் மோத வருகிறது.

ஆனால் இதையெல்லாம் யாரிடம் சொல்லி நடத்தப் பண்ணுவது? முன்னாளில் ராஜா இருப்பார். எத்தனைதான் 'ராஜாங்கம்' என்று abstract ஆக (தத்துவ ரீதியில் அருவமாக வைத்துக் கொண்டாலும் ராஜா என்று concrete ரூபத்தோடு ஒருத்தர் குறைகளைக் கேட்டு நிவ்ருத்தி பண்ணுவார் என்று முறையிடுவதில் முன்னே ஓர் அலாதி நம்பிக்கை இருந்தது. இப்போது ராஜாங்கத்தார் மாறிக் கொண்டே இருப்பதில் நிலைமை மாறியிருக்கிறது. கடைசியில் நாம் ஒவ்வொருத்தருமே ராஜா. இது குடியரசு ஜனநாயகம். "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்கிறார்கள். அதனால் நீங்கள் ஒவ்வொருத்தரும் ஒரு மஹாராஜா என்று வைத்துக் கொண்டு இதைச் சொல்கிறேன்.

"இப்போது அரசியல்தான் மதத்தின் ஸ்தானத்துக்கு வந்து விட்டது. ஆகையால் ஆசார்ய பீடங்களிலிருக்கிற உங்களைப் போன்றவர்கள்தான் இச்சமயத்தில் மதத்தை ரக்ஷிப்பதற்காக அரசியலில் கலந்துகொள்ள வேண்டும்" என்று உங்களில் சிலர் என்னிடம் திருப்பி அஸ்திரம் விடுகிறீர்கள்



இது சரியில்லை. ஆசார்யர்களாயிருக்கப்பட்டவர்கள் இம்மாதிரி காரியங்களில் ஈடுபட்டால் அவர்கள் அவசியம் தேசத்தின் ஆத்ம ரக்ஷணத்துக்காகப் பண்ணவேண்டிய ஜபம், பூஜை, இவைகளைச் செய்யவும் தர்மோபதேசம் செய்யவும் அவகாசம் இல்லாமல் போகும். அரசியலோடு கட்சி அரசியலிலும் மடங்கள், ஸம்பந்தப்படும்படியானால், மற்ற அழுக்குகளை அலம்ப வேண்டிய தீர்த்த கட்டமே பாசிக் குட்டையானதுபோல் ஆகும். இப்போதைக்கு தார்மீகமான கட்சி என்று நினைத்து ஒன்றுக்கு மடம் ஆதரவு தந்தாலும் நாளைக்கே அந்தக் கட்சி எப்படி ஆகுமோ? இப்போது போகிற போக்கில் அது எத்தனை காலம் பல கட்சியாகப் பிரியாமல் ஒன்றாயிருக்குமோ? எனவே இந்த ராஜாங்க, ராஜீயக் கட்சி சம்பந்தங்கள் ஆசார்ய பீடங்களுக்குக் கூடவே கூடாது.

அதனால், ''இப்படிப்பட்ட குறைகள் நமக்கு இருக்கின்றன; அவற்றை இப்படி இப்படி நிவிருத்தி பண்ணிப் பார்க்கலாம்'' என்று உங்களுக்கு எடுத்துக் காட்டுவது மட்டுமே எங்கள் கடமையும் பொறுப்புமாகும். நீங்களே அதை மனசில் வாங்கிக்கொண்டு திருந்தவும், மற்றவர்களைத் திருத்தவும் வேண்டும். தேசம் எத்தனை மோசமானாலும், கிட்டத்தட்ட பாதிப்பேருக்காவது, தட்டி எழுப்பினாலாவது, தெய்வத்திடம் பய பக்தியும், மத உணர்வும் ஏற்படும் என்று நினைக்கிறேன். ஏதோ ஒரு சிறிய பெர்ஸண்ட் ஜனங்கள் இப்போதும் நல்ல மதாசார அநுஷ்டாதாக்களாக இருக்கிறார்கள். இப்படி மத உணர்ச்சிகள் நிரம்பியவர்கள், ஓரளவாவது உள்ளவர்கள் எல்லாரும் தற்போது ஏற்பட்டிருக்கிற கஷ்ட தசையும் நன்றாக அறிந்தவர்களே. ஏனென்றால் அவர்களே affected party (பாதிக்கப்படும் தரப்பினர்) ஆயிற்றே! ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக இவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்றால் — indifference apathy என்று சொல்கிறார்களே, அப்படி ''என்னவோ நடக்கிறபடி நடக்கட்டும்'' என்று பட்டுக்கொள்ளாமல் இருக்கிறார்கள்; ''அல்லது நாம் எதிர்த்துப் பிரயோஜனம் இருக்காது'' என்று நம்பிக்கை இல்லாதவர்களாக — hopeless ஆகவும் helpless ஆகவும் — இருக்கிறார்கள். இது ஸரியில்லை. பகவான் கீதையில் சொன்ன மாதிரி பலனைப் பற்றி நினைக்காமல், தார்மீகக் கடமைகளைப் பண்ணியே ஆக வேண்டும். கொஞ்சம் புருஷயத்தனம் செய்தாலும் கை கொடுப்பதற்கு பகவான் இருக்க, helpless என்று நினைப்பதே பிசகு.


ஆகையினால், மத உணர்ச்சி உள்ளவர்கள், மதாநுஷ்டானம் பண்ணுகிறவர்கள் தாங்கள் பூரணமாக அநுஷ்டானம் செய்யாது போனாலும் அவற்றில் நம்பிக்கை உள்ளவர்கள் ஆகிய எல்லோரும் ஒன்று சேர்ந்து, ஸங்கமாக அமைந்து, தேசத்தில் தெய்வ பக்தி மூலமும் மதவொழுக்கத்தின் மூலமும் தர்மாபிவிருத்தி ஏற்பட வழி செய்ய வேண்டும். இப்படிப்பட்டவர்கள் அரசியலில் தங்களுக்கு இருக்கிற செல்வாக்கையும், தர்ம அபிவிருத்திக்காகப் பிரயோஜனப்படுத்தலாமே தவிர, மதாசாரியர்களை ராஜீய கார்யங்களில் இழுத்து விடக் கூடாது.

பெரிசாக ஏதோ சாதிக்க வேண்டுமென்பதில்லை. முதலில் சொன்னேனே, அப்படி பகவன் நாமாவை (கலிக்கு ஔஷதமே பகவந் நாமாதான் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.) பரப்பி விட்டாலே போதும்; நாம மஹிமையே நமக்கு விமோசனத்தைத் தந்துவிடும்.

அய்யோ பாவம்!



ஓர்
ஊசி
''காதிருந்தும்
வைரத்தோடில்லையே''
என்று
வருத்தப்பட்டது
பதிலுக்கு
ஒரு
குண்டூசி
''கொண்டையிருந்தும்
பூச்சூட
முடியவில்லையே''
என்று
முனங்கியது!



வி. ஆர். ராஜா

எலியையும் பார்த்தான்!

ஸ்வாமி சின்மயானந்தா தமது கீதைச் சொற்பொழிவின்போது கண்ணன் அர்ஜுனனுக்கு அளித்த விஸ்ருபக் காட்சியைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தார்: ''அர்ஜுனன் அந்தக் கோலத்தில் அசையும் பொருள், அசையாப் பொருள், ஜீவராசிகள் எல்லாவற்றையும் பார்த்தான்....''

இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தபோது கூட்டத்தில் சிறு பரபரப்பு ஏற்பட்டது. ஒரு பெரிய எலி கூட்டத்தினுள் புகுந்து ரகளை பண்ணியது. ஒருவர் அந்த எலியைப் பிடித்து வெளியில் கொண்டு விட்டு வந்தார். இதைப் பார்த்த சின்மயானந்தா, ''அர்ஜுனன் அந்த விஸ்வ ரூபத்தில் இந்த எலியையும் பார்த்தான்!'' என்றாரே பார்க்கலாம். கூட்டத்தில் சிரிப்பொலி அடங்க வெகு நேரம் ஆயிற்று.

- நேரில் கேட்டவர் - என். எஸ். மூர்த்தி





T.A/DCM/801/Tam

அழகு எது. அவலட்சணம் எது என்று பாகுபடுத்த வேண்டிய ஞானம் வந்தபோது திரும்பிப் பார்த்தால் நாற்பத்தி ஒன்பது வருடம் ஓடிவிட்டது மனத்தை உடைக்கிறது.

முதல் பத்தொன்பது வருடத்தைக் கழித்து விடுங்கள். — அறியாப் பருவம், குழம்பிய பருவம். யாரைக் கண்டாலும் காதல் கொண்ட பருவம் என்று! பாக்கி?

முப்பது வருடம் அறியாமை. வியர்த்தம். நீள முகவாய்க்கட்டையில் இவ்வளவு லாவண்யமா? கண்டி இழுப்பதற்கு அடிப்படைத் தேவை உதட்டோர மச்சம் என்று இப்பொழுதுதான் மயிர் போய் மண்டை மட்டும் மிச்சம் இருக்கும்போது புரிகிறது.

முட்டாள் நான். முழு மூடன். ஆயிரம் முறை சொல்லுங்கள். அடித்துச் சொல்லுங்கள். மறுப்புச் சொல்லாமல் ஒப்புக் கொள்கிறேன்.

கண்ணில் பட்டதை. மனசில் நெருடியதை. வாய் விட்டுக் காலித்தனமாக நாலு நண்பர்களிடம் சொல்லி, ஆனந்தப்படக்கூட முடியவில்லையே சுவாமி இன்று! அந்த வயிற்றெரிச்சலைச் சொல்லுங்கள்.

இன்று நான் பெரிய மனுஷன். ரஸானுபவத்தைப் பகிர்ந்து கொள்ளச் சரியான நண்பன் யாருமில்லை.

மடிசாருக்குச் சரியான பஞ்ச கச்சத்துடன் ஆஸ்திக சமாஜ் போவதைப் பெரிய மனிதத் தன்மையாகக் கொண்டவனும் (உண்மையை சொல்லப் போனால் அந்தப் பிரவசனமும் இவனுக்குப் புரியாது. ஒரு பெருமை) "டாட்டர்ஸ் ஃபர்ஸ்ட் கேர்ல்" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு போகுமிடத்திற்கெல்லாம், அகில இந்திய எழுத்தாளர் சங்கக் கூட்டம் உள்பட, ஒரு வாண்டை அழைத்துக்கொண்டு திரிபவனும் இல்லாத முதுமையை இந்த ஐம்பது வயதுக்கு ஏற்றியிருக்கிறார்கள் மகா பாபிகள். கதை எழுதுபவனையும் கெடுத்திருக்கிறார்கள்....

காதலியின் அப்பாவா? — ஐம்பது வயசு.
வயதான மேலதிகாரியா? — ஐம்பது வயசு.
இங்கிதம் தெரியாத மாமனாரா? — ஐம்பது வயசு.

கொல்கிறார்கள். கொல்லு கொல்லு என்று கொல்கிறார்கள்.

பார்க்கிறேன், படிக்கிறேன். சிரித்துக் கொள்கிறேன். எண்ணிக் கொள்ளுங்கள். முழுசாக முப்பத்திரண்டும் முன்பின் முரணாக இல்லாமல் சீராக உண்டு.

நான் சொல்லவில்லை. ப்த்லா.... ஐம்பது வயசுக்காரன் என்பீர்கள்.

அவள் சொன்னாள்.

"ஸோ டிஃப்பிகல்ட் டு பிலீவ்... ரிமார் கப்லி யங்....."

ஒரு நாள் சட்டையை 'டக்-இன்' செய்து கொண்டு இரண்டு இஞ்ச் பெல்டுடன் வந்தேன்.

மறுபடியும் சொன்னாள். சத்தியமான வார்த்தை.

இருபது வருடத்துக்கு முன்பாக இருந்தால் இப்படிச் சொல்வதற்குப் பிரதியாகக் கன்னத்தில் தட்டி, காதலித்துக் கல்யாணம் வரை கொண்டு போய் விட்டிருப்பேன்.


இன்று முடியாது. வாழ்க்கையில் ஒருவனுக்கு ஒரு கல்யாணம் போதும்.

இன்று வேறு திட்டம் போட்டேன். நான் கூடப் போடவில்லை. அதுவாகவே போட்டுக் கொண்டது.

ஐந்தரை மணிக்கு காஸ்மாபாலிடன் கிளப் சாந்தி தியேட்டர் வாசலில் மந்தை வெளிக்கோ அதற்கு அப்பாலோ பஸ் பிடிக்க நின்றிருக்கிறீர்களா? நின்று பாருங்கள். அந்தப் பரிதாபம் பிடிபடும்.

காரில் ஆபீஸ் விட்டுப் போகும்போது நான் பார்த்திருக்கிறேன் பலமுறை.

அந்தக் கண்றாவியைப் பார்க்கச் சகிக்காமல், மனசு கேளாமல் நான்கு முறை மனசு இளகி, வாய் பேசாமல் ஏற்றிக்கொண்டு சந்தனம் அரகஜா கடைக்கு எதிரே, லேனாக்



ஐம்பதிலும் ஆசை வரும்

பி.சு.கைலாசம்

கடைக்கு வலதுபுறம். செருப்புக் கடைக்கு இடது புறம் இறக்கி விட்டு நன்றி கண்ணில் கொட்டுவதைக் கண்டிருக்கிறேன். வெறும் நன்றி மட்டும் இல்லை என்பதைக் கண்டு பிடிக்க இன்னும் நான்கு முறை தேவைப் பட்டது.

அதற்குப் பிறகு நான் விவரிக்க மாட் டேன்.

நட்பு முதிர்ந்தது. கனிந்தது என்று மட் டும் சுருக்கமாகச் சொல்லிப் புரிய வைப் பேன். எப்படி என்று கேட்காதீர்கள். எழுதிப் புரிய வைக்கக் கூடிய சமாசாரமில்லை இது.

பேச்சிலேயே காலம் விருதாவாகப் போய்க் கொண்டிருந்தது என்ற குறை- தவிர ஒரு ரம்யமான..... ரம்யமான....·சரியான.... வார்த்தை அகப்படவில்லை....

கூட்டமில்லாதபோதே பஸ் ஸ்டாப்பில் காத்திருந்தான். நெற்றியில் வியர்வை வழிந்தபோது கைக்குட்டையை – என் கைக்குட்டையை என் பையிலிருந்து எடுத்து நீட்டினான்....

சிங்கப்பூரிலிருந்து ராமச்சந்திரன் வாங்கி வந்த உடலுடன் ஒட்டினாற்போலிருந்த டி-ஷர்ட்டை ஒரு நாள் அணிந்திருந்தேன்.

''டெய்லி எக்ஸர்ஸைஸ் செய்வேளா?''

புடைத்திருந்த புஜத்துக்கு அளித்த பாராட்டு இது. என்ன பதில் சொன்னேன் தெரியுமா? சொல்ல மாட்டேன். சிருங்கார ரஸம்.

பழுக்கிறது. பழுக்கட்டும்.

ஒரு நாள்.

ஆபீஸில் ஒரு 'போர்ட் மீட்டிங்'. சனிக் கிழமை. எல்லோருக்கும் விடுமுறை. எனக்கு மட்டும் வேலை. மீட்டிங் முடிந்து டைரக்டர்களுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டு, குப்பை மண்டிக் கிடந்த மேஜையைச் சீர்செய்துவிட்டுக் கீழே இறங்கினபோது மூன்று மணி.

வண்டி அருகே போகிறேன். அவனே வருகிறான்.

''என்ன ஸார் இத்தனை நாழி?... காத்துக் காத்துக் கால் வலித்து விட்டது. பார்க்கலாம் என்று நானே வந்து விட்டேன்.''

பழுத்து விட்டது.

''வா....''

வண்டிக்கடியில் படுத்திருந்த நாய்க் குடும்பத்தை விரட்ட வேண்டி வண்டியைச் சுற்றி வந்தேன்.

வலது பக்கப் பின் சக்கரம் தரையோடு தரையாக அமுங்கிக் கிடந்தது.

''ச்சொச்சோ.... பஞ்சரா ஸார்?''

''எஸ்.... ஒரே நிமிடம்.... நீ வேண்டு மானால் வண்டியில் உட்கார்.....''

''வேண்டாம் ஸார்.... நிக்கறேன்.''

டிக்கியைத் திறந்தேன். ஜாக்கை எடுத் தேன். ஸ்டெப்னியைத் தூக்கிப் போட் டேன். ஒரு கையால். ரெண்டு செங்கல்லை எடுத்து அண்டைக் கொடுத்தேன்.

என்ன பிரமாதம். இரண்டு நிமிடம்.

'நட்'டில் ஸ்பேனரைக் கொடுத்து ஒரு திருகு.

வாட் ஹாப்பண்ட்? சுழல மறுத்தது.

ஒரு முறை.... இரண்டு முறை.... மூன்று முறை.... மூச். வியர்வை வெள்ளம்.

பார்த்துக் கொண்டு நிற்கிறான்.

நான்காம் முறை மூச்சைப் பிடித்துக் கொண்டு.... நோ யூஸ். மூச்சு வாங்குகிறது.

''நீஸ் இடியட்ஸ்.... என்ன டைட்டாகத் திருகியிருக்கிறான் பார்....''

பார்த்துக் கொண்டு நிற்கிறான். மூக்கில் வழிந்த வியர்வையைச் சுண்டி எறிந்தேன்.

''ஜலே.... ஜுக்.... மாடிக்குப் போய், வாட்ச் மேன் இருப்பான். நான் சொன்னேன் என்று சொல்லி...... க்கு டெலிபோன் செய். என் பெயரைச் சொல்லு. ஒரு ஆளை அனுப்பச் சொல்லு. உடனே வருவான். ஸ்பின் ஜாப்....''

கைப் பையை என்னிடம் கொடுத்துவிட்டு (கவனியுங்கள்) மேலே போனான்.



சிங்கராஜா
சன்னியாசம்
வாங்கி விட்டதால்,
குள்ள நரிகள்
காட்டுராஜா
வேஷம் போடுகின்றன.
மலையரசன்
மௌன விரதம்
காத்து வருவதால்
மலைப் பிஞ்சுகள்
சலசலப்பு
காட்டுகின்றன.
ஆழ்கடல்
அமைதி காப்பதால்
கரையோரக்
கடலலைகள்
அட்டகாசித்துக்
கொண்டிருக்கின்றன.
நீலவானம்
நிர்மலமாய் இருப்பதால்
அந்துவானங்களே
ஆர்ப்பரிக்கின்றன!

நள்ளிரவின் மறுபக்கம்



கணவன் அவளைக் கொல்ல முயற்சி செய்கிறான். இருள் சூழ்ந்த ஒரு குகையில் தனித்து விடப்படுகிறாள். அச்சுறுத்தும் ஒரு புயலிலிருந்து தப்பி, ஒரு படகில் தஞ்சமடைகிறாள். அந்தப் படகோ தன் கட்டு மானத்திலிருந்து தளர்ந்து, கொந்தளிக்கும் நீரில் மிதக்க ஆரம்பிக்கிறது. படகு கவிழ்ந்ததால் இவள் மூழ்கியிருக்கலாமென எல்லோரும் எண்ணுகின்றனர். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? கொலையா, தற்கொலையா அல்லது விபத்துத்தானா?

நாவல் உருவில் ஐந்து மில்லியன் பிரதிகள் விற்பனையான ஸிட்னி ஷெல்டனின் கதை படமாகியிருக்கிறது.

- தி. மு. ரா.

வியர்வையை வழித்தெறிந்துவிட்டு ஒரு திருகு திருகினேன். துரோகி. கடகடவென்று கழன்று வந்தது.

எண்ணி மூன்று நிமிடம். பஞ்சர் டயரைக் கழற்றிவிட்டு ஸ்டெப்னியை எடுத்து மாட்டும்போது ரகுவின் வண்டி வந்தது. டிரைவர் இறங்கி வந்தான். ஸார்.... ஸார்.... ஒத்துங்க ஸார்.... நான் செய்கிறேன்'' என்றான்.

ஸ்டெப்னியை மாட்டி ஸ்க்ருவைத் திருகிக் கொண்டிருக்கிறான். மாடிக்குப் போனவள் திரும்பி வருகிறாள். மை காட்....

''ஒருத்தருமே ஃபோனே எடுக்க மாட்டேன் என்கிறார்கள் ஸார்.''

''பரவாயில்லே..... நானே (அழுத்தலாக) கழற்றி விட்டேன்....''

டிக்கியை மூடினான் ரகுவின் டிரைவர்.

வண்டியில் உட்கார்ந்து கதவைத் திறந்து விட்டேன். தோள்பட்டை இரண்டும் வலித்தது.

''அசாத்திய வெய்யல்....''

''பாவம் ஸார்.... யூ ஆர் டயர்ட்.''

''நோ....நோ.... இதென்ன? விம்பிள்... டன்...''

இரண்டு முறை இருமினேன். 'ஸ்டீயரிங் வீலிலிருந்து கையை எடுத்து இரண்டு முறை சொடுக்குப் போட்டுக் கொண்டேன்.

''என்னைக் கேட்டா நீங்க வண்டி கூட ஓட்டக் கூடாது. டிரைவர் ஒத்தனை வச்சுக்கணும்பேன்.''

டிரைவர் வைத்துக் கொள்ளாததன் 'காரணம் புரியாமல் என்ன ''காதல்'' புரிகிறாள் இவள்!

''வச்சுக்கலாம்.... வச்சுக்கலாம்....''

''செய்யுங்களேன். பணம் இல்லையா? தலையெழுத்தா? டயர் மாத்தறது எல்லாம் அவன் கவனிச்சுப்பானேல்லியோ? ''யங்கா'' இருந்தா பரவாயில்லே. நீங்களே செய்யலாம். சிரமம் தெரியாது.....''

பேசிக் கொண்டே போனாள்

''எங்க அண்ணா ஒருத்தன் இப்படித்தான் முடியாதபோது உடம்பை வீம்புக்கு அலட்டிண்டு சமுத்திரத்தில் நீஞ்சப் போனான். கை ஓஞ்சு போயே போயிட்டான். வயசுக்கு மீறி ஒரு காரியமும் செய்யப்படாது. அவ்வளவுதான் நான் சொல்லுவேன்.''

அரகஜா கடையும் செருப்புக் கடையும் வந்து விட்டன.

கதவைத் திறந்து விடுவானேன்? தானே இறங்கிக் கொள்ளட்டும்.

ச்சீட்!

அழகா இது? அவலட்சணம்!.....

முல்லா நசுருதீனிடம் பக்கத்து வீட்டுக்காரன் வந்து, அவருடைய கழுதையை இரவல் கேட்டான்.

''அது இங்கே இல்லையே'' என்று கையை விரித்தார் நசுருதீன். அதே சமயத்தில் அவருடைய கழுதை வீட்டின் கொல்லைப் புறத்திலிருந்து காள் காள் என்று கத்தியது.

''கழுதை இல்லே என்று சொன்னீர்களே அது உங்கள் வீட்டுக் கொல்லையிலிருந்து கத்துகிறதே!'' என்றான் பக்கத்து வீட்டுக்காரன்.

''தாடியெல்லாம் நரைத்துப்போன என் சொல்லை நம்பாமல் ஒரு கழுதையின் குரலை நம்புகிறாயே'' என்றார் நசுருதீன்.

- பிரியா பாலு



10

ராகவன் படுக்கையில் விழுந்து விளையாட்டுப் போல ஒரு வாரம் ஓடிவிட்டது. சாதாரணமாக அவர் எப்பொழுதும் யாருடனும் அதிகம் பேசுபவரல்ல. அவசியம் என்று வந்தால்தான் பேசுவார். அதுவும் அளந்து இரண்டொரு வார்த்தைகள்தான். அப்பொழுது வீட்டில் உள்ளவர்களுக்கு அது ஒன்றும் அசாதாரணமாகத் தோன்றியிருக்கவில்லை. ஆனால் இப்போது ஒரு வார்த்தைகூடப் பேச முடியாமல் அவர் படுத்திருக்கும்போது அந்தக் கன்றுவியைப் பார்த்துச் சகித்துக் கொள்வதுதான் ரொம்பவும் நெஞ்சைப் பிசைகிற மாதிரி இருந்தது,

ரவி அவர் அருகில் ஒரு ''ஸ்க்ரிப்ளிங் பேட்'' மற்றும் ஒரு பேனு வைத்திருந்தான். சைகைகளால் சொல்ல முடியாதவைகளை அவர் அந்த பேடில் எழுதிக் காண்பிப்பதற்காக அந்த ஏற்பாடு. நல்ல வேளையாக வலது கை சுவாதீனம் இழக்காமல் இருந்ததால் இந்த ஏற்பாடு சாத்தியமாயிற்று.

ரவி தினமும் இரவில் எட்டு மணிக்குப் பிறகு ஒரு ,மணி நேரமோ ஒன்றரை மணி நேரமோ தகப்பனருக்குப் பக்கத்தில் கட்டிலின் மீதே அவருடன் ஒட்டியபடி உட்கார்ந்து கொண்டு அவருடன் ஏதாவது பேசிக் கொண்டிருக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். அதனல் அவருக்கு மனத்துக்கு எவ்வளவோ நிம்மதியும் சந்தோஷமும் ஏற்படுவதாக ராகவன் எழுதிக் காட்டினர்.

வழக்கம்போல் அன்றும் ரவி தகப்பனரின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டதும் ராகவன் தான் ஏற்கனவே எழுதி வைத்திருந்ததை அவனிடம் எடுத்துக் காட்டினர்.

''ரவி, இப்பொழுது எனக்கு வந்திருக்கும் இந்த நோயினுல் என் உயிருக்கு ஆபத்தில்லை என்று டாக்டர் சொல்வது உண்மையாக இருக்கலாம். ஆனல் என் மனத்திற்குள் ஏதோ ஓர் அச்சம் தோன்றி விட்டது.



இரக்கமற்ற இரவுகள்

ஹேமா ஆனந்ததீர்த்தன்



நான் இனி ரொம்ப நாள் வாழ்ந்திருக்க மாட்டேன் என்பதுதான் அந்தப் பயம். அப்படி எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் இந்தக் குடும்பத்தின் பொறுப்பு முழுவதும் உன் தலையில் விழும். நீ அதைப் பொறுப்புடன் நிறைவேற்றுவாய் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இருந்தாலும் உன்னிடத்தில் ஒரு வாக்கு மட்டும் நான் கேட்கிறேன். உமா, உஷா இவர்கள் இரண்டு பேருடைய கல்யாணத்தையும் முடிக்கிற வரையில் நீ கல்யாணம் செய்து கொள்ளாதே. உனக்கென்று ஒரு குடும்பம் ஏற்பட்டு விட்டால் பிறகு இந்தக் குடும்பத்தில் உன் சிரத்தை குறைவதற்குப் பல வாய்ப்புக்கள் உண்டு. இது உன்மேல் நம்பிக்கை இல்லாமல் நான் சொல்வதல்ல. உலக அநுபவம் உள்ளவன் என்கிற முறையில் பல இடங்களில் நேரில் பல விஷயங்களைப் பார்த்தவனுதலால் சொல்கிறேன்.''

இதைப் படித்ததும் ரவிக்குக் கண்கள் கலங்கி விட்டன.

தகப்பனுரின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு, ''இதை நீங்கள் எனக்குச் சொல்லணுமாப்பா? நீங்க சொல்லாமலே இது என் கடமையாச்சே. கண்டிப்பா உங்க இஷ்டப்படியே நடப்பேன். ஆனு, நீங்க பயப்படற மாதிரி உங்களுக்கு ஒண்ணும் ஆகாது. உங்க கண்ணெதிர்க்கவே அவா ரெண்டு பேரோட கல்யாணத்தையும் நடத்தி, உங்க ஆசீர்வாதத்தை வாங்கிக்கும்படியா செய்யறேன், பாருங்கோ'' என்று சொன்னுன்.

ராகவனின் கண்களில் நன்றி உணர்ச்சியாலோ அன்பாலோ, துயரத்தாலோ கண்ணீர் மளமளவென்று பெருகியது. ரவி அதைத் துடைத்துவிட்டு வேறு விஷயங்களைப் பற்றிப் பேசி அவர் மனத்தைத் திசை திருப்ப முயன்முன்.

அன்று வழக்கத்தை விட அதிக நேரம் தகப்பனுரின் அருகில் உட்கார்ந்திருந்துவிட்டுப் பத்தரை மணிக்கு மேல்தான் ரவி படுக்கப் போனுன்.

• • •

''ரவி, எழுந்திரு. உங்கப்பாவை வந்து பாரு'' என்று ஜானகி மகனை உலுப்பி எழுப்பினுள். ரவி அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருந்தான்.

''என்னம்மா, என்ன ஆச்சு?''

''தெரியலையேடா, நீ வந்து பாரு. மோசம் பண்ணிட்டாரோன்னு பயமாயிருக்குடா'' என்று சொல்லும்போதே ஜானகி அழுதுவிட்டாள்.

ரவி பரபரப்புடன் படுக்கையை விட்டு எழுந்திருந்து ஓட்டமாக ஓடித் தகப்பனுரின் கட்டிலை அடைந்தான்.

''அப்பா'' என்று அவரது கையைத் தொட்டான். கை ஜில்லென்றிருப்பது போல் இருந்தது. அவனது இதயம் படபடவென வேகமாக அடித்துக் கொள்ளத் தொடங்கியது.

''அப்பா, அப்பா'' என்று இரண்டு மூன்று முறை கூவியபடி அவரை உலுக்கினுன். அவர் கண்களைத் திறக்கவில்லை. நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். கையைப் போலவே அதுவும் ஜில்லிட்டிருந்தது. மூக்கிற்குப் பக்கத்தில் கையை வைத்துப் பார்த்தான். மூச்சுக் காற்று கையில் படவில்லை குனிந்து அவர் மார்பின் மீது காதை

வைத்துப் பார்த்தான். அதே சமயத்தில் அவரது மணிக்கட்டையும் பிடித்து நாடித் துடிப்பையும் அறிய முற்பட்டான். இதயத் துடிப்பு நின்று போய்விட்ட அந்த உடலில் நாடித் துடிப்பு எங்கிருந்து வரும்?

பண்டாபீசிலே ஐந்து மணி அடிப்பது கேட்டது.

''டாக்டருக்குப் போன் பண்ணிக் கூப்பிடட்டுமா?'' என்று தாயாரைக் கேட்கும் போதே ரவியின் கண்களிலிருந்து மளமள வென்று கண்ணீர் பெருகி விட்டது.

''இனிமே டாக்டர் வந்து என்ன பண்ணப் போறார்? அவர் கதை முடிஞ்சு போச்சு.'' என்று கூறி ஜானகி குரலெடுத்து அழத் தொடங்கி விட்டாள்.

தந்தையின் திடீர் மரணம் தாயின் நெஞ்சைப் பிழியும் அழுகை இவை இரண்டும் ரவியை உலுக்கி விட்டன.

''அப்பா! அப்பா! எங்களை யெல்லாம் விட்டுட்டுப் போயிட்டீங்களா அப்பா!'' என்று ராகவனின் உடல் மீது விழுந்து கதறத் தொடங்கினான்.

அழுகைச் சத்தத்தைக் கேட்டு விழித்துக் கொண்ட உமா, உஷா, பலராமன் மூவரும் பதை பதைப்போடு வாரிச் சுருட்டிக்கொண்டு அங்கே ஓடி வந்தனர்.

''அப்பா போயிட்டார்டி உமா'' என்று கூறி ஜானகி உமாவைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

உஷா கட்டிலின் அருகில் வந்து ரவியின் தோள் மீது கையைப் போட்டு, ''அழாதே அண்ணா எனக்குப் பயமா யிருக்கு'' என்று தான் அழுதாள்.

''அழ விட்டுட்டுத்தானே உஷா அப்பா போயிட்டார். எப்படி அழாமல் இருக்க முடியும்?'' என்று உஷாவின் கைகளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு ரவி கதறினான்.


பலராமன் மௌனமாகக் கட்டிலின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு சில விநாடிகள் தமது மகனின் உயிரற்ற உடலைப் பார்த்தார். பிறகு விம்மத் தொடங்கினார்.

வகிடு: ''தலை நகரின் ராஜபாட்டை!''

கொட்டாவி: ''தூக்க வேந்தன் வருவதை அறிவிக்கும் வாயிற் காவலன்.''

பதவி ஆசை: ''இந்திய நாட்டுத் தூணிலும் இருப்பது துரும்பிலும் இருப்பது...''

-டாக்டர் இரா. மோகனின் ''சின்னச் சின்ன இழை'' தகவல்: நெல்லை ந. சொக்கலிங்கம்



''ராகவா, இதென்னடா கன்றாவி? எண்பது வயதுக் கிழம் நான் குண்டுக் கல்லாட்டம் உட்கார்ந்திருக்கேன். என் கண்ணெதிரே நீ போயிட்டியேடா? இந்தக் கன்றாவியைப் பார்க்கறதுக்காடா நான் இத்தனை நாள் உயிரை வைச்சுண்டிருந்தேன்? உங்கம்மா போனப்பவே நானும் போயிருந்தா இந்தக் கஷ்டத்தை யெல்லாம் என் கண்ணாலெ பார்த்திருக்காம இருந்திருக்கலாமே?'' என்று கூறிப் பட்பட்டென்று இரு கைகளாலும் தம் தலையில் அடித்துக் கொள்ளத் தொடங்கினார்.

ரவியும் உஷாவும் எழுந்து வந்து அவரது கைகளை ஆளுக்கு ஒருவராகப் பிடித்துக் கொண்டு விட்டனர். ''வேண்டாம் தாத்தா வேண்டாம் தாத்தா'' என்று கெஞ்சினர்.

''தூக்கத்திலேயே பிராணன் போயிருக்கு. எப்பப் போச்சோ என்னமோ? புண்ணியாத்மா. இந்த மாதிரி கைகால் சுவாதீனமில்லாம, பேச முடியாம ரொம்ப நாள் கஷ்டப்படாமப் போயிட்டார்'' என்றாள் ஜானகி மூக்கைப் புடவை நுனியால் துடைத்தபடி.

''ஸடன் ஹார்ட் பெயிலியர் போலிருக்கு'' என்றார் பலராமன். தொடர்ந்து ஜானகியைப் பார்த்து, ''நீ எப்போ கவனிச்சே? ஏன் அவனைப் பார்க்கணும்னு தோணித்து உனக்கு?'' என்று கேட்டார்.

''என்னமோ திடீர்னு கண்ணை முழிச்சுண்டேன். மணியைப் பார்த்தேன். நாலே முக்கால் ஆகியிருந்தது. அவர் தூங்கறாரா, முழிச்சுண்டிருக்காரா பார்க்கலாம்னு தோணித்து. பார்த்தேன். முழிச்சுண்டிருக்கலே. தூங்கற மாதிரியும் இருக்கலே. அந்த முக பாவம். 'பக்'குன்னுது. என்னமோ பயம் தோணித்து. தொட்டுப் பார்த்தேன். பயம் ஜாஸ்தியாச்சு. உடனே ரவியை எழுப்பிப் பார்க்கச் சொன்னேன்'' என்று ஜானகி விவரித்தாள்.

இதற்குள்ளாக அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் அழுகைச் சத்தத்தைக் கேட்டு என்னவென்று பார்க்க வந்து விட்டார்கள். விஷயத்தைக் கேள்விப்பட்டு அவர்களுக்கும் ஆச்சரியம், வருத்தம். ரொம்ப ''அன் எக்ஸ்பெக்டடா'' இருக்கே என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

பிறகு மேலே ஆக வேண்டிய காரியங்களைப் பற்றிய கவலை தொடங்கியது. ஒவ்வொருவர் ஒவ்வொரு வேலையைத் தாமாகவே ஏற்றுக்கொண்டு செயல்படத் தொடங்கினார்கள்.

''பாலு வரணுமோல்லியோ? அவன் தானே காரியம் எல்லாம் செய்யணும்?'' என்று வந்திருந்தவர்களில் ஒருவர் தயங்கியபடியே கேட்டார்.

''அவன்தான் வரணும் செய்யணும். அவனை எங்கேன்னு தேடிப் பிடிக்கிறது இப்போ?'' என்று பலராமன் சந்தேகத்தை வெளிப்படுத்தினார்.

''நான் போய்க் கூட்டிண்டு வரேன். எனக்குத் தெரியும். எழும்பூர்லே இருக்கான்'' என்று முன்வந்தான் மூன்றாவது வீட்டிலிருந்த சோமு என்னும் இளைஞன்.

''எப்படிப் போகப் போறே? பஸ்ஸுலே யெல்லாம் போனா நேரமாயிடும். நான் ஸ்கூட்டர் எடுத்துண்டு வரேன். போகலாம்'' என்று எதிர் வீட்டு நாகராஜன் சொன்னான்.

ரவி அவர்கள் இரண்டு பேருக்கும் ''தாங்க்ஸ்'' சொன்னான்.

சோமு, நாகராஜன் ரெண்டு பேரும் முக்கால் மணி நேரத்தில் திரும்பி வந்தார்கள். ஆனால் பாலு அவர்களுடன் வரவில்லை.

''வரமாட்டேன்னுட்டான்'' என்றான் சோமு.

''வரமாட்டேங்கறானா? இப்படி சமாசாரம்னு சொல்லிக் கூடவா வரமாட்டேன்னுட்டான்?'' என்று பலராமன் படபடப்புடன் கேட்டார்.

''வரமாட்டேன்னு சாதாரணமாச் சொன்னாக்கூடப் பரவாயில்லையே? வாய்க்கு வந்தபடி பேசறான்'' என்றான் நாகராஜன்.

ரவிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த விஷயம் நினைவுக்கு வந்தது. அது அவனுக்கு மட்டும்தான் தெரியும். வேறு யாருக்கும் தெரியாது.

ராகவன் அன்று ரவி ஆபீஸ் புறப்படுவதற்கு முன்பு அவனிடம் எழுதிக் காட்டினார். ''எனக்குப் பாலுவைப் பார்க்கணும் போல இருக்கிறது. எப்படியாவது அவனைப் பார்த்துக் கூட்டிக் கொண்டு வா. நான் அவனுக்கு ரொம்பவும் அநியாயம் செய்து விட்டேன் என்று எனக்குத் தோன்றுகிறது. அவனுக்கு நான் செய்த கொடுமைதான் இப்படி என்னைக் கை கால் சுவாதீனம் இல்லாமல் செய்து படுக்கையில் போட்டுவிட்டதோ என்று சில சமயங்களில் எனக்குத் தோன்றுகிறது. அவனைப் பார்த்து அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டால்தான் எனக்கு நிம்மதி கிடைக்கும்'' என்று எழுதியிருந்தார்.

''கண்டிப்பா அவனைப் பார்த்துக் கூட்டிண்டு வரேம்ப்பா. ஆனா, நீங்க அவனுக்கு ஒரு கொடுமையும் செய்யல்லே. அப்படியெல்லாம் நினைச்சு உங்க மனசைக் கஷ்டப்படுத்திக்காதீங்கோ. எல்லாம் அவனாக வரவழைச்சுண்டது. அதுக்கு நீங்க என்ன செய்ய முடியும்?'' என்று தகப்பனாருக்குச் சமாதானம் சொல்லி விட்டு அவர் எழுதியிருந்த அந்தக் கடுதாசித் துண்டைச் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

பாலு எழும்பூரில் எங்கோ அவனுடைய ஒரு நண்பன் வீட்டில் இருக்கிறான் என்பது மட்டும்தான் ரவிக்குத் தெரியும். மற்றபடி விலாசம் ஒன்றும் தெரியாது. அவனுடைய நண்பன் பேர் என்னவென்பது கூட அவனுக்குத் தெரியாது. ராகவன் உடல் நலம் கெட்டுப் படுக்கையில் படுத்த அன்று இரவு கடற் கரையில் போதை வெறி யேறிய நிலையில் பாலுவைப் பார்த்தது தான். அதன் பிறகு பார்க்கவில்லை. அவன் கேட்டிருந்த நூறு ரூபாயில் தான் கொடுத்த இருபது ரூபாய் போக பாக்கி எண்பது ரூபாயை வாங்கிக் கொண்டு போவதற்காக



''நான் எப்ப ஓட்டலுக்குப் போனாலும் ஒரு பொடியனையும் அழைச்சுக் கிட்டுத்தான் போவேன்!''
''எதுக்கு?''
''மாவாட்டும் போது தள்ளிவிட ஒரு ஆள் இருந்தா சௌகரிய மாச்சேன்னு!''
-அ. இராமதாஸ்

மறுநாள் வருவதாகச் சொல்லி யிருந்தவன் மறுநாள் வரவேயில்லை.

இப்போது அவன் எங்கே இருக்கிறான் என்று எப்படிக் கண்டு பிடிப்பது? அவனுடைய விலாசத்தையாவது கேட்டு வாங்கி வைத்துக் கொண்டிருந்தால் தேவலையே, அதுவும் செய்யாமல் போய் விட்டோமே என்று ரவிக்கு வருத்தமாக இருந்தது. அவன் அந்தப் பாக்கிப் பணத்தை வாங்கிக்கொண்டு போவதற்காக வந்தால் கூடத் தேவலையே என்று எண்ணினான்.

இவ்வாறு பாலுவைப் பற்றிய கவலையில் ஆழ்ந்தபடியே பேலன்ஸிங் ரிஜிஸ்டர் கூட்டல் தொகையைப்போட்டபடியால் அது தப்புத் தப்பாக வந்து கொண்டிருந்தது. ''சே'' என்று அலுத்துக் கொண்டு பென்சிலைத் தூற எறிந்துவிட்டுத் தலையை நிமிர்த்திய ரவி, எதிரே பாலு கௌண்டரைத் தாண்டிச் சின்ன மரக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைவதைக் கண்டான். தனது மௌனப் பிரார்த்தனைக்குக் கடவுள் இசைந்துதான் பாலுவை உடனே தன்னெதிரில் வரச் செய்திருக்கிறார் என்று அவனுக்குத் தோன்றியது.

''வா, அண்ணா, உன்னைத்தான் எதிர் பார்த்துக் கொண்டே இருந்தேன்'' என்று ரவி பாலுவை வரவேற்றான்.

''பணம் கொண்டு வந்திருக்கியா? அதை வாங்கிண்டு போகத்தான் வந்தேன். அன்னிக்கு வரேன்னு சொல்லி யிருந்தேனே, வர முடியல்லே'' என்று நேரடியாகப் பணத்தைப் பற்றிப் பாலு கேட்டதும் ரவிக்கு ஆத்திரமாக இருந்தது.

''வா அண்ணா, வெளியில் போய்ப் பேசலாம். இங்கே வேண்டாம்'' என்று பாலுவை அழைத்துக் கொண்டு விசிட்டர்கள் உட்காரும் அறையை நோக்கிச் சென்றான்.

அப்படிப் போகும்போதே ரவியின் மனம் வேகமாக யோசனை செய்யத் தொடங்கியது. பாலு கேட்ட பணம் அவன் சட்டைப் பையில் இருக்கத்தான் இருந்தது. அதைக் கொடுத்துவிட்டு அப்புறம் அவனை வீட்டுக்கு வா என்று கூப்பிட்டால் அவன் மறுத்தாலும் மறுத்து விடலாம். எனவே ஒரு பொய்யைச் சொல்லி, ஒரு தந்திரத்தைச்

செய்து அவனை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்விட வேண்டுமென்று நினைத்தான்.

இருவரும் போய் விசிட்டர்ஸ் அறையில் ஒரு மூலையில் உள்ள சோபாவில் உட்கார்ந்து கொண்டனர்.

"நீ கேட்ட பணத்தை அப்படியே எடுத்து வைச்சிருக்கேன் அண்ணா. இன்னிக்கு நீ வரப்போறது தெரிஞ்சிருந்தா கொண்டு வந்திருப்பேன். வீட்டிலேதான் இருக்கு பணம்" என்றான் ரவி.

"அந்தக் கதை யெல்லாம் வேண்டாம். நான் மறுபடியும் இங்கே வர முடியாது. உன்கிட்டப் பணமில்லாட்டா உன் சிநேகிதன் யார் கிட்டயாவது கேட்டு வாங்கிக் குடு."

"இல்லேண்ணா, நீ மறுபடியும் இங்கே வரவேண்டாம். வீட்டுக்கு வந்தியானாப் போறும்."

"ஓஹோ, டேய் ரவி, உன்னை என்னமோன்னு நினைச்சேன். பலே ஆன்டா நீ. என்னை எப்படியாவது வீட்டுக்கு அழைச்சிண்டு போய் அந்தக் கிழவன் முன்னாலே நிறுத்தறதுக்கு வழியா இது? அந்தப் பாச்சாவெல்லாம் என்கிட்டப் பலிக்காது. நீ ஆயிரம் ரூபா கொடுக்கிறதானாலும் சரி. நான் மறுபடியும் அந்த வீட்டு வாசற்படி ஏற மாட்டேன். அந்தக் கிழவன் மூஞ்சியிலே முழிக்க மாட்டேன்" என்று பாலு ஆத்திரத்துடன் சொன்னான்.

தகப்பனாரைப் பாலு அவமரியாதையாகக் கிழவன், கிழவன் என்று திருப்பித் திருப்பிக் கூறுவதைக் கேட்க ரவியின் மனம் மிகவும் புண்பட்டுப் போய் விட்டது.

"ஏன் அண்ணா. இப்படி யெல்லாம் அப்பாவை மரியாதை இல்லாமல் பேசறே? அது ரொம்பத் தப்பு."

"உன் அட்வைஸ் எனக்கு வேண்டாம்டா. என்னை அவர் நடத்தியது போல உன்னை நடத்தியிருந்தா அப்பத் தெரியும் உனக்கு. அப்பாங்கற மரியாதை எனக்கு எங்கிருந்துடா வரும்? எப்படி வரும்?" என்று பாலு குரலை உயர்த்திக் கத்த ஆரம்பித்தான்.

"கத்தாதே அண்ணா. அப்பாவுக்கு உன் மேல் எவ்வளவு அன்பு இருக்குங்கறது உனக்குத் தெரியாது. இதைப் பாரு. அப்பப் புரிஞ்சுக்குவே" என்று கூறித் தன் சட்டைப் பையில் வைத்திருந்த அப்பா எழுதிக் கொடுத்த காகிதத் துண்டை எடுத்து நீட்டினான்.

உலகத்திலேயே மிகப் பெரிய மனிதன் யார்? ஒரு வேர்க்கடலையைச் சாப்பிட்டு விட்டு அத்துடன் நிறுத்திக் கொள்ளும் மனோபலம் உள்ளவன்!

-பாலக்

-பிரியா பாலு



"என்னது?" என்று கேட்டபடி அலட்சியமாக இடது கையில் அதை வாங்கிப் படித்துப் பார்த்தான். படித்து முடித்தவுடன் ஏளனமாகச் சிரித்துக் கொண்டே அதைக் கிழித்துக் கசக்கி ரவியின் சட்டைப் பைக்குள்ளேயே போட்டான்.

"இப்பத்தான் புத்தி வந்ததோ, சாகறப்போ? மன்னிப்புக் கேக்கப் போறாராமா என்கிட்ட? சும்மா வாயாலே கேக்கப் போறாரா, இல்லே காலிலே விழுந்து மன்னிப்புக் கேக்கப் போறாரா?"

அவனை அறைந்துவிடலாம் போல ரவிக்கு ஆத்திரமாக வந்தது. ஆனால் தன் ஆத்திரத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டான். ஆத்திரப்பட்டு விட்டால் அவனை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போக முடியாமல் போய்விடுமே!

"நீ இப்படி யெல்லாம் பேசறது கொஞ்சம் கூடச் சரியில்லே அண்ணா. அப்புறம் ஒரு நாள் நீயே இதற்காக வருத்தப்பட நேரிடும்"

"அப்படி நேரிட்டால் அப்ப உன்கிட்ட அட்வைஸ் கேட்க வர்றேன். வண்டி வண்டியா அட்வைஸ் குடு. வாங்கிக்கறேன். இப்ப எனக்கு வேண்டியது அட்வைஸ் அல்ல. பணம். அதைக் கொடுக்கப் போறியா இல்லையா அதைச் சொல்லு."

"நீ இவ்வளவு கண்டிப்பா பேசினா நானும் கண்டிப்பா சொல்றேன். நீ வீட்டுக்கு வந்து அப்பாவோட சகஜமாப் பேசினாத்தான் பணம், இல்லேன்னா கிடையாது" என்றான் ரவி.

"அப்படியா? கண்டிஷன் போடறியா? வீட்டுக்கு வந்தா மாத்திரம் போறாது. அப்பாவோட — சே, அந்தக் கிழவனோட — சகஜமாக வேறே பேசணுமா? டேய், சொல்றேன் கேட்டுக்கடா. உன் பணத்தைச் சாக்கடையில் எறிவேன். அந்த வீட்டுக்கு நான் இப்பவும் வரமாட்டேன். நாளைக்கு அந்தக் கிழவன் செத்தா அவனுக்குக் கொள்ளி போடறதுக்கும் வர மாட்டேன்" என்று கூறிவிட்டு விடுவிடுவென்று நடந்தான்.

ரவி இந்தச் சம்பவத்தை அப்பாவிடம் மாத்திரம் அல்ல, யாரிடமும் சொல்லியிருக்கவில்லை. தன் மனத்திற்குள்ளேயே வைத்துப் புழுங்கிக் கொண்டிருந்தான்.

இப்போது அவனுக்கு இது ஞாபகம் வந்தது. 'அவன் வாயில் என்ன சனி உட்கார்ந்திருந்ததோ. அவன் சொன்னபடியே அப்பாவுக்குக் கொள்ளி போட வேண்டிய நிலைமையும் வந்து விட்டது. அவனும் தான் சொன்னபடியே கொள்ளி போடக் கூட வரமாட்டேன் என்று மறுத்து விட்டான்' என்று நினைத்துக் கொண்டான்.

"நான் வேணுமானால் போய்க் கூப்பிட்டுப் பார்க்கட்டுமா தாத்தா?" என்று பலராமனைப் பார்த்துக் கேட்டான்.

"வேண்டாண்டா. உங்கப்பாவுக்கு அதுக்குப் பிராப்தம் இல்லே. அந்தப் படுவாவுக்கும் அதுக்குக் கொடுத்து வைக்கல்லே. நீயே எல்லாத்தையும் செய். போ" என்று பலராமன் கண்களைத் துடைத்தபடியே சொல்லி விட்டார்.

ரவி புரோகிதர்களின் சொற்படி குளிப்பதற்காகச் சென்றான். (தொடரும்)


அழகும் தரமும் இணைந்த அரிய படைப்பு!
புதிய பிலிப்ஸ் வாலியண்ட்®
4-பாண்டு டிரான்ஸிஸ்டர்களில் சிறந்தது
ஒலித் தரமும் உயர்ந்தது!
அரிய அமசங்கள்:
ஒலி, மற்றும் ஓசை நயத்திற்கென அழகிய கண்ட்ரோல்.
வசதியான பாண்ட் தேர்வுக்கென. டீலக்ஸ் க்ரோம் புஷ் பட்டன்கள்.
உருண்டையான குமிழ்.
பாட்டரியிலிருந்து மெயின்ஸுக்கு மாற்றும் வசதி
ரூ.600/-*
பிலிப்ஸ்
*சில்லறை விற்பனை உச்சவிலை, எக்ஸைஸ் வரி உள்ளிட்டது.
மாநில விற்பனை வரி மேலும் இதர தல வரிகள் தனி.
CASPR-727-172 TM

ஹரி ஓம்



நுங்கம்பாக்கம் கல்லூரிச் சாலையில் திரு டி. வி. பி. நம்பியாரின் இல்லம்...

முன் அறையில் சுமார் அறுபது பேர் — இளைஞர்களும் பெரியவர்களும் குழந்தைகளுமாக, சுவாமி சின்மயாநந்தாவின் தரிசனத்துக்காகக் காத்திருக்கிறார்கள். தினமும் காலையில் ஒரு மணி நேரம் ''ஸத் சங்கம்''. மாலையிலும் இதே போல் உண்டு. மனம் விட்டு ஸ்வாமிஜியுடன் எல்லோரும் உரையாடலாம். தங்கள் சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம்.

ஸ்வாமிஜி அந்த அறைக்குள் நுழைகிறார். ''ஹரி ஓம்'' கோஷம் கம்பீரமாக எழுந்து எதிரொலிக்கிறது. புன்னகையின் மறு பெயர்தான் ஸ்வாமி சின்மயாநந்தாவா? அதுவும் சின்னக் குழந்தைகளைக் கண்டால் என்னமாய் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கிறார்!

ஆயிரம் மலர்கள் பூத்த தடாகம் அழகாய் இருக்கும் என்று கவிஞர்கள் வர்ணிப்பார்கள். இங்கே அத்தனை முகங்களும் மகிழ்ச்சிப் பெருக்கில் பூத்துப் புன்னகைக்கும்போது எவ்வளவு அற்புதமாக இருக்கிறது! ஸ்வாமிஜி தம்முடைய இருக்கையில் அமர்ந்து கொள்கிறார்.

கைவிரலைச் சொடுக்கி, முன்னே அமர்ந்திருப்பவர்களைப் பார்த்து ''கமான், க்விக்'' என்று ஸத் சங்கத்துக்கு அழைக்கும்போது அனைவரின் முகமும் பளிச்சிடுகிறது. ஸ்வாமிஜியுடன் ஏதாவது பேச வேண்டும் என்று ஒவ்வொருவருமே துடிப்பது தெரிகிறது.

ஒரு குழந்தை ஸ்வாமிஜி முன் அழகாய்த் தலையைச் சாய்த்து வணங்க முயலும்போது, ''நோ....நோ....'' என்று சொல்லிக் கொண்டே அந்தக் குழந்தையை அப்படியே தூக்கி மடியில் இருத்திக் கொள்கிறார். குழந்தையோடு குழந்தையாக ஒன்றுபடுகிறார்.

ஓர் இளைஞர் கேள்வி கேட்கிறார்: ''பிராமணன் என்றும் பொருள் என்ன?''

பொருளைச் சொல்லிவிட்டு ஸ்வாமிஜி மேலே தொடர்கிறார்: ''டாக்டரின் மகனாய்ப் பிறந்த ஒரே காரணத்தால் மட்டும் ஒருவன் டாக்டராகி விட முடியாது. இஞ்சினியரின் மகனாய்ப் பிறந்த ஒரே காரணம் மட்டும் அவனை இஞ்சினியர் ஆக்கிவிட முடியாது. அதுபோலத்தான் இதுவும்''

ஒரு பெரியவர் பாடலாமா என்று கேட்கிறார். உற்சாகமாகத் தலையை அசைத்து ஸ்வாமிஜி அனுமதித்ததும் அவர் பாடுகிறார். ஆங்கிலப் பாடல்.

''இது ராக் அண்டுரோல் இல்லே?'' என்று கேட்டுக் கொண்டே உட்கார்ந்தவாறே கைகளையும் உடம்பையும் அசைத்துச் சிறு குழந்தை மாதிரி ஸ்வாமிஜி ஆடுகிறார். சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்குமே மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது.

ஸ்வாமிஜி சொற்பொழிவின்போது, ''பவர்ர்ர்ர்'', 'கான்கர்ர்ர்ர்' என்கிறமாதிரி 'ஆர்' எழுத்துக்கு அதிக அழுத்தம் தந்து பேசுவதைக் கவனித்த ஓர் இளைஞர் அதுபற்றிக் கேட்கிறார்.

''அப்படிச் சொன்னால் தான் அழுத்தம் கிடைக்கிறது. நெஞ்சில் பதிகிறது'' என்று சொல்லிவிட்டு மலையாளத்தில் ஆறு என்பதை 'ஆர்று' என்கிற மாதிரி அழுத்திச் சொல்வதையும் நினைவு படுத்துகிறார்.

ஒரு சின்னக் குழந்தை ஸ்வாமிஜியின் முன்னால் வந்து, ''ஸ்வாமிஜி'' என்று என்னவோ சொல்ல வாயெடுக்கிறது. ''நோ... நோ.... இது சின்....மயா.....'' என்று அழுத்தமாய்ச் சொல்லித் திருத்தும் போது வியப்பில் நெகிழ்கிறோம்.

கல்கியின் சார்பாகப் பேட்டிக்கு ஸ்வாமிஜியின் அனுமதி கிடைக்கிறது. பொதுப்படையான சில கேள்விகளைக் கேட்கிறோம். அவர்கள் அருளிய பதில்கள் சிந்தனையைத் தூண்டுபவை.

கேள்வி: ஆன்மீகம், அரசியல், பொருளாதாரம் என்று எல்லா மட்டத்திலும் நம்பிக்கை இழந்த மாதிரி ஒரு நிலை தோன்றுகிறதே. உண்மையிலேயே அப்படி ஒரு மோசமான சூழல் இருப்பதாய்க் கருதுகிறீர்களா?

ஸ்வாமிஜி: வாஸ்தவம்தான். பொதுவாக அப்படியொரு நம்பிக்கையின்மையும் விரக்தியும் நிலவுகிறது. தங்களுடைய குறிக்கோள்கள் மதிக்கப்படுவதில்லை என்கிற உணர்வு காரணமாய்த் தீவிரமான சமுதாயப் பணியில் ஈடுபடத் தயக்கம் ஏற்படுகிறது. ஈடுபட மறுக்கிறார்கள். நிலையான அரசாங்கங்கள் அமையாததற்கு அரசியல் சரிக்கட்டல்கள் (adjustments) ஒரு முக்கியமான காரணமாய் உள்ளது. சிந்திக்க வேண்டிய அம்சம்தான். அதிர்ஷ்ட வசமாய்ப் பெரும்பான்மையினர் கல்வி அறிவற்றவர்களாய் உள்ளனர். ஆகவே இந்த விதமான நம்பிக்கை தளர்ந்த விரக்தி நிலையைப் படித்த மக்கள் உணர்கிற அளவுக்குத் தீவிரமாய் மற்றவர்களால் அறிய முடியவில்லை.

கேள்வி: அரசியலாகட்டும், ஆன்மீகத் துறையாகட்டும். உபதேசம் செய்கிறவர்கள் தங்கள் தனி வாழ்க்கையில் அவற்றுக்கு மாறுபட்ட இயல்புடையவர்களாய் இருப்பது நல்லதில்லை என்கிறோம். இதை எப்படிச் சீர்செய்யலாம் என்று கூற முடியுமா?

ஸ்வாமிஜி: இது இயற்கையான ஒரு பலவீனம்தான். தார்மீகக் கொள்கைகள் என்பவை நிலையான மதிப்புடையவை. இவை நமது கல்வி முறையில் அலட்சியப்படுத்தப் பட்டுவிட்டன. இதனால் நம் பண்பாட்டுக்கே பெருத்த சீர்கேடு விளையக் கூடும். நம்முடைய கடமைகளை நிறைவேற்றுகிற போது, நல்லொழுக்கம், உற்சாகம் இவற்றின் உயரிய நிலைகளையும், பாதுகாக்க வேண்டும்: 'டீம் ஒர்க்' — என்னும் ஒன்றிணைந்து

செயலாற்றும் உணர்ச்சியைத் துடிப்போடு உருவாக்க வேண்டும். விட்டுக் கொடுக்கும் சுபாவமுடையவர்களாய் ஒவ்வொருவரும் விளங்கினாலே இது சாத்தியமாகும். மக்களுக்கு இது போன்ற உயரிய குறிக்கோளை யாரும் எடுத்துக் காட்டுவதே இல்லை. கடமைகளுக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்ளும்போது, அதில் மாறுபாடில்லாதவர்களாய் இயங்க வேண்டும். ஆனால் சுயநல உணர்வாலும், புலனுணர்வாலுமே ஆட்டிப் படைக்கப்படுகிறார்கள். நம்முடைய சமுதாயத்தில் எல்லா மட்டத்திலும், மேலே இருந்து அடித்தளம் வரை இந்த மனப்பான்மைதான் உள்ளது. ஆன்மீகத் துறையில் பணியாற்றுகிறவர்களையும் இது விட்டுவைக்கவில்லை என்பது வருத்தம் தரக்கூடிய உண்மைதான். ஆயினும் இந்த மேக மூட்டத்திலிருந்து விடுபட்டு நாம் வெளியே வர முடியும் என்று நான் நம்புகிறேன். ஆன்மீகத் துறையில் உள்ள தூய்மையானவர்களால் போலித்தனமில்லாதவர்களால்தான் இது சாத்தியமாகும். இவர்கள் அனைவரையுமே ஏராளமானவர்கள் பின்பற்றுகின்றனர் என்பதும் மகிழ்ச்சி தரக் கூடியதே.

கேள்வி: 'சத்ய மேவ ஜயதே' என்பது நம்முடைய கோஷமாக இருக்கிறது. ஆனால் ஆளுக்கு ஆள் நேரத்துக்கு நேரம் 'உண்மை' என்பது மாற்றிச் சொல்லப்படுகிறது. நேற்று வரை ஒழுக்கக் குறைவானவனுச் சொல்லப் பட்டவனை இன்று யோக்கியன் என்றும், உத்தமன் என்று சொல்லப் பட்டவனை ஊழல் பேர்வழி என்றும் பேசக் கேட்கிறோம். எது உண்மை, எப்போது சொல்வது உண்மை என்று புரியாமல் பாமரன் குழம்பிப் போகிறான். இந்நிலையில் ஸ்வாமிஜியின் வழி காட்டல் என்ன?

ஸ்வாமிஜி: அரசியல் நிலையில் சந்தர்ப்பவாதம் ஒன்றுதான் இப்போதைய நியாயமாக உள்ளது. ஒரு தனிப் பட்டமனிதனைப் பீடத்துக்கு உயர்த்தவும், அவனைப் பீடத்திலிருந்து அப்படியே கீழே வீழ்த்திச் சிதறடிக்கவும் இதனால் முடிகிறது. இதனால், ஒரு தனி மனிதனின் பூரணமான மதிப்பு, அறிவு, திறமை, குணப் பாங்கு இவற்றுக்கெல்லாம் மதிப்பில்லாமல் போய்விடுகிறது. வயது வந்தோர் வாக்குரிமை என்னும் பெருமைக்குச் சரிவரத் தயாரிக்கப்படாத மக்களை உடைய நாட்டில் இது இயல்பானதே என்று நான் கருதுகிறேன். வாக்காளருக்கு ஆராய்ந்தறியும் திறமையோ, உண்மையிலிருந்து போலித் தன்மையை உணர்ந்து கொள்ளும் பக்குவமோ இருப்பதில்லை. தானே உணர்ந்து தகுதியுள்ளவர்களுக்குச் சுதந்திரமாய் வாக்களிக்கும் தன்மையும் இல்லை. இங்கிலாந்து நாட்டின் ஆரம்ப கால ஜனநாயகத்தையே இது எனக்கு நினைவூட்டுகிறது. வெகு சிலரின் ஆதிக்கத்திலேயே பெருவாரியான தொகுதிகள் இருந்த காலம் அது. நாட்டு மக்கள் அனைவரும் நல்ல கல்வி அறிவு பெற்றுப் பொருளாதார அடிப்படையில் மேம்பாடு பெற்று மன முதிர்ச்சி அடையும்போது இந்த நிலை நிச்சயம் சீரடையும்.

பேட்டி : சுப்ரபாலன்

படம் : உத்ரா

(இதனுடைய தொடர்ச்சி 29-6-80 இதழில்)

ஹரி ஓம்



"முரளி, நேற்று எம்ப்ளாய்மெண்ட் ஆபிசுக்குப் போனாயே, ஆபிசரைப் பார்த்தாயா?"

"ஓ, பார்த்தேனே. ஆனால் நான் ரிஜிஸ்டர் செய்து மூணு வருஷம்தான் ஆகிறதாம். நாலு வருஷம் ஆனவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்களாம். அதனாலே இண்டர்வியூ கார்ட் அனுப்ப இன்னும் எனக்கு சீனியாரிட்டி வரவில்லை என்கிறார்".

"ஹூம்...." நம்பிக்கையற்ற பார்வையால் மகனைத் தூண்டினார், தியாகராஜன். "எப்போது கேட்டாலும் இதே பதிலைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்கிறாய்".

முரளியிடம் மறுமொழி இல்லை. வெற்றுச் சுவரை வெறித்துப் பார்த்தான் அவன்.

தந்தையின் குரல் மீண்டும் வெடித்தது. "உன் கூடப் படித்த எத்தனையோ பேர் இன்று வேலையில் இருக்கிறார்களே. அதாவது உனக்குத் தெரியுமா?"

"தெரியும், அப்பா."

"தெரிந்து என்ன பிரயோசனம்?" என்று ஒரு கேள்விதான் அவர் வாய் விட்டுக் கேட்டது. 'உன்னால் அப்படி முடிய வில்லையே, நீ தண்டச் சோறுதானே' என்ற இரண்டாவது கேள்வி அவரது உஷ்ணப் பார்வையில் எரிந்து கொண்டிருந்தது.

முரளி, தலை குனிந்தான்.

தரையைத் தேய்த்துக் கொண்டு வெளியேறினார், தியாகராஜன்.

இப்படி ஒரு நிலைமை அந்த வீட்டில் சகஜம்.

அதுவும் தேதி இருபதுக்கு மேலாகி, கையில் வறட்சி தாண்டவமாடும்போது முரளி வேலைக்குப் போகாமல் இருக்கிறானே என்ற வருத்தம் ஒரு கோடி பாறாங்கல்லாய்க் கனக்க ஆரம்பித்துவிடும், தியாகராஜனுக்கு. அவரைச் சொல்லியும் குற்றமில்லை. அவருக்கு இரண்டு பெண்கள் கல்யாணத்துக்கு கிரீன் சிக்னல் கேட்டு நிற்கிறார்கள். இன்னொரு மகன் பி.காம் இரண்டாம் ஆண்டு செய்கிறான். முரளிதான் மூத்தவன். பட்டம் பெற்று மூன்று ஆண்டுக்கு மேலாகிறது. இன்னும் மொட்டையாகவே இருக்கிறான்; வேலை கிடைத்தபாடில்லை.

தன் ஒருவன் சம்பாத்யம் கட்டுபடியாகாத கட்டம் வரும்போ



இவனுக்குள்ளே ஒரு சிரிப்பு

தமிழினியன்

அங்கலாய்ப்பில், அக்கறை இன்றி ஊர் சுற்றுகிறானே' என்று வாய் விட்டுத் திட்டி விடுவதும் உண்டு.

"மதன்!"

அலுவலகம் புறப்பட்டுக் கொண்டிருந்த மதனகோபாலை வாசலில் யாரோ அழைத்தார்கள்.

முரளிதான்.

"வா, முரளி, வா" என்று வாய்தான் வரவேற்றதே தவிர, மனம், 'வந்துவிட்டான், ராப்பிச்சைக்காரன்' என்று சபித்தது.

"என்ன விஷயம்" என்றான் மதனகோபால்.

"இருபதுரூபாய் பணம் தேவை!" தொங்கு மீசையைக் கம்பீரமாய் ஒதுக்கி விட்டுக் கொண்டான், முரளி.

"எதற்கு?"

"ஒரு வயசுப் பையன் கிட்டே இதென்ன அசட்டுக் கேள்வி?"

"நான் அசடுதான். விவரம் புரியாமல் கேட்கிறேன், சொல்லு."

"ஷோபா திடீர்னு காலமானதால், மறுபடியும் அவள் நடித்த படத்தைப் பார்க்கணும் என்று ஒரே ஆவலாய் இருக்கிறது. பார்த்தாக வேண்டும். அப்புறம் பெண்களுக்கு மட்டும் என்று கேதாரித்தனமாய் ஒரு இன்ஸ்டிடியூட் இருக்கிறதே, அதற்கு எதிரில் புதுசா ஒரு பீடா ஸ்டால் வந்திருக்கிறது. அங்கே வெறுமனே நின்று கொண்டிருந்தால் கடைக்காரன் கடுகடுப்பான். கிரஷ், சிகரெட், கடலை மிட்டாய் என்று கொறித்துக்கொண்டே கலர் விடு. நாளை மறு நாள் வெள்ளிக் கிழமை. சொல்ல வேண்டியதில்லை. மலை வாசலில் தரிசனம்." 'புரோகிராமை' இல்லை—இருபது ரூபாய்க்கான பட்ஜெட்டை முடித்தான் அவன்.

"கர்மம்" மதனகோபால் நெற்றியில் போட்டுக் கொண்டான். "ஏன்தான் உன் கூட பி.ஏ. படித்தேனோ?"

"அந்த அதிர்ஷ்டம்தாண்டா எனக்கு முன்னே நீ வேலையில் இருக்கிறாய்."

"அதிருக்கட்டும். அடிக்கடி இப்படி வந்து என் கழுத்தை அறுக்கிறாயே, நான் ரூபாய் தரவில்லை என்று வைத்துக்கொள். என்ன பண்ணுவாய்."

"கைக் கடிகாரத்தை அடகு வைப்பேன்."

திடுக்கிட்டான் மதன கோபால். "அவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டாயா?"

"பின்னே என்னடா. நெருக்கடி சமயத்துக்கு உதவும் என்றுதானே அப்பா எனக்குக் கடிகாரம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்."

"அப்படியானால் அதைக் கழற்றிக் கொடு. முதல் தேதி பணம் கொடுத்துவிட்டுத் திருப்பிக் கொள்ளலாம்."

கண நேரம் யோசித்தான் முரளி பிறகு "இதென்ன பிரமாதம். பிடி, கடிகாரம்" என்று கழற்றிக் கொடுத்தான்.

ஆரஞ்சு வர்ணக் கரன்சி கை மாறியது.

சினிமாப் பாடல் ஒன்றை ஹம்மிங் செய்தவாறு வெளியேறினான், முரளி.



நல்லாம் தியாகராஜன் ரொம்பவும் மனம் குமைவார். முரளியைப் பார்த்தால் அவர் மனம் மேலும் குமுறும். கைக்கு உயர்ந்த பிள்ளையை வைத்துக் கொண்டு இப்படி கஷ்டப்பட வேண்டி இருக்கிறதே என்ற

மதன கோபாலின் புருவத்தில் சுருக்கங்கள் முளைத்தன.

முரளியின் கடியாரத்தைக் காரணமின்றி வாங்கவில்லை, அவன். சென்ற தடவை அவன் கடன் வாங்கியபோதே, அவனது அப்பாவின் கவனத்துக்கு அதைக் கொண்டு வர நினைத்தான். பிறகு என்ன தோன்றியதோ, விட்டுவிட்டான்.

ஆனால், இந்தத் தடவை?

முரளியின் செய்கைக்கு வெயிட் கிடைத்து விட்டது. இப்போது சொன்னால் சூடாகவும் இருக்கும். தொந்தரவும் குறையும்.

மதன கோபாலின் அலுவலகத்துக்கு இரண்டு கட்டடம் தள்ளித்தான் பொதுப் பணித்துறை டிவிஷன். அங்கேதானே தியாகராஜன் ஹெட் கிளார்க்காகப் பணி புரிகிறார்.

போனான்.

''இந்தாருங்கள் ஸார் உங்கள் முரளியின் கடிகாரம்'' என்று அவர் மேஜை மீது வைத்தான்.

விக்கித்துப் போனார், தியாகராசன். ''இது உனக்கு எப்படிக் கிடைத்தது?''

மதனகோபால் நடந்ததை விவரித்தான்.

உடம்பில் கொதி நீரைக் கொட்டியது போல இருந்தது, அவருக்கு. அவர் சந்தேகப்பட்டது மாதிரியே ஊதாரித்தனம் செய்கிறான், முரளி. 'அயோக்கிய ராஸ்கல்.'

அப்புறம் அவருக்கு வேலையா ஓடும்?

சிந்தைக்கும் செயலுக்கும் பந்தமில்லாமல் அலுவலக நேரத்தை அர்த்தமின்றிக் கழித்தார் அவர்.



ஒரு சமயம் நசுருதீனின் கழுதை திருட்டுப் போயிற்று. மறுநாள் காலையில் தமது நண்பர்களிடம் இது பற்றித் தெரிவித்தார்.

''நீர் ஏன் கழுதையின் இருப்பிடத்திற்குப் பூட்டுப் போட்டு வைக்கவில்லை'' என்றார் ஒரு நண்பர்.

''திருடன் வந்தபோது நீர் ஏன் எழுந்திருக்கவில்லை'' என்றார் மற்றொருவர். இப்படி ஒருவர் மாற்றி ஒருவர் நசுருதீனைக் குறை சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.

எரிச்சலுற்ற நசுருதீன் சொன்னார்:

''அந்தத் திருடனிடமும் சிறிதளவாவது குற்றம் உண்டு என்பதையாவது ஒப்புக் கொள்கிறீர்களா?''

• பிரியா பாலு

ஐந்து மணி.

புயலாக வீட்டுக்குள் நுழைந்தார், தியாகராஜன். ''எங்கே முரளி. தலைக்குடி மகனும் சுத்த தறுதலை.....''

பதறினாள், லட்சுமி. ''ஏன், என்ன பண்ணினான்?''

''கைக்கடிகாரத்தை அடகு வைத்துக் கடன் வாங்கியிருக்கிறான்; போக்கிரி.''

''அப்படியா.... கொஞ்சம் முன்னாடி கேட்டேன். யாரோ சிநேகிதன் இரவல் வாங்கிக் கொண்டு போனதாகச் சொன்னானே!''

''ஏன் சொல்ல மாட்டான்? எங்கே அந்த அயோக்கியன்?''

''கூப்பிட்டீர்களா அப்பா?'' அறையை விட்டு மிக அமைதியாக வெளி வந்தான் முரளி.

''ஆமாண்டா. தாம்பூலம் வைத்திருக்கிறேன். வா... வந்து வாய் சிவக்கப் போடு''

சொன்னவர்தான்; மறு கணம்—

முரளியின் கன்னத்தில் இடம், வலம் பாராமல், பளார் பளார்.... தீர்த்துக் கட்டினார்.

''வேண்டாம், விடுங்கள். ஏதோ தெரியாமல் பண்ணிவிட்டான். இனி அப்படிச் செய்ய மாட்டான். அடிக்காதீர்கள்'' —கணவனைத் தடுத்தாள் லட்சுமி.

''உடம்பு முற்றினால் ஆயிற்று... அறிவு முற்ற வேண்டாம்? மடப் பயல்.'' மூச்சு இரைத்தது தியாகராஜனுக்கு.

வலி ஒரு புறம், அவமானம் மறுபுறம். அழவும் முடியாமல், அடக்கவும் முடியாமல் கண் கலங்கினான் முரளி.

மறு நாள் காலை.


பூஜை அறையில் கொளுத்தி வைத்த ஊதுவத்தியின் அந்திம நேரப் புகை அடங்கப் போகிறது.

பாண்ட் அணிந்து கொண்டார், தியாகராஜன். தயக்கமுடன் என்னவோ யோசித்தார். சில விநாடிகள் அங்கும் இங்குமாக அலை மோதினார். கடைசியில் சாமி உண்டியலில் இருந்து கொஞ்சம் சில்லறை எடுத்துக் கொண்டார்.

நீளப் பெஞ்சில் தினசரி படித்துக் கொண்டிருந்தான் முரளி. அவன் முகத்தில் நேற்றைய சோகம் இன்னும் பாக்கி இருந்தது. மன ஆறுதலுக்காக ஏதேனும் பேசினால் தேவலாம் என்று நினைத்தார், தியாகராஜன். என்ன இருந்தாலும் அவர் பெற்ற தந்தை இல்லையா?

''முரளி, சாமி உண்டியலில் தேட்டை போட்டு விட்டேன். ஏன் தெரியுமா? பஸ்ஸுக்குச் சில்லறை இல்லை. நூற்றுக்குத் தொண்ணூறு இடங்களில் இப்படித்தான் நடக்கிறது. இது சகஜம். ஆனால் இதை உணரத் தவறுவதுதான் முட்டாள்தனம். பொறுப்பான வயசுக்கு வந்தவன் நீ. யோசித்து நடந்து கொள். நான் வரேன்.''

அப்பா வெளியேறினார்.



லக்மே வதன ரேகா

மினுக்காத மென்வண்ண இயற்கைப் பொலிவுக்கு லக்மே முகப் பவுடர்—இழைக்கிறாள் ரேகா, பட்டுச் சல்லாத் துணிவழியே சலித்தெடுத்த பனி மகரந்தம்: லக்மே முகப்பவுடர்...உறைக்கும் ஸ்டுடியோ விளக்கொளியிலும் மலர்ச்சியோடு ஜொலிக்குது. வெளிப்புற ஷூட்டிங்கா—விரலசைவில் விருக்கென ரேகாவுக்குக் கைகட்டுவது லக்மே காம்பேக்ட், சிங்காரச் சிற்றடக்கச் சிமிழ், நங்கையர் கைப் பைக்குள் நைஸாகப் பொருந்தும். ரேகா முக ராசி வாகாய் உமக்கும் வாய்த்திட, வரவேற்பீர் லக்மே.



லக்மே அல்ட்ரா-சில்க் முகப் பவுடர் மற்றும் லக்மே காம்பேக்ட்

எழிலைப் படைப்போர்—லக்மே

Lakmé

பத்து நிமிடம் கழிந்திருக்கும்.

பிளாஸ்டிக் கூடையுடன் வந்தாள் அம்மா. திரு திருவென மேலும் கீழுமாய்க் கொஞ்ச நேரம் விழித்தாள். பின்னர், அவளும் சாமி உண்டியலிலிருந்து கணிசமான அளவுக்குச் சில்லறைகளை உருவினாள்.

''மோகன்'' என்று கூப்பிட்டாள்.

முரளியின் தம்பி கல்லூரிக் களையுடன் வந்தான்.

''இன்று டிபன் இல்லை. மத்தியானத்துக்கு ஓட்டலில் பார்த்துக்கொள்'' என்று உண்டியல் பணத்தில் ஒரு ரூபாயை அவனிடம் நீட்டினாள்.

கையில் மீதமிருந்த சில்லறையை எண்ணினாள். ''இது போதும். விலை மலிவாய் ஏதேனும் இரண்டு காய் வாங்கிக் கொள்ளலாம்'' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டாள்.

முரளியின் தோற்றம் அவளுக்கு இரக்கத்தை ஏற்படுத்தியது.

''முரளி.... ஒவ்வொரு மாதமும் சாமி உண்டியலில் நான் கைவைப்பது உனக்குத் தெரிந்த விஷயம். சீக்கிரத்தில் நீ ஒரு வேலைக்குப் போனால் எவ்வளவு ஒத்தாசையாக இருக்கும். நேத்து அப்பா உன்னை அடிச்சுட்டாரே என்று எனக்கும் வருத்தம்தான். ஆனா நீ செய்த காரியம் தப்பு இல்லையா?''

தன் பங்குக்குச் சமாதானம் பேசிவிட்டு அம்மாவும் கறிகாய்க் கடைக்குப்போனாள்.

முரளியின் நெஞ்சை அடைத்துக்கொண்டு ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. குறுநகை புரிந்து கொண்டான் அவன்.

'ஒவ்வொரு மாதக் கடைசியிலும் நீங்கள் இருவரும் பணத்துக்கு இப்படித் திண்டாடுகிறீர்களே. அதைப் பார்க்கும்போதெல்லாம் என் பட்டதாரிச் சின்னம் ஏதோ ஒரு பொம்மைப் பொருளாய்த் தோன்றுகிறது. உங்கள் திண்டாட்டத்தை ஒழித்துக் கட்ட நான் எவ்வளவோ முயற்சிகள் செய்து கொண்டுதான் இருக்கிறேன். ஆயினும் வேலை கிடைக்கும் திருநாள் இன்னும் எனக்கு விடிந்தபாடில்லையே. அதே சமயம் உங்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் உதவ வேண்டும் என்று என் மனம் துடியாய்த் துடிக்கிறது.

'வீட்டுச் செலவுக்கென்று கேட்டால் அப்பாவை அவமானப்படுத்துவது போல் இருக்கும் என்று, சினிமா, அது இது என்று நண்பர்களிடம் ஜாலியாய்ப் பேசிக் கடன் வாங்கி வருகிறேன். அதைச் சில்லறைக் காசுகளாக மாற்றி யாருக்கும் தெரியாமல் சாமி உண்டியலில் போட்டுவிட்டு, மாதம் பிறந்ததும் அப்பா தரும் பாக்கெட் மணியில் கடனைத் திருப்பி அடைத்து விடுகிறேன். நேற்றும் அப்படித்தான் செய்தேன். அப்பா போட்டிருப்பார் என்று அம்மாவும், அம்மா போட்டிருப்பாள் என்று அப்பாவும் எடுத்துச் செலவு செய்கிறீர்கள்.....'

''என்ன அண்ணா, நீயாகச் சிரிக்கிறாய்?'' என்று வியந்தாள் தங்கை.

''ஒன்றுமில்லை'' என்றான் முரளி.

வேறு என்ன சொல்வான்?



உ. ராஜாஜி


ரௌடி 1: ''பெர்மிட் வாங்க வைத்திருந்த 25 ரூபாயை வேறு வழியில் செலவழிச்சிட்டேன்!''

ரௌடி 2: ''என்ன செய்தே...?''

ரௌடி 1: ''பட்டைச் சாராயம் நாலு பாட்டில் வாங்கிட்டேன்!''



அவன் : ''என்னடா இது அநியாயமாயிருக்கு! பெர்மிட்டைக் காண்பிச்சா கூட்டுறவுக் கடைகளில் மதுபானம் கிடைக்கும்னு பேப்பரில் போட்டிருக்கான். அதை நம்பி அங்கே போய் பெர்மிட்டைக் காண்பிச்சா பெர்மிட் மட்டும் போதாது கூடவே பணமும் தரணும்கிறான்!''



அவன் : ''சாமி வரம் கொடுத்தும் பூசாரி வரம் கொடுக்கலே!''


இவன் : ''என்னடா சொல்றே?''

அவன் : ''குடிக்கிறதுக்குச் சட்ட பூர்வமா பெர்மிட் வாங்கிட்டேன்...குடிக்கக் கூடாதுன்னு என் மனைவி உத்தரவு போட்டுட்டா!''



''இருந்த தடைகளெல்லாம் நீங்கி ஒரு வழியா பெர்மிட் கொடுக்க ஆரம்பித்திருப்பது பற்றி என்ன நினைக்கிறே...?''

''பெர்மிட்டுக்கு இப்பத்தான் பெர்மிட் கிடைச்சிருக்குன்னு!''



டைரக்டர் : ''பாக்கியராஜ் ஸ்டைலில் என் புதும் படத்துக்குப் பெயர் சூட்டியிருக்கேன்!''

நண்பர் : என்ன பெயர்?''

டைரக்டர்: ''பெர்மிட் இல்லாத குடிகாரர்கள்!''

இராஜேந்திர சோழரின் முன்னிலையில் அந்த அழகி நிறுத்தப்பட்டிருந்தாள். அவள் முகத்தில் களைப்பு நிறைந்திருந்தாலும், கம்பீரம் குறையவில்லை. அவளுக்குத் தமிழ் தெரியவில்லை. அவள் பேசும் மொழியை அறிந்து தமிழில் எடுத்துச் சொல்லக் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று வந்த வணிகர் ஒருவர் வரவழைக்கப்பட்டார். அவர் கேட்ட கேள்விகளுக்கு அந்த இளம் மங்கை மறுமொழி கூறும்போது புன்முறுவல் மூன்றாம் பிறை போல் அவள் முகத்தில் இழையோடியது.

அவள் காம்போஜ நாட்டிலிருந்து வருகிறாள். நாகைப்பட்டினத் துறைமுகத்தில் வந்து நங்கூரம் பாய்ச்சி நின்ற கலத்தில் அவள் இராஜேந்திர சோழருக்குப் பரிசு ஒன்று கொண்டு வந்திருந்தாள். காம்போஜ நாட்டு மன்னர், இராஜேந்திரனுக்கு அன்பளிப்பாக அளித்துள்ள அழகிய தந்தத் தேர் அது. நாகைப்பட்டினத்துத் துறைமுக அதிகாரிகள் சுங்கம் கொடாமல், அந்தப் பரிசுப் பொருளை எடுத்துச் செல்ல அனுமதிக்க மறுத்துவிட்டார்கள்.

பரிசுப் பொருளுக்குச் சுங்கம் செலுத்த வேண்டியதில்லை என்பது அவளது வாதம்.

துணிவுடன் வாதாடிய அந்த இள மங்கையின் திறமையைப் பாராட்டிய இராஜேந்திர சோழர், தனித் தனிப் பகுதிகளாக வந்திருக்கும் தேரின் பாகங்களை ஒன்று சேர்த்து முழு உருவமாகச் செய்த பிறகு, அந்தப் பரிசுப் பொருளை ஏற்பதா வேண்டாமா என்று கூறுவதாகத் தெரிவித்து விட்டார். அவர் காம்போஜ நாட்டின் மீது படையெடுக்கக் கடற் படைகளை ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் வேளையில், காம்போஜ அரசன் இப்படி ஒரு பரிசுப் பொருளை அனுப்பித் தன் மனத்தை மாற்ற விரும்புகிறானோ என்ற ஐயம் அவருக்கு இல்லாமல் இல்லை.

காம்போஜ நாட்டுப் பரிசுப் பொருளைவிட, காம்போஜ நாட்டுக் கட்டழகியையே அவர் மனத்தில் நினைத்துக் கொண்டிருந்தார். அவளைத் தன்னுடையவளாக்கிக் கொண்டு அந்தப்புரத்தில் ஓர் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும் என்ற எண்ணம் அவருக்கில்லை. மகளைப் போன்ற வயதுடைய காம்போஜக் கட்டழகியைத் தம் புதல்வர்களுள் ஒருவனுக்குத் திருமணம் புரிந்து காம்போஜ நாட்டு உறவைப் பலப்படுத்திக் கொண்டால் என்ன என்ற எண்ணம் அவருக்கு உதயமாயிற்று. சோழர் குலத்து மருமகளாக ஆகும் அந்தஸ்து அவளுக்கு இருக்கிறது. அழகு; கம்பீரம்; திறமை; துணிவு — வேறு என்ன வேண்டும்?

''பெண்ணே, உதிரிப் பாகங்களை ஒன்று சேர்த்துத் தேரை உருவமாக்கிய பின் என்னை வந்து சந்திக்கலாம். அதுவரையில் அந்தப்புரத்தில் நீ தங்கிக் கொள்ளலாம். சுங்கம் செலுத்த வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பிறகு முடிவு செய்கிறேன்'' என்றார் சோழ அரசர்.

''சுங்கம் செலுத்தித்தான் ஆக வேண்டும் என்று முடிவாகி விட்டால்?'' — காம்போஜ கட்டழகி கேட்டாள்.

அவள் விழிகளின் கூர்மையை விடக் கேள்வியில் இருந்த கூர்மையை ரசித்த அரசன் மெல்ல நகைத்து.

''செலுத்தித்தானாக வேண்டும்'' என்றார்.

''சுங்கத் தொகை எவ்வளவு இருக்கும்?''

''பொருளின் மதிப்பில் நாலில் ஒரு பங்கு''

''பொருளை யார் மதிப்பிடுவார்கள்?''

''சோழ நாட்டில் இல்லாத பொற்கொல்லர்களா, சிற்பிகளா? உன் அறியாமையை நான் பொறுத்துக் கொள்கிறேன்.''

''சுங்கக் கட்டணம் செலுத்தப் பணம் இல்லாவிடில்?''

''பொருளைப் பறிமுதல் செய்துவிடுவோம்.''

சோழ சக்கரவர்த்தி இவ்வாறு கூறியவுடன், காம்போஜக் கட்டழகி கலகலவென்று நகைத்தாள். ''சக்கரவர்த்தி அவர்களே! அதை இப்போதே செய்யலாமே. தங்களுக்குப் பரிசாகக் கொண்டு வந்த பொருள் தங்களுக்குத்தானே சேர வேண்டும்? சுங்க மதிப்பீடு வரையில் காத்திருக்க வேண்டுமா?''

அவள் மறுமொழியை மொழிபெயர்த்துச் கூறியவரும் திடுக்கிட்டார். சக்கரவர்த்தியும் திடுக்கிட்டார். காம்போஜப் பெண் நொடியில் பேச்சால் மடக்கி விட்டாளே என்று சக்கரவர்த்தி மறுமொழி கூறவில்லை. சைகை மூலம் விரைவில் பணி முடியட்டும் என்று கூறிச் சென்று விட்டார்.

காம்போஜ நாட்டுத் தந்தத் தேர் பூட்டும் வேலை மிகவும் வேகமாக நடைபெற்று வந்தது. அழகியுடன் வந்திருந்த தேர்த் தச்சர்கள் ஒவ்வொரு பாகமாக மிக விரைவாகப் பூட்டி வந்தார்கள்.



காம்போஜத்துத் தேர்

விக்கிரமன்

அப்படியும் தேர் உருவாகவில்லை. தேரின் சில பகுதிகள் அவர்கள் வந்த கலத்தில் இல்லாமல் வேறு கலத்துடன் சேர்ந்து விட்டனவென்பதைக் கட்டழகி அப்பொழுது தான் புரிந்து கொண்டாள். அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

இராஜேந்திர சோழர் தேர் பூட்டப் படும் இடத்துக்கு ஒரு நாள் வந்தார். அரை குறையாகப் பணி நின்றிருப்பதையும் கண்டார்.

''காம்போஜ நாட்டுக்கு எனது ஆட்களில் சிலரை அனுப்பி விருக்கிறேன். தேரின் சில பாகங்கள் அனுப்பப்படாமல் விடுபட்டு விட்டன'' என்றாள் மெல்லிய குரலில் அழகி.

தேர்ச் சக்கரங்கள் பூட்டப்பட்டு விட்டன. அடிப்பாகப் பீடம் கம்பீரமாக அமைந்து விட்டது. சூரிய ஒளியில் தந்தத்தால் ஆன தேர் பளபளத்தது. மிக நுண்ணிய வேலைப் பாடுகள் கண்ணையும், கருத்தையும் கவர்ந் தன. இராஜேந்திரனுக்குப் பிரமிப்புடன் திருப்தியும்தான். ஆனால் வெளிக்குப் புலப்படுத்தாமல், ''பெண்ணே! உன் பேச்சை என்னால் நம்ப முடியவில்லை'' என்றார்.

''இங்கே பணி செய்பவர்களுள் சிலரைக் காம்போஜம் அனுப்பியிருக்கிறேன். அவர்கள் விரைவில் வந்துவிடுவார்கள். தேர் முழு உருவத்துடன் குலுங்கி நிற்கும்'' என்றாள் அழகி.

''நீங்கள் காம்போஜ நாட்டு ஒற்றர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. இங்கே உள்ள நிலையை உளவு சொல்லி அனுப்பி யிருக்கிறாய் என்று நினைக்கிறேன். நீயும் உளவுக்காரி என்று தோன்றுகிறது'' என்று கடுமையாகக் கூறினார் அரசர்.

காம்போஜ அழகி நடுநடுங்கினாள்; என் றாலும் மெல்லிய புன்சிரிப்பு இதழ்களில் மறைந்திருந்தது.

''சோழ நாட்டுப் பலத்தை நாங்கள் அறிவதில் எங்களுக்குப் பலனில்லை. சமா தான நல்லெண்ணத்துக்காகத்தானே தந்தத் தேருடன் நான் வந்திருக்கிறேன்'' என்றாள் அழகி.

''அரைகுறையான தேர். திருப்பி எடுத்துச் செல்லலாம்.'' கடுமையாகக் கூறினார் இராஜேந்திரன்.

''பரிசாக அளித்த பொருளைத் திருப்பிப் பெறுவது எங்கள் நாட்டு வழக்கமில்லை'' என்றாள் அழகி. தொடர்ந்து, ''சக்கரவர்த்தி அவர்களே சில நாட்கள் பொறுத்திருங்கள். அழகிய தேரைக் கண்டவுடன் நீங்கள் மனம் மாறிவிடுவீர்கள்'' என்றாள்.

இராஜேந்திரன் மனத்துக்குள்ளே ''என் எதிரே அழகிய தேர் குலுங்கி நிற்கும்போது தந்தத் தேர் எதற்கு?'' என்று நினைத்தவராக, ''பொறுத்திருக்க முடியாது. இதில் காம்போஜ ராஜனின் சூழ்ச்சி ஏதோ இருக்கிறது. மூன்று நாட்கள் அவகாசம் தருகிறேன். தேரைத் திரும்பவும் பிரித்து எடுத்து உங்கள் நாட்டுக்குச் சென்றுவிடு... என் உத்தரவுக்கு மறு பேச்சுக் கிடையாது'' என்று கடுமையாகப் பேசினார்.

காம்போஜ அழகி அதிர்ச்சி அடைந் தாள். ''தேரைப் பிரிக்க முடியாதபடி பூட்டிவிருக்கிறோம். என்றென்றும் பிரிக்க முடியாத அன்பு போல் தேரையும் பிரிக்க முடியாது. என்ன செய்வது, கருணை காட்டுங்கள் சக்கரவர்த்தி'' என்று மன்றாடி னாள்.

''முடியாது; என் உத்தரவை மாற்ற முடியாது. ஆனால் நீ ஒரு காரியம் செய்தால் கருணை காட்டுகிறேன்'' என்றார் அரசர்.


காம்போஜ அழகியின் முகம் மலர்ந்தது. ''கட்டளையிடுங்கள். நிறைவேற்றுகிறேன்'' என்றாள்.

இராஜேந்திரன் தம் கருத்தைத் தெரி வித்தார். அந்தப்புரத்து அழகியாக அவளை ஏற்றுக்கொள்ள முடிவு செய்திருப்பதாகக் கூறினார்.

தென்றல் புயலானது. அழகிய பூங் கொடி சீறி வரும் நாகப் பாம்பானது. ''முடி யாது; முடியாது. நான் ஏற்க மாட்டேன். சோழ நாட்டில் இருக்க விரும்பவில்லை'' என்று கூவினாள் அழகி.

''மூன்று நாட்களுக்குள் தேரை முழுமை யாக உருவாக்குகிறேன். இல்லாவிடில்...'', என்று அவள் கூறுரை கூறியபோது, ''அந்தப்புரத்துக்குள் அடைக்கலம் புக வேண்டியதுதான்'' என்று ஏளனச் சிரிப் புடன் முடித்தார் இராஜேந்திரன்.


''அதுமட்டும் நடக்காது. அரை குறை யான காம்போஜ நாட்டுத் தேர் தங்களுக்குத் தேவையில்லை. அவ்வளவுதானே! தேரைத் திரும்பப் பிரித்து எடுத்துச் செல்ல முடியாது. தேரைக் கொளுத்தி விடுகிறேன். அப்போது



பவர் கட்!



''மாப்பிள்ளை வரதட்சணை என்ன கேட்கிறார்?''
''முந்நூறு மெழுகுவர்த்தியும், மூணு அரிக்கன் லைட்டும்!''



''அப்பா! பரீட்சை நான் நன்றாகத்தான் எழுதினேன். வாத்தியார் பவர் கட்டப்போ இருட்டுலே திருத்தினார்! குறைவா மார்க் போட்டிருக்கிறார்.''



போலீஸ்: யாரப்பா அது லைட் இல்லாமல் சைக்கிளில் போவது?
சைக்கிள்காரர்: பவர்கட் சார்!

-பிரியா பாலு

என்னை ஏதும் செய்ய முடியாதே!'' என்று வீர முழக்கம் செய்தாள் அழகி.

இரவும் பகலுமாகத் தேருக்குக் காவல் விடப்பட்டது. கெடு முடிவடைய முப்பது நாழிகையே பாக்கி. தேரின் மற்றப் பாகங்கள் தவறுதலாக மாமல்லபுரம் சென்றுவிட்ட கலத்தினின்று, கங்கை கொண்ட சோழபுரம் வந்து சேர்ந்து கண் துஞ்சாமல் தேரை முழுமையாக உருவாக்கி விட்டார்கள்.

• • •

சூரியவரன் உதிக்கு முன்பே, இராஜேந்திர சோழரின் படுக்கை அறையில் சிறு மணிகளின் கிண்கிணி ஓசை கேட்டது. சாளரத்தின் வழியே வெளித் தோட்டத்தை எட்டிப் பார்த்தார் ராஜேந்திரன்.

தந்தத்தாலான காம்போஜ நாட்டுத் தேர் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. அதை அங்கே இழுத்து வந்திருந்தார்கள் ஒப்படைக்க. தேவலோகத்திலிருந்து தேவேந்திரனால் அனுப்பப்பட்ட தேர் போல் அது பொலிவுடன் திகழ்ந்தது.

• • •

இராஜேந்திரன் காம்போஜ நாட்டுத் தந்தத் தேரைச் சுற்றிச் சுற்றி வந்து அதன் அழகில், கம்பீரத்தில் ஆழ்ந்து நின்றான்.

''காம்போஜ நாட்டு மன்னனின் நல்லெண்ணக் காணிக்கை'' என்ற வாசகங்கள் செதுக்கப்பட்டிருந்ததை இராஜேந்திரன் கவனித்தார். கைதட்டி அங்கே இருந்தவர்களை அழைத்தார்.

''அந்தக் காம்போஜ நாட்டுப் பெண்ணுக்குப் பட்டாடைகளும் முத்து மாலைகளும் பரிசாக அளியுங்கள். தைல ஸ்நானம் செய்வித்து அந்தப்புரத்துக்கு அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டார்.

அப்போது ஒரு பணியாள் மிகவும் பணிவுடன் ஓலையொன்றை நீட்டினான்.

''....சோழ சக்கரவர்த்திகளின் சமூகத்துக்கு. எங்கள் காம்போஜ அரசனின் நல்லெண்ணக் காணிக்கையை அளித்து விட்டோம். நானும், என் உயிருக்கு உயிரான என் துணைவியும், சோழ நாட்டில் தங்கியிருந்தபோது தாங்கள் அளித்த சலுகைகளுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளோம். காம்போஜ நாட்டுக்குத் தாங்கள் திருவிஜயம் செய்யும்போது தங்களை மகிழ்ச்சியுடன் சந்திக்கிறோம். இப்படிக்கு, தந்தத் தேரை உருவாக்கிய சிற்பி.''

என்று எழுதப்பட்டிருந்த வாசகங்களைப் படித்த இராஜேந்திரன் பெருமூச்சு விட்டார். பிறகு பரபரப்புடன்,

''யாரது, காம்போஜ அழகியையும், அவள் கணவர் சிற்பியையும் இங்கே அழையுங்கள்'' என்று உத்தரவிட்டார்.


''அவர்கள் நேற்று இரவே நாகைப் பட்டினத்திற்குப் பயணமாகி விட்டார்கள். இன்னும் இரண்டு நாட்களில் காம்போஜத்துக்குக் கப்பல் புறப்படுகிறதாம்'' என்ற மறுமொழி கிடைத்தது.

பாடல் பிறந்த பின்னே...

தமிழ்ப்பித்தன்



✠ கவியரசரும் நடிகர் திலகமும்





✠ ''மாலையிட்டு மணமுடிக்க'' பாட்டின் காட்சி பண்டரிபாய் — மாலையிட்ட மங்கை

✠ அம்பிகாபதியில் பி. பானுமதி

ஜூன் 24ம் தேதி கவியரசரின் பிறந்த நாள். கட்டுரை ஆசிரியர், கவிஞர் கண்ணதாசனின் 'தென்றல்' பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும், அவரது திரைப்படங்களில் உதவியாளராகவும் பணி புரிந்தவர்.

கவிஞர் கண்ணதாசன் திரைப் படங்களுக்குப் பாடல் எழுதுவதற்காகச் செல்லும் போது, பெரும்பாலும் தமது சொந்தக் காரையே பயன்படுத்துவார். கம்பெனிக் காரினை எதிர்பார்க்கவே மாட்டார்.

பாட்டு எழுதி முடித்து விட்டார் என்றால் மறு கணம் அந்த இடத்திலே அமர்ந்து இருக்க மாட்டார். உடனே எழுந்துவிடுவார். சுதந்திரம் பெற்ற பறவை போல வெளியே சஞ்சாரம் செய்ய வாகனத்தைத் தேடி வருவார். அந்த நேரத்தில் அவரது கார் தயாராக இருந்து — அவரது டிரைவர் காரின் அருகில் இல்லையென்றால் அவருக்குக் கோபம் மனத்துள் குமையும். பரபரப்பாகக் காணப்படுவார். டிரைவர் வந்து சேர்ந்தவுடன் கோபம் பறந்துவிடும்.

காரின் முன் சீட்டில் அமர்வார். கார் நகரத் தொடங்கியதும் அவரது கரம் சிகரெட்டை எடுக்கும். வாய் ஒரு பாடலை முணு முணுக்கும்.

அம்பிகாபதி செய்த அதிர்ஷ்டம்

ஏ. எல். எஸ். புரொடக்‌ஷன்ஸ் 'அம்பிகாபதி' என்னும் படத்தைத் தயாரித்துக்கொண்டிருந்த நேரம். கதாநாயகனாக நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் கதாநாயகியாகப் பானுமதியும் நடித்து வந்தனர்.

கதாநாயகியை வருணித்துக் கதாநாயகன் அம்பிகாபதி எழுதிய பாடலை அவனது காதலி அமராவதி பாடும் கட்டம். அதற்குரிய பாடலை எழுதும் பொறுப்பை யாரிடம் ஒப்படைக்கலாம் என்று பட அதிபர் ஏ. எல். ஸ்ரீனிவாசன் தயாரிப்பு நிர்வாகிகளைக் கேட்டார். டி. என். சுப்பிரமணியன் உடனே, ''கவிஞர் கண்ணதாசனை எழுதச் சொல்வோம்'' என்று பதில் அளித்தார். ஏ.எல். எஸ். அவர்களுக்குத் தயக்கம்.

கவிஞர், தமது உடன் பிறந்த தம்பிதான் என்ற போதிலும் கூட, அந்த நாட்களில் கவிஞரிடம் ஏ. எல். எஸ். அதிக மதிப்பு வைத்திருக்கவில்லை. காரணம், கவிஞர் ஓர் அரசியல் கட்சியில் அங்கம் வகித்திருந்தார் என்பது தான்.

தமது நிறுவனத்தின் தயாரிப்புகளுக்குக் கவிஞர்கள் கு. மா. பாலசுப்பிரமணியம், கு. சா. கிருஷ்ணமூர்த்தி, கே. டி. சந்தானம் ஆகியோர்களைக் கொண்டு பாடல்கள் எழுத வைத்தார்.

''இந்தப் பாடலைக் கண்ணதாசன்தான் எழுத வேண்டும். வேறு எவர் எழுதினாலும் சோபிக்காது!'' என்று சுப்பிரமணியன் வலியுறுத்தினார். ஏ. எல். எஸ். சம்மதம் தெரிவித்தார்.

ஜி. ராமநாதன் இசை அமைக்க, கவிஞர் பாடலை எழுதத் தொடங்கினார். தமது காவிய முத்திரையைப் பொறித்தார் பாடலில். பாடல் உருவாகும்போதே கம்பெனி ஊழியர்களின் நாவில் அது ஒலிக்கத் தொடங்கியது. படம் வெளிவந்த பின்னர் அது நற்றமிழர் வீடெல்லாம் ஒலித்தது.

பானுமதி அவர்களால் பாடப்பெற்ற அந்தப் பாடல் இதுதான்:

கண்ணிலே இருப்பதென்ன
    கன்னி இள மானே
காவியமோ ஓவியமோ
    கன்னி இள மானே

இதற்கு அடுத்த நிலையை கே. டி. சந்தானம் எழுதிய 'சிந்தனை செய் மனமே' என்ற பாடலும், கு. மா. பாலசுப்பிரமணியம் எழுதிய ''மாசிலா நிலவே'' என்ற பாடலும் பெற்றன.

'பள்ளியறைப் பாடம்' தப்பித்தது

கூறிய காலத் தயாரிப்பான 'மாலையிட்ட மங்கை' படப்பிடிப்பு முடிவடைந்து சென்சார் தேதி நிர்ணயிக்கப்பட்டது. அந்த நாளில் மினர்வா தியேட்டரில்தான் சென்சாருக்குரிய படங்கள் திரையிட்டுப்பட்டு வந்தன.

காட்சி முடிந்ததும் அரங்கை விட்டு வெளிவந்த அதிகாரியும் உறுப்பினர்களும் ஓர் அறைக்குள் படத்தை விவாதிப்பதற்கு நுழைந்து விட்டார்கள். பதைபதைப்புடன் காத்துக் கொண்டிருந்தோம். கவிஞர் அப்போது ஓர் அரசியல் கட்சியில் அங்கம் வகித்து வந்ததால் வசனங்கள் ஏதாவது தணிக்கை அதிகாரியின் கத்தரிக்கோலினால் வெட்டப்படலாம் என்ற பயமும் ஏற்பட்டது.

அரை மணி நேரத்தில் அதிகாரியும் உறுப்பினர்களும் வெளியில் வந்தனர். தணிக்கை அதிகாரி திரு ஜி. டி. சாஸ்திரி முதலில் வெளிவந்தார்.

கவிஞரைப் பார்த்து, ''மாலை நாலு மணிக்கு எங்கள் அலுவலகத்துக்கு வாருங்கள்'' என்று ஆங்கிலத்தில் சொல்லியவாறு சென்றுவிட்டார்.

அவரைப் பின்தொடர்ந்து வெளிவந்த உறுப்பினர்களில் ஒருவர், கவிஞருக்குச் சிறிது அறிமுகமானவர். அவரிடம் சென்று கவிஞர் பேச்சுக் கொடுத்தார்.

அவர், ''கிளீன் சென்சார்தான். ரெண்டு மூணு இடத்தில் சிறு சிறு கட்ஸ் தான்'' என்று சொல்லிவிட்டு, ஒரே ஒரு பாட்டுத்தான் எங்களை ரொம்ப நேரம் விவாதிக்க வைத்துவிட்டது'' என்று குறிப்பிட்டார்.

அந்தப் பாடல் இதுதான்:

மாலையிட்டு மணமுடிச்சு
    பொட்டுவச்சு பூமுடிச்சு
    மங்கையிவள் வாழவந்தாள்
    எங்கள் வீட்டிலே
மாலை வெய்யில் போலே
    மஞ்சள் பூசும் பெண்ணை
    வாழவைக்க மகன்வருவான்
    கொஞ்ச நாளிலே
பள்ளியறையில் படிச்ச பாடம்
    பலனளிச்சாச்சு — புருஷன்
    பக்கமிருந்து பேசும் பேச்சு
    உருவம் கொண்டாச்சு
கண்ணேஎங்கள் பொன்னேஉந்தன்
    கடமை ரெண்டாச்சு — அந்தக்
    கலைகாணும் திருநாளும்
    அருகில் வந்தாச்சு....

இந்தப் பாட்டில் 'பள்ளியறையில்.... என்று வரும் பகுதி உடலின்பத்தைக் குறித்துச் சொல்கிறது என்று ஓர் உறுப்பினர் சொன்னாராம். ஏனைய உறுப்பினர்கள், ''இருக்கலாம். ஆனால் இலக்கியத்தரமான வார்த்தைகளால் இந்தப் பாடல் அமைக்கப்பட்டுள்ளது; கொச்சையான சொற்கள் இல்லை. பாமர மக்களுக்கெல்லாம் இது அவ்வளவு எளிதில் புரியாது. அதனால் இதனை அனுமதிக்கலாம்'' என்று கருத்துரை கூறினார்களாம். அதனால் தணிக்கைஅதிகாரியின் கத்தரிக்கோலின் பிடியிலிருந்து பாடல் வரிகள் தப்பித்து விட்டனவாம்.

உறுப்பினர் தெரிவித்த தகவல்தான் என்றாலும் அது ஓர் உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறது. அன்றைக்கே ''கவிஞர் கண்ணதாசனின் திரைப் பாடல்களில் காணப்படுவது உயர்ந்த இலக்கிய தத்துவமா, கொச்சையான கருத்துக்களின் சங்கமமா?'' என்ற பட்டிமன்ற நிகழ்ச்சி சென்சார் அலுவலகத்

''எனக்கும் பயங்கரமான கண் வலி'' என்று நகருநிடம் ஒருவன் முறையிட்டான். ''இதற்கு என்ன செய்யலாம்?'' என்றும் கேட்டான். நகருநின் சொன்னார்: ''சில நாட்களுக்கு முன் என் பல் ஒன்று இப்படித்தான் கடுமையாக வலித்தது. எவ்வளவோ மருத்துவம் பார்த்தும் குணமாகவில்லை. கடைசியாகப் பல்லை பிடுங்கி எறிந்து விட்டேன். பூரண சுகமும் கிடைத்தது.''

- பிரியா பாலு



தில் நடைபெற்றிருக்கிறது என்பதுதான் அந்த உண்மை.

ப(ா)ட்டுக்கோட்டை பயந்த இடம்

பாகப் பிரிவினை படத்தை ஜி. என். வேலுமணி 1959ல் தயாரித்துக்கொண்டிருந்தார். பாடல்கள் எழுதும் பொறுப்பு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

''கதாநாயகன் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் கட்டம். அதற்கு ஒரு பாடல் தேவை. எழுதுங்கள்'' என இயக்குநர் பீம்சிங் பட்டுக்கோட்டையிடம் கேட்டுக் கொண்டார். தத்துவப் பாடல்களை எல்லாம் அநாயாசமாக எழுதி, தமிழ்ப்பட ரசிகர்களின் உள்ளங்களை யெல்லாம் கொள்ளை கொண்டிருந்த கல்யாண சுந்தரம் தயக்கம் காட்டினார். தயாரிப்பாளர் மீண்டும் மீண்டும் வற்புறுத்தவே, அவர் ''தாலாட்டுப் பாட்டு எழுத எனக்கு வராது! தயவுசெய்து கவிஞர் கண்ணதாசன் அவர்களை ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்'' என்று மனப்பூர்வமாகச் சொல்லிவிட்டார்.

கல்யாணசுந்தரம் நூற்றுக் கணக்கான படங்களுக்குப் பாடல் எழுதியிருக்கிறார். ஆனால் அவற்றில் அவர் எழுதிய தாலாட்டுப் பாடல்களை ஒரு கைவிரல் விட்டே எண்ணி விடலாம்.

அப்போது கவிஞர் கண்ணதாசன் 'சிவகெங்கைச் சீமை' என்னும் திரைப்படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார். சிவாஜி கணேசன் நடித்து வந்த வீர பாண்டிய கட்டபொம்மன் படத்துக்குப் போட்டிப் படம் என்ற முறையில் அதன் தயாரிப்பு இருந்து வந்தது. அதுவும் தவிர, ''நானே ராஜா'' என்னும் திரைப்படத்தில் எழுந்த தகராறின் காரணமாக சிவாஜி கணேசன் அவர்களுக்கும் கவிஞருக்கும் நீண்ட காலமாக மனத்தாங்கல். அதனால் சிவாஜி நடிக்கும் படங்களுக்கு, குறிப்பாக சிவாஜி நடிக்கும் கட்டங்களுக்கு பாடல் எழுதும் வாய்ப்பைக் கவிஞர் இழந்திருந்தார்.

இந்தச் சூழ்நிலையில் பாகப் பிரிவினையில் கவிஞரைக் கொண்டு தாலாட்டுப் பாடலை எழுதச் செய்வதற்குத் தயாரிப்பாளருக்கு விருப்பம் இருந்த போதிலும் அச்சமும் உடன் தோன்றியது. தயாரிப்பாளர், நடிகர் திலகத்தை அணுகி, நிலைமையைச் சொன்னார். நடிகர் திலகமும் உடனே போட்டி உணர்வுகளை — பகைமை உணர்வுகளை மறந்து கவிஞர் பாட்டு எழுதுவதை வரவேற்றார். கவிஞரும் நடிகர் திலகத்திடம் கொண்டிருந்த பகைமை உணர்வை மறந்து 'பாகப் பிரிவினை'க்குப் பாடல் எழுதுவதற்கு மனப்பூர்வமாக முன்வந்தார். பாடல் அமைக்கும் பணி தொடங்கியது.

''ஏன் பிறந்தாய் மகனே
ஏன் பிறந்தாயோ?
இல்லையொரு பிள்ளையென்று
ஏங்குவோர் பலரிருக்க
இங்குவந்து ஏன்பிறந்தாய்
தங்க மகனே''



சமீபத்தில் டி. வி.யில் 'கொஞ்சும் சலங்கை' படம் பார்த்தவர்களுக்குக்கவையான ஒரு செய்தி. அதில் நடித்த குமாரி கமலா சமீபத்தில் ஒரு தமிழ்ப் படத்திற்கு நடன இயக்குனராக இருந்தார். அவருக்கு உதவியாளராக இருந்தவர் பிரமிக்காதீர்கள், பல படங்களில் நடித்துள்ள ஏ. சகுந்தலா! •குமார்

என்று பல்லவியைக் கொடுத்தார். பல்லவியிலேயே தமது 'சாகித்திய முத்திரை'யை அற்புதமாகப் பொறித்தார் கவிஞர். முழுப் பாடலும் தத்துவத்தின் வார்ப்படமாக— உடல் ஊனமுற்ற தந்தையின் ஏக்க உணர்வை எடுத்துக்காட்டும் வரைபடமாக அமைந்து விட்டது.

நடிகர் திலகமே கவிஞரைத் தழுவிக் கொண்டு, ''கவிஞரே எப்படி இவ்வளவு அருமையாக எழுதுகிறீர்கள்?'' என்று கூறி வியந்தார்.

தாலாட்டுப் பாடலை மட்டும் எழுதச் சென்ற கவிஞர், எழுதப்படுவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த வேறு பல பாடல்களையும் எழுதும் வாய்ப்பைப் பெற்றார்.

''தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்
தரத்தினில் குறைவதுண்டோ?''

இன்றைக்கும் நமது செவிகளில் ரீங்காரம் செய்கிறது அல்லவா?

இரத்தம் எடுக்காமல் இரத்தப் பரிசோதனை!

மேற்கு ஜெர்மனியிலுள்ள ''மாக்ஸ் பிளாங்க் இன்ஸ்டிடியூட்டில்'' உள்ள டாக்டர் இரத்தப் பரிசோதனை செய்வதற்கு, ஒரு நூதன முறையைக் கையாளுகிறார். பரிசோதனைக்கு வருபவர்கள் தங்கள் உதடுகளை ஒரு ''லென்ஸர்'' பிளேட்டில் அழுத்துகிறார்கள். அப்பொழுது இரத்தத்தில் அடங்கியுள்ள சர்க்கரை, கொழுப்பு, யூரியா ஆல்கஹால் இவைகளின் அளவுகளை ஒரு ''இன்பிராரெட் லென்ஸர்'' கணித்துக் காட்டுகின்றது. ரத்தப் பரிசோதனைக்கு இந்த முத்தமே போதுமானதாயுள்ளது!



சிற்சபைக் கண்ணும் பொற்சபைக் கண்ணும்
திருநடம் புரியும் திருநட ராஜ
எனக்குஅருள் புரிந்த நினக்குஅடியேன் கைம்
மாற்றை அறிந்திலன் போற்றிநின் அருளே!

— திருஅருட்பா



Dr. S. R. சிவராஜ்

சேலத்திற்குப் போற லோடு

– விஜயாலயன் –

ஒரு வண்டி உளுந்து லோடைத் திருச்சியில இறக்கிவிட்டுக் கோவை திரும்பினேன்.

லாரியை ஷெட்டில் நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினேன்.

''பொன்னுசாமி அண்ணே... உங்களை முதலாளி வரச் சொன்னாரு.... உங்களுக்காகக் காத்துக்கிட்டு இருக்காரு....''

''என்னடா வேலப்பா விஷயம்?''

''சாமிதொரே உங்களைப் பத்தி இல்லாததும் பொல்லாததும் முதலாளி கிட்டே வத்தி வச்சிருக்கான். நீங்க லோடு கொண்டு போறதுல செய்யற தில்லு முல்லும் வழியிலே பாசஞ்சர்களை ஏத்திக்கிட்டுப் போறதையும் சொல்லிட்டான். மொதலாளி ஒங்க மேலே ரொம்பக் கோபமா இருக்காரு...''

நான் சிரமப்பட்டு எச்சிலை விழுங்கினேன்.

முதலாளி ரொம்பக் கோபக்காரர். இருபது வருஷம் சர்வீஸான முத்துசாமியை ஒரு சின்னத் தப்பு செய்ததற்காகப் போன வாரம் வேலையை விட்டே நிறுத்திவிட்டார்.

நான் பிள்ளை குட்டிக்காரன் என்று முத்துசாமி எவ்வளவோ கெஞ்சியும் அவர் மசியவே இல்லை.

நான் லேசான பயத்துடன் அவர் அறைக்குள் நுழைந்தேன்.

''வணக்கமுங்க....முதலாளி.....''

நிமிர்ந்தார். அவர் முகத்தில் கோபம் தெரிந்தது.

''உனக்கு எத்தனை வருசம் சர்வீஸ் பொன்னுச்சாமி?''

''பத்து வருஷமுங்க.''

''உனக்கு எத்தனை பிள்ளைகள்?''

''மூணு பொண்ணுங்க. ரெண்டு ஆம்பிள்ளைப் பசங்க முதலாளி.''

''நீ அவங்களைக் காப்பாத்த வேண்டாமா?''

எச்சில் தொண்டையில் இறங்க மறுத்தது.

''வேணுமுங்க....''

''இதுதான் உனக்குக் கடைசித் தடவை. இனிமே இந்த மாதிரி ஏதாவது நடந்துச்சுன்னு வீட்டுக்கு அனுப்பிடுவேன் ஜாக்கிரதை.....''

ஒரு விரலைக் காட்டி எச்சரித்தார்.


''சரிங்க.... மொதலாளி.''

குனிந்த தலையுடன் வெளியே வந்தேன்.

என் நெஞ்சு கொதித்தது.

''டேய் சாமிதொரே... என்னைக் காட்டிக் கொடுத்து அவமானப்படுத்திட்டியே. உன்னைப் பழிக்குப் பழி வாங்காம இந்தப் பொன்னுசாமியின் மனசு ஆறுதடா...''

ஷெட்டுப் பக்கம் நடந்தேன்.



சாமிதுரையின் லாரியில் சிமிண்ட் லோடு ஏற்றப்பட்டுக் காலை நான்கு மணிக்குச் சேலம் போகத் தயாராக இருந்தது.

மூளையில் மிளகுப் பொடியைக் கொட்டி அழுத்தித் தேய்த்ததைப் போல் 'கருகரு' என்று என் மூளை இயங்க ஆரம்பித்தது.

''டேய்....செல்லமுத்து....''

என்னுடைய கிளீனர் ஓடிவந்தான். அவன் கையில் பத்து ரூபாய் நோட்டைத் திணித்து அவன் காதில் கிசுகிசுத்தேன்.

''பாவம் அண்ணே.... அவரு பிள்ளை குட்டிக்காரரு....'' என்று அவன் தயங்கினான்.

''நீ இந்த வேலையிலே ஒழுங்கா நெலைக்க மாட்டே....''

''அண்ணே:...அண்ணே கோவிச்சுக்காதீங்க. நீங்க சந்தோஷமா வீட்டுக்குப் போங்கண்ணே. ஒரு மணி நேரத்திலே காரியத்தை முடிச்சுட்டு வர்றேன்....''

நான் அவனைத் தட்டிக் கொடுத்துவிட்டு நடந்தேன்.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

பாதி தூக்கத்தில் போய்க் கதவைத் திறந்தேன்.

செல்லமுத்து நின்று கொண்டிருந்தான்.

''அண்ணே.... நீங்க சொன்னபடியே லாரியின் முன் சக்கரங்களோட நட்டுகளையெல்லாம் லூஸ் பண்ணி வெச்சுட்டேன்..''

நான் விஷமமாய்ச் சிரித்தேன்.

''அப்படின்னு..... சாமிதொரை நாலு மணிக்கு வண்டி எடுப்பான். நாலரை மணிக்குச் சேலம் போற ரோட்லே.... அப்படியே எமலோகத்துக்குப் போயிடுவான்.''

ஒரு பெண் என்னை நோக்கி வருவது தெரிந்தது.

என் தங்கை கல்யாணி.

''என்ன தங்கச்சி?''

''அண்ணே....அவரு இன்னும் வரலேண்ணே.....''

''அவரு வால்பாறைக்கு லோடு கொண்டு போயிருக்காரு. கொஞ்சம் முன்னே பின்னே லேட்டாகத்தான் செய்யும்.... நீபோய்ப் படுத்துத் தூங்கு தங்கச்சி. அவரு வருவாரு போ, தங்கச்சி....''

அவள் மனமில்லாமல் நகர்ந்தாள்.

''டேய் செல்லமுத்து... காலைலே ஆறு மணிக்குப் புளிமூட்டை லோடு ஒண்ணு பொள்ளாச்சிக்குக் கொண்டு போகணும். ரெடியா இரு.....''

''சரி அண்ணே....'' என்று தலையைச் சொறிந்து கொண்டு நின்றான்.

''சரி போடா.... உன்னைக் காலைலே ஸ்பெஷலாக் கவனிக்கிறேன்...''

''அப்போ வரேண்ணே....'' அவன் சந்தோஷமுடன் நகர்ந்தான்.

என் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது.

''டேய்.... சாமித் தொரை... என்னைக் காட்டிக் கொடுத்தியே.... உன்னை இந்த உலகத்தை விட்டே தாட்டி விடப்போறேன்டா.... என்னைப் பகைச்சுக்கிட்டவங்க யாருமே மீண்டதில்லேடா....'' மீசையை வெற்றிப் பெருமிதத்துடன் நீவிவிட்டுக் கொண்டேன்.

காலை ஆறு மணிக்கு ஷெட்டுக்குப் போனபோது—

சாமிதுரை லாரி நின்ற இடம் காலியாக இருந்தது.

இந்நேரம் சாமிதுரை....

ரகசியமாய்ச் சிரித்துக் கொண்டேன்.

''அண்ணே....''

''என்னடா....செல்லமுத்து....''

''உங்களை மொதலாளி வரச் சொன்னாரு.''

''வணக்கமுங்க மொதலாளி....''

''வா... பொன்னுசாமி.... சாமி துரையோட மனைவிக்கு இன்னைக்கு டெலிவரியாம். இன்னைக்கு ஒரு நாளைக்கு லீவு வேணும்னு ரொம்பக் கெஞ்சி அழுதான். வால்பாறை லோடு முடிச்சுட்டு வந்த உங்க மைத்துனனை.... அப்படியே சாமி துரையோட லோடைச் சேலத்துல கொண்டு போய் இறக்கிட்டு வரச் சொல்லி அனுப்பி இருக்கேன்..... நீ போற வழியிலே உன்னோட தங்கச்சிக்கிட்டே விஷயத்தைச் சொல்லிட்டுப் போ.....''

என் நெஞ்சுக்குள் எங்கோ எரிமலை வெடித்துச் சிதறியது.

நிஜமல்ல டூப்!

அம்மா: ''பிள்ளையார் கோயிலுக்குப் போகும் போது வேலைக்காரியையும் எதுக்குக் கூட்டிக்கிட்டு போனே...?''

நடிகை: ''எனக்கு டூப்பாக 108 தோப்புக் கரணம் போட!''





படாதிபதி: ''தம்பிரா குதிகுதின்னு குதிக்கிறாரே ஏன்?''


டைரக்டர்: ''டூப் போட முடியாது... முப்பது அடி உயரத்திலிருந்து நீங்களேதான் குதிக்கணும்னு நான் சொன்னது பொறுக்கலே அவருக்கு!''

-உ. ராஜாஜி











நட்சத்திர வடிவம்
பரிசுத்திட்டம்–8



இங்கு உள்ள துண்டங்களை ஜாக்கிரதை யாக ஓரத்தையொட்டிக் கத்தரிக்கவும். அவற்றை மேலும் பின்னப்படுத்தக் கூடாது. ஒரு வெள்ளைத் தாளில் இணைசேர்த்து ஒட்டித் திரைப்பட நட்சத்திரத்தின் உருவை முழுமை யாக நீள்சதுரப் படமாகக் குறையின்றிக் காண முடிகிறதா பாருங்கள். பத்து கல்கி நேயர்கள் மட்டுமே அவ்வாறு காண முடியும். அதிர்ஷ்டசாலிகளான அந்தப் பத்துப் பேருக் கும் தலா ரூ. 25 பரிசு உண்டு. தவிர அந்தத் திரைப்பட நட்சத்திரத்தின் கையெழுத்துடன் கூடிய புகைப் படமும் அனுப்பி வைக்கப் படும். முடிவு தேதியான ஜூன் 30 தேதிக் குள் அனுப்பப்படும் உருவங்களே பரிசீலிக்கப் படும். உறையின் மேல் ''நட்சத்திர வடிவம்–8 என்று குறிப்பிடவும். கடிதப் போக்கு வரத் துக் கிடையாது. கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் விலாசத்தைத் தெளி வாக, ஒட்டப்பட்ட படத்தின் கீழே குறிப்பிட மறவாதீர்கள்!

–ஆசிரியர் கல்கி, சென்னை–32




மிகப் பொருத்தமான
ஜோடி
இந்தியாவின் ஒரே துர்நாற்றமகற்றும்
சோப் மற்றும் டால்க்
கோத்ரெஜ் வழங்கும் சிந்தால்
CINTHOL
DEODORANT
LUXURY
TOILET POWDER
BY
CINTHOL
CINTHOL
Interpub/CTS/I/80

❋ வசந்தா கோவிந்தன், பங்களூர்-38

கே. கேள்விக்குறி வளைந்துதான் நிற்க வேண்டுமா?

ப: அது நிமிர்ந்தால் ஆச்சரியமாகிவிடுமே!

❋ எம். தேவராஜ் படேல், விழுப்புரம்

கே. தாஜ்மகால் இந்துக்களுக்கு உரியதா, முஸ்லீம்களுக்கு உரியதா?

ப: இந்தியாவுக்கு.

❋ ஆர். ஸ்ரீனிவாசன், ஹைதராபாத்-27

கே. மடத்தனமான கேள்விகளுக்குப் பொறுப்பாளி யார்?

ப: ஏன் கேட்கிறீர்கள், உங்கள் மேல் யாராவது குற்றம் சாட்டினார்களா?

❋ எஸ். கணேஷ், சென்னை-23

கே. ஷோபா கொலையா? தற்கொலையா?

ப: இது முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமா? நீங்கள் ஒரு கொலையையோ தற்கொலையையோ நேரில் பார்த்திருந்தால் அதனுடைய பயங்கரத்தை உணர்ந்திருப்பீர்கள். அதன் பிறகு இம் மாதிரிக் கேள்விகள் கேட்கவே மனசு வராது. சமீபத்தில் ஓர் இளம் மாணவன் செய்து கொண்ட தற்கொலையை நேரில் பார்க்க நேர்ந்தது. விட்டத்தில் கயிறு கட்டி ஏணி போட்டு ஏறிச் சுருக்கிட்டு உயிர் துறந்துவிட்டான். தொங்கிக் கொண்டிருந்த உடலும் கழுத்துச் சுருக்கும் இன்னும் என் மனத்தை என்னவோ செய்து கொண்டிருக்கிறது.

❋ அனுராதா செல்லப்பா, சென்னை-40

கே. மகாபாரதத்தில் மங்காத்தாவின் கட்டபொம்மனைக் கேலி காரக்டராக ஆக்கியிருக்கிறார்களே, தெரியுமா?

ப: அது பற்றிச் சில கசமுசாக்கள் காதில் விழுந்தது. நாடகத்தைப் பார்த்தேன். கேலியில்லை. மாறாக நல்ல தரமான நகைச்சுவை இருக்கிறது. மங்காத்தாவில் எஸ். வி. சேகர் அண்டர் ப்ளே பண்ணிப் பாராட்டுப் பெறுகிறார் என்றால், கட்டபொம்மனாக நடிப்பவர் (தெரிந்தே) மிகையாக நடித்துப் பாராட்டுப் பெறுகிறார். வெறும் நகைச்சுவைக் கொத்தாக இருந்த தமிழ் நாடகத்தில் ஒரு 'இன்டெலிஜண்ட்' ஹ்யூமரைப் புகுத்தியிருக்கிறார் சேகர். அடுத்து ராமாயணத்தில் ரம்பியை எதிர்பார்க்கலாமா?

❋ எம். வெங்கடேசன், சென்னை-33

கே. ஓசிப்புத்தகம் கேட்பவர்களை விரட்டி அடிக்க வழி என்ன?

ப: ஐய்யய்யோ! அதைச் சொல்லிவிட்டால் எனக்கேதான் தொல்லை. அப்புறம் நான் ஓசிப் புத்தகம் வாங்குவது எப்படி? இதுதானே என் ஹாபி!

❋ பி. எஸ். துரை, சென்னை-17


கே. வாராவாரம் சுதா மணிமேகலை இடம் பெறுகிறாரே, பெண் என்பதாலா?

ப: அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்? சுதா மணிமேகலை ஓர் ஆண் என்பது இப்போதுதான் தெரிந்தது. பெரிய ஏமாற்றம்!

ரூ. 5 பரிசு பெறுபவர்:

எம். வெங்கடேசன்

37, ஆதிகேசவ பெருமாள் கோயில் தெரு, சென்னை-33



கிறுக்கு பதில்கள்





வருங்காலத்தில் நிரமுள்ள இளைஞர்கள் இது போன்ற கடல் சாகசங்களில் இறங்க வேண்டும். இந்தியாவின் கடற்பிரதேசம் ஒரு விலை மதிக்க முடியா பொக்கிஷம்.

- புஷ்பா தங்கதுரை

24

மல்லிக் அந்தச் சந்தர்ப்பத்தை அவசரமாக ஆராய்ந்தான். அவன் மூளையில் ஒரு பரிச்சய உணர்வு கன் என்றது. மேலே வந்திருக்கும் பெண் ரீடா! அதுதான் அவனது திமர் உணர்ச்சி.

தெரிந்ததும் கதவைத் திறந்து வெளியேறினான். —ராம்சந்த் ப்ளீஸ் ஸ்டாப்! என்று கத்தினான். ஓடிப்போய் அந்தப் பெண் அருகில் மண்டியிட்டு அமர்ந்தான்.

அவள் ரீடா!

முகம் கருண்டிருந்தது. கண்கள் துடித்திருந்தன. உடலில் நடுக்கம் தெரிந்தது. —ரீடா, ஆர் யூ ஆல் ரைட்? என்றான்.

அலங்க மலங்கப் பார்த்தாள். உதட்டு ஓரத்தில் நிச்சயமில்லாத புன்னகை வந்தது. —நான் மல்லிக்தான். என்று அவன் உறுதி கூற அந்தப் புன்னகை அழகாக காலை சூரியனாயிற்று.

இதற்குள் ராம்சந்த் அவசரமாக போர்வையுடன் வந்தான். கையில் வைத்திருந்த 1.38 அப்படியே இருந்தது. எந்த நிலையும் திடீரென்று உருவாகலாம் என்று நினைத்தான் அவன்.

—இந்தப் பெண் எனக்குத் தெரியும்! என்றான் மல்லிக்.

—யார் இவ?

—சொல்றேன்.

ரீடா சிரத்துடன் எழ; மல்லிக் ராம்சந்தின் போர்வையை வாங்கிப் போர்த்தினான்.

இருவரும் அவளை அழைத்து காபினுக்குள்ளே போனார்கள். சம்பகா விஷயம் அறிந்து ஓடிவந்து, தன் ஸாரி ஒன்றை அவளிடம் கொடுத்தாள்.

தன்னைத் துடைத்து உடை மாற்றி வந்த ரீடா சிறிது ஆசுவாசமாகி இருந்தாள். காபினின் திரை பூரா இழுத்து விட்டாள். வெளி விளக்குகளை அணைக்கச் சைகை காட்டினாள்.

அவள் ஸாரி உடுத்தி வருவதற்கு முன் ராம்சந்திடம் மல்லிக் சுருக்கமாக அவளைப் பற்றிக் கூறினான்.

—அது சரி மல்லிக், இவ நம்பகமானவளா?

—நிச்சயமா! இவதான் சார்ட் எடுத்துக் கொடுத்தா; அப்பாவுக்குத் தெரியாம.

—எதுக்கு இங்கே வந்திருக்கா?

—விசாரிக்கணும்.

—இந்த இருட்டிலே எப்படி வந்தா?

—அதையும் கேட்கணும்.

—உளவு பார்க்க வந்திருக்காளா?

—இருக்காது.

—நிச்சயமா எப்படிச் சொல்ல முடியும்?

—விசாரிக்கலாம்.

இருவரும் குழம்பிக் கொண்டு உள்ளே வர, ரீடா அவர்களுக்காகக் காத்திருந்தது போல் எழுந்து, எழுதுவதற்கு பேப்பரும் பென்சிலும் கேட்டாள்.

கொடுக்கப்பட்டதும் எழுதஆரம்பித்தாள்?

(மல்லிக்! ஆபத்து. நீங்க இங்கே தங்கியிருப்பதை வொய்ட்டும் அப்பாவும் கவனிச்சுட்டாங்க! ஜூலியைக் கண்டு பிடிச்சாச்சுன்னு நினைக்கிறாங்க! நாளைக்கு Bathys Caphe கொண்டு வராங்க.

ராம்சந்த் புருவத்தைச் சுருக்கினான்.

பேதிஸ்காஃப் ஒரு சின்ன அளவு ஸப்மரீன். தண்ணீருக்குள் இயங்கி, கடல் உட்புறங்களை ஆராய வசதி பெற்றது. அதை அவர்கள் இங்கே கொணர்ந்தால் ஜூலியைக் கண்டு பிடித்து விடுவார்கள்.

—பேதிஸ்காஃப் அவங்க கிட்டே இருக்கா?

(ஸிலோன்லேர்ந்து வரவழைச்சிருக்காங்க.)

—நீ எப்படி இங்கே வந்தே? (மல்லிக்.)

(எட்டிப் பாருங்க!)

மல்லிக்கும் ராம்சந்தும் எட்டிப் பார்க்க, வெளியே நங்கூரச் சங்கிலி கடல் நீரைத் தொடும் இடத்தில் ஒரு ஸிலிண்டர் போன்ற யந்திரம் ஒட்டியிருந்தது.

—அண்டர் வாட்டர் ஸ்கூட்டர்தானே? என்றான் ராம்சந்த்.

ரீடா தலையசைத்தாள்.

அதை இயக்கிவிட்டு அதன் பின்புறத்தைப் பிடித்துக் கொண்டால் தண்ணீரை ஊடுருவி

இழுத்துச் செல்லும். ராம்சந்த் அறிந்திருந்தான்.

—நீ இங்கே வரவேண்டிய காரணம்?

(ஆபத்தைப் பற்றி எச்சரிக்கத்தான்!)

—நாங்க இன்னும் ஜூலியைக் கண்டு பிடிக்கவில்லை என்றான் ராம்சந்த் சாதாரணமாக.

அதைத் தொடர்ந்து நிசப்தம்.

(நீங்க தொடர்ந்து இங்கே தங்கியிருக்கிற தாலேயே அவங்க சந்தேகிக்கிறாங்க. மேலே நகர்ந்து போனீங்கன்னு சந்தேகிக்கமாட்டாங்க. நான் எச்சரிக்கை கொடுக்க வந்தேன்.)

—ரொம்ப நன்றி, ரீடா! யோசிக்கிறோம்.

(நான் வரேன்.)

—காலேலே போகலாமே.

(என்னைக் கண்டுபிடிச்சுடுவாங்க. இப்பவே போகணும்.)

சட்டென்று அங்கேயே ஸாரியைக் களைந்து டைவிங் சூட்டில் தோற்றமானாள். அக்வாலங்கை எடுத்து மாட்டினாள். மல்லிக் தயக்கத்துடன் பார்த்திருக்க எல்லோரிடமும் விடை பெற்றாள். வெளியே போனாள்.

மல்லிக் அவளைத் தொடர, ஒரே ஒரு கணம் தயங்கி நின்றான். விருட்டென்று ஏதோ எழுதி, அவசரமாக நீருள் குதித்தான். ஸ்கூட்டரைப் பிடித்துத் தண்ணீரைக் கிழித்து ஓடத் தொடங்கினான்.

—நீங்க என்னைச் சந்தேகிக்கிறீங்க, நீங்களுமா மல்லிக்?



என்று அந்தத் துணுக்குக் காகிதத்தில் எழுதியிருந்தது. மல்லிக் துணுக்கை இறுக்கினான். கடல் வெறுமையை நோக்கினான். நுணுக்கமாகக் கண்ணில் நீர் வந்தது. துடைத்துக் கொண்டு உள்ளே போனான்.

ராம்சந்த் அந்த இரவிலும் பைனாகுலரைத் தூக்கிச் சுற்றும் ஆராய்ந்தான். அஸ்டிக்கை இயக்கிச் சுற்றுப்புறத்தில் எந்தப் படகோ வேறு எதுவுமோ இல்லை என்று நிச்சயித்துக் கொண்டான். பிறகுதான் படுக்கைக்குப் போனான்.

காலையில் எல்லோரும் எழுந்து காப்பியுடன் அதை விவாதிக்கத் தொடங்கினார்கள்.

அந்தப் பெண் சொல்வது உண்மையா?

வொய்ட்டைப் பற்றிய விவரங்களைக் கூறினான் மல்லிக். சம்பந்தசாமியைப் பற்றியும் விவரித்தான். வொய்ட்டுக்கு ஜூலியைப் பற்றித்தெரியும். சம்பந்தசாமிக்கு அதன் சார்ட்டைப் பற்றித் தெரியும். இருவரும் சேர்ந்ததில் எல்லா விஷயமும் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். எனவே ரீடா சொன்னதில் ஆச்சரியமில்லை. வொய்ட் வந்திருந்தால் கடலை ஆராயும் எல்லா உபகரணங்களுடனும் வந்திருப்பான். யமகாதகன்.

கோபி இந்த இடத்தில் இடைமறித்தான். —மல்லிக் எனக்கு ஒரு விஷயம் தெரியும். வொய்ட் தன்னைப் பெரிய எழுத்தாளர் என்று சொன்னானே, அது பொய். டில்லான் வொய்ட் என்கிற எழுத்தாளர் வேறே! அவன் போட்டோவை நான் பார்த்தாச்சு. இவன் நம்மை ஏமாத்தறான்.

—அவன் பெரிய எத்துவாளின்னு அப்பவே சொல்லிட்டேனே என்றான் மல்லிக்.

விவரங்களை ஒவ்வொரு கோணத்தில் ஆராய்ந்து விட்டு மேலும் பொறுத்துப்பார்ப்பது என்று தீர்மானித்தார்கள்.

காலை ஒன்பது மணி ஆனதும் மல்லிக், —நாம்ப வேணும்னு தள்ளிப் போயிடலாமா? என்றான்.

—வேண்டாம், மல்லிக். அதுதான் சந்தேகத்தை அதிகம் உண்டாக்கும். இன்னொரு விஷயம். அவங்க தூரத்திலிருந்தே நம்மைக் கவனிச்சிருக்காங்கன்னு இதுக்குள்ளே நாம்ப இருக்கிற இடத்தைக் கரெக்டா அளந்து கணக்குப் போட்டிருப்பாங்க. நாம்ப நகர்றதுனாலே பிரயோசனம் இல்லே.

எனினும் ராம்சந்த் சகஜ நிலையில் இல்லை. அடிக்கடி வெளியே வந்து சுற்றுப்புறங்களை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

பத்து அடித்துப் பத்து நிமிஷத்தில் அஸ்டிக் ஒரு கலக்கம் தென்பட்டது. யாரோ நெருங்கிக் கொண்டிருந்தார்கள், தண்ணீருக்குள் வழியாக!

ராம்சந்த் எச்சரிக்கை கொடுக்க எல்லோரும் உஷாரானார்கள்.

சில நிமிடங்களுக்கு எதுவும் தென்படவில்லை. பிறகு போர்ட் சைட் பக்கம் மெல்ல நீர் விம்ம, கறுப்பு உருவமாக மீண்டும் ரீடா வெளியே தலை தூக்கினாள்.

கையை அவள் உயர்த்த, ராம்சந்த் சந்தேகமுடன் பார்த்திருக்க, அவள் தயக்கமுடன் ஏணியைப் பிடித்து மேலே ஏறினாள். அவள் ஸ்கூட்டர் ஒரு நாயைப் போல் சங்கிலியில் கட்டுண்டு தண்ணீரோடு நின்றது.

ரீடா தளத்தில் குனிந்து ஏறி, பிறகு ஒரு பிராணி போல் நடந்து காபினுக்குள் போய் எல்லோரையும் அழைத்தாள்.

மீண்டும் சாரி உடுத்திக் காகிதம் பென்சில் கேட்டு வாங்கினாள்.

(மல்லிக்! அவங்க புறப்பட்டுட்டாங்க. இன்னும் ஒரு மணி நேரத்திலே இங்கே இருப்பாங்க. என்னை நீங்க நம்பலைன்னு தோணுது. ரெண்டாம் முறை சொல்லிட்டுப் போகணும்னு வந்தேன். இனிமே உங்க பாடு.)

ராம்சந்த் திகைத்தான்.

இப்போ எங்கே இருக்காங்க.

(ஆறாவது மைலிலே)

ராம்சந்த் இன்ஸ்ட்ருமெண்ட் போர்டை நோக்கி ஓடினான்.

ராடாரை இயக்கினான்.

நிஜந்தான். ஆறாவது மைலில் ஏதோ ஒன்றின் இயக்கத்தைக் காட்டியது ராடார்.

ராம்சந்த் கலக்கமுடன் திரும்பினான்.

மல்லிக், கோபி அவன் மூவரும் அடுத்த காபினுக்குள் நுழைந்தனர்.

விவாதம் தொடங்கியது. ஜூலியை அவர்கள் கண்டுபிடித்து விட்டால் என்ன செய்வது?

—கண்டுபிடிக்க முடியுமா? என்றான் மல்லிக்.

—பேதிஸ்காஃப் வந்தால் போச்சு. கலபத்தில் கண்டு பிடிச்சுடுவாங்க!

—அநியாயம்! என்றான் மல்லிக். —ராம்சந்த்! நீங்க கிட்டத்தட்ட நாற்பதினாயிரம் செலவழித்து விட்டீங்க. அவ்வளவு கஷ்டப்பட்டுக் கண்டுபிடிச்சதை மற்றவங்களுக்கு லேசில் காட்டிக் கொடுக்கவா?

—நிச்சயம் கூடாது. ஆனா இப்போ என்ன செய்ய?

ஜூலியை மூட முடியுமா? ஜூலியை மறைக்க முடியுமா? அல்லது ஜூலியை உடனே எடுத்துப் போக முடியுமா?

பைத்தியக்கார நினைவுகளாக வந்தன.

மூவரும் நிச்சயம் எதுவும் இல்லாமல் பிரதான காபினுக்குள் வந்தார்கள்.

சிறுவனின் அடம்!



நடிகர் சிவாஜியின் மகன் எம். ஜி. ஆர். ரசிகர் என்பது பழைய செய்தி. நடிகர் சிவகுமாரின் மகன் ரஜனிகாந்தின் விசிறி என்பது இன்றைய செய்தி. 'பில்லா' படத்திலுள்ள ''மை நேம் இஸ் பில்லா'' என்ற பாடலைக் கேட்டால் போதும், உடனே தனது அரைநிஜாரைக் கழற்றிவிட்டு முழு பேண்ட் அணிந்து கொண்டு ஆடியே தீரவேண்டும் என்று அடம் பிடிக்கிறான்! ''இவனை என்னதான் பண்ணுவது?'' என்கிறார் சிவகுமார்!

- ருக்மிணி ராமச்சந்திரன்

ரீடா ஆவலாகக் காத்துக் கொண்டிருந்தாள். அவர்கள் வந்ததும் ஒரு சீட்டை நீட்டினாள்.

(நீங்கள் என்னைச் சந்தேகிப்பதாக நினைக்கிறேன். மீண்டும் உறுதி சொல்ல நினைக்கிறேன். மல்லிக்! என்னை நம்புங்கள். நான் உதவி புரிய முடியலாம்.)

மல்லிக் ரீடாவைப் பார்த்தான். அவள் கண் ஒரு வானவெளி. வெகு தூரம் வரை நிர்மலமாக இருந்தது. ஸ்படிகமான தெளிவு. நிச்சயம் இவளிடம் கள்ளம் இல்லை.

—ரீடா! என்றான் மல்லிக் நெகிழ்ந்து. —உன்னை நம்பறேன். நாங்க ஜூலியைக் கண்டு பிடிச்சுட்டோம்.

(தங்கம் வெள்ளி இருந்ததா?

—இருந்தது. இது அநியாயமா அந்நிய நாட்டான் கையிலே போகக் கூடாது. கப்பல் பிரிட்டிஷ் கப்பல். தங்கத்தில் பாங்க் ஆப் இங்கிலாண்ட் முத்திரை இருக்கு. இந்த விஷயங்கள் வெளியிலே தெரிஞ்சா அது ஒரு சர்வ தேச விவகாரமாகப் போயிடும். இங்கிலாந்தே அந்தத் தங்கம் முழுக்கையும் தன் சொத்துன்னு உரிமை கொண்டாடும். அதனாலே ரகசியமா இதை நாமே, இந்தியர்களேதான் அடைந்து கொள்ள வேண்டும். அதுக்கு நீ உதவி செஞ்சா உபகாரமா இருக்கும். உங்க அப்பா கிட்டப் பேசி....

(அந்த நிலை கடந்தாச்சு. இப்போ அப்பாவுக்குக் கூட அந்தத் தங்கம் கிடைக்காது. அக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்திருக்கார். லட்ச ரூபாய்தான் கிடைக்கும்.)

—அப்போ வேறே என்ன செய்யலாம், ரீடா!

ரீடா யோசித்தாள்.

(ஜூலி எங்கே இருக்கா? எப்படி இருக்கான்னு சொல்ல முடியுமா?)

ராம்சந்த் இது வரை உரையாடலைப் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான்.

மல்லிக்கிற்குப் பயம். ராம்சந்தின் அனுமதி இல்லாமல் ரீடாவிடம் எல்லாம் கூறி விட்டோமே என்று நினைத்தான்.

இப்போது அவன் என்ன சொல்லப் போகிறான் என்று ராம்சந்தை எறிட்டுப் பார்த்தான்.

ராம்சந்த் மௌனமாக இருந்தான். பிறகு அவனே ஒரு முடிவுக்கு வந்து விட்டது போல் ரீடாவுக்குச் சமிக்ஞை காட்டினான்.

எல்லோரும் எழுந்தார்கள்.

முகப்பு காபினுக்குள் நுழைந்தார்கள்.

தான் தயார் பண்ணியிருந்த வரை படத்தை ராம்சந்த் அவளுக்குக் காண்பித்தான்.

ஜூலி கிடக்கும் இடத்தின் வரைபடம் அது.

அவள் ஸ்டார்போர்ட் சைடில் சாய்ந்திருப்பதையும், அந்த இடம் ஒரு பள்ளத்தின் சரிவில் இருப்பதையும் அந்தப் படம் காட்டியது.

(கடல் தரை இங்கே எப்படி இருக்கு? தூசியா, பவழப் பாறையா?)

தூசி! சில இடங்களில் பவழப் பாறை!

(அப்போ காரியம் எளிசு!)

—எப்படி?

கார் ஓட்ட...

கதை வசனகர்த்தா நடிகர் பாக்யராஜுக்கு கார் ஓட்டத் தெரியாது. இப்போதுதான் கற்றுக் கொண்டு வருகிறார். யாரிடம் தெரியுமா? நம் வருங்கால மனைவி பிரவீணாவிடம்! - அசோக்



(நான் எக்ஸ்ப்ளோஸிவ் கொண்டு வந்திருக்கேன்.)

ராம்சந்த் ஆச்சரியத்துடன் கண்ணை உயர்த்தினார்.

(நெருக்கடி எதிர்பார்த்துக் கொண்டுவந்திருக்கேன். வெள்ளைக்காரங்க சொத்து இது!)

—அத வச்சு என்ன செய்ய முடியும்?

(ஜூலிக்கு முன்னாலே எக்ஸ்ப்ளோஸிவ்வை வெடிச்சிடுவோம். தூசி எழும்பிடும். ஒரு நாள் முழுதும் அப்படியே மிதந்துக்கிட்டே நிற்கும். யாரும் எதையும் பார்க்க முடியாது. எவ்வளவு பெரிய வெளிச்சமும் உதவி செய்யாது.)

ராம்சந்த் ஆச்சரியப்பட்டான். அவள் திட்டம் சரியானதாகத் தோன்றியது. தூசியைக் கிளப்பி ஜூலியை மறைத்துவிட வேண்டியது.

—ஓகே. என்றான் அவன்

வொய்ட்டின் நெப்ட்யூன் படகு நான்காவது மைலில் தட்டுப்படும் வரை காத்திருந்தார்கள்.

பிறகு ரீடாவே ஸ்கூட்டரில் ஏறிச் சென்று முதல் எக்ஸ்ப்ளோஸிவ்வை வைத்துவிட்டு வந்தாள்.

அவள் வந்த சில நிமிடங்களில் எக்கோ ஸவுண்டரில் வெடிக்கும் சப்தம் கேட்டது.

பிறகு ராம்சந்தும் மல்லிக்கும் தண்ணீரில் மூழ்கிப் போய்ப் பார்க்க,

அந்த வெடிகுண்டு வெகு தூரத்துக்குக் கடலைக் கலக்கி யிருந்தது. எங்கும் தூசி எழுந்து திரை போட்டாற் போல் நின்றது.

அவர்கள் திரும்பி வந்த பிறகு நெப்ட்டியூனும் மற்றொரு படகும் மூன்று மைல் தொலைவில் வந்துவிட்டதை அறிந்தார்கள்.

ரீடா பரபரப்பாகி இருந்தாள்.

(வெடி குண்டுன்னு புரிஞ்சிருப்பாங்க. இனி பக்கத்தில் வர யோசிப்பாங்க. ஆனா வேறே முறைகளை உபயோகிப்பாங்க.)

என்ன முறை?

(பேதிஸ்காஃப் உபயோகிப்பாங்க. இல்லாட்டி ஸ்கூட்டர்லே இதுவரை வந்து ஆராய்ச்சி செய்வாங்க.)

—தூசி இருக்கும்போது முடியுமா?

(இருக்கிறவரை முடியாது.)

பிறகு ரீடா எழுந்து ஆராய்கிறேன் என்று சைகை காட்டிவிட்டுக் கீழே இறங்கினாள். நீருள் மறைந்தாள்.

அரை மணிக்குப் பிறகு திரும்பி வந்தாள்.

(அவங்க பேதிஸ்காஃப்லேதான் தேடறாங்க. சக்தி வாய்ந்த வெளிச்சம் போடறாங்க. அரை மைலுக்கு அந்த வெளிச்சம் வருது!)

மல்லிக்கும் ராம்சந்தும் திடுக்கிட்டார்கள்.

மல்லிக்கிற்கு உடனே ஒரு சந்தேகம்.

—ரீடா! தூசி மறைக்கும்னு சொன்னியே!

(சொன்னேன். ஆனா அதை ஊடுருவி அப்படி வருவாங்கன்னு எதிர்பார்க்கல்லே தூசியினோட பரவலைக் குறைக்க ஏதோ கெமிகல் உபயோகிக்கிறாப்போல இருக்கு. எம்மேலே ஏதோ எரிச்சல் தெரியுது)

மல்லிக்கிற்கு முதலில் அந்தப் பதற்றம் பற்றியது. அதனுடன் அந்தச் சந்தேகம். ரீடா சொல்வது மெய்தானா? அல்லது அவள் ஒரு உளவு எண்ணத்துடன் ஒத்துழைக்கிறாளா? இப்போது ஏதாவது சூது செய்கிறாளா?

(மல்லிக்! நீங்க ஏன் அப்படிப் பார்க்கிறீங்க? நான் சொல்வது நிஜம். நம்புங்க.)

—ரீடா! என்று கத்தினான் அவன். நீ குழந்தையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டறியா? நீ உண்மையில் ஒரு பெண்ணா?

கூச்சலிட்டு அவன் ரீடாவை நோக்கிப் பாய்ந்தான். அவள் கழுத்தில் கையை வைத்து வெறியுடன் அமிழ்த்தினான்.

அவள் வலியால் கத்த, ராம்சந்தும் கோபியும் ஓடி வந்தார்கள். மல்லிக்கைப் பலவந்தமாக வெளியே இழுத்தார்கள்.

ரீடா விம்மிய மூச்சுக்களை விட்டாள். கண்கள் கலங்கியிருந்தன. நீர் தாரை தாரையாக வழிந்தது.

பேச முடியாததால் எக்கியவாறு இலயில்லாத சத்தங்களை எழுப்பினாள். தேம்பிக் கொண்டு அவள் தாபங்கள் வெளி வருகின்றன என்று நன்றாகத் தெரிந்தது. முகம் குனிந்து அருவியாக அழுதாள்.

அவளது உடல் குலுங்கிப் போடுவதும், மூச்சு முட்டிக் கேவுவதும் எல்லோரையும் உருக்கிவிட்டன.

ராம்சந்த் அஸ்டிக்கை இயக்கிப் பார்க்க ஒரு மைல் தூரத்தில் கடல் அடியில் பல 'ஏதோக்கள்' சஞ்சாரம் இடுவதைக் கண்டான்.

மல்லிக்கிடம் வந்து, — மல்லிக் நீ செய்தது தவறு. பெரிய தவறு. அவள் கபடில்லாதவள்னு நிச்சயம் தெரியறது. அவள் சொன்னதை நிரூபணம் பண்ணிப் பார்த்துட்டேன் என்றான்.

மல்லிக்கிற்கு அந்தச் சோகம் எப்படி வந்தது தெரியவில்லை.

குற்றத்தை உணர்ந்தவன் போல் ரீடா அருகில் உட்கார்ந்து, —ரீடா, ரீடா! என்றான். அவளைச் சமாதானப்படுத்த முயன்றான்.

அரை மணிக்குப் பிறகு அவள் ஆசுவாசமானாள். மல்லிக் அவளிடம் —மன்னித்து விடு என்று பலமுறை கூறினான்.

ராம்சந்த், அஸ்டிக்கில் ஈடுபட்டிருந்தவன், —மல்லிக்! நாம் இருக்கும் திசை நோக்கித் தண்ணீர் அடி வழியாகச் சில இயக்கங்கள் வருகின்றன என்றான்.

ரீடாதான் துள்ளி எழுந்தாள்.

நேராக அஸ்டிக்கை நோக்கி ஓடினாள். அந்த கிராப் படத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

மல்லிக்கை நோக்கித் திரும்பினாள். -என்னை நம்புகிறீர்களா? என்றாள் சைகை செய்து.

—நிச்சயம் என்றான் மல்லிக், இரங்கிய குரலுடன்.

(ஜூலியின் வரை படம் எங்கே?)

வரைபடத்தை மீண்டும் கொண்டு வந்தார்கள்.

(ஜூலி இந்தப் பள்ளத்தின் அருகில் இருக்கிறது என்றீர்களே. பள்ளத்தின் ஆழம் என்ன?)

—மூணு மைல்.

ரீடாவின் பார்வை விரிந்தது.

யோசித்தாள்.

(ஒரே ஒரு வழி! எக்ஸ் ப்ளோஸிவ் வைத்து ஜூலியை அந்தப் பள்ளத்தில் தள்ளி விடவேண்டும்.)

மல்லிக் திகைப்புடன் பார்த்தான்.

—பிரயோசனம்?

(ஜூலி அவர்களுக்குக் கிடைக்க மாட்டான்.)

—நமக்கும் கிடைக்காதே!

(மல்லிக்! முதலில் நம்ம நோக்கம் அவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்பதுதான்.)

எல்லோரும் ஒருவரை யொருவர் பார்த்தார்கள்.

அஸ்டிக் பீப் பீப் என்று குரல் கொடுத்தது: இரண்டு மைலில் அந்த 'ஏதோக்கள்' வந்து விட்டதை உணர்த்தியது.

—மல்லிக்! என்ன செய்யச் சொல்றே! அவங்க வந்துடுவாங்க. பார்த்துடுவாங்க!

அவன் ரீடாவைப் பார்த்தான்.

(கம் ஆன் மல்லிக்! அதுதான் வழி. ஜூலியைப் பள்ளத்துள் தள்ளிவிடுவோம்.)

—பள்ளத்துள் மட்டும் அவர்கள் போய்ப் பார்க்க மாட்டார்களா?

—போதிஸ்காஃப் அவ்வளவு ஆழத்தில் இறங்க முடியாது. அப்படி இறங்க ஸ்பெஷல் எக்விப்மெண்ட் வேணும்.

எல்லோரும் திகைத்தார்கள்.

அடுத்து அஸ்டிக் பீப் பீப் என்றதும் மல்லிக் ஓகே என்க, ராம்சந்தும் ஓகே என்றான்.

(நான் எட்டு எக்ஸ்ப்ளோஸிவ் வைக்கிறேன். நீங்க அதுக்குள்ளே ரூபாவை ஒரு பர்லாங் கிழக்கே கொண்டு போங்க.)

—ஓகே.

ரீடா கடலுக்குள் இறங்கினாள்.

கிட்டத்தட்ட 40 நிமிடங்களுக்குப் பிறகு திரும்பி வந்தாள்.

அதற்குள் ரூபா ஒரு பர்லாங் தூரம் போயிருந்தது.

அவள் ஓ.கே என்று சைகை காட்ட சில நிமிடங்களுக்குப் பிறகு கடல் நீர் மேலே எழும்பி அருவி போல் கீழே குதித்தது.

அது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஒரே பிரளயமாகக் கடல் கொந்தளித்தது.

மேலும் அரை மணி நழுவ விட்டு, பிறகு ரூபாவை முதலில் இருந்த இடத்துக்குக் கொணர்ந்தார்கள்.

அஸ்டிக்கை ராம்சந்த் இயக்கிப் பார்க்க ஒரே நிர்மலம். பள்ளம் தெரிந்ததே தவிர, ஜூலி இருந்த இடம் நிர்மலமாக இருந்தது.

பவழப் பாறை நுனியிலிருந்து அது முழுதுமாக அந்தப் பள்ளத்தில் கவிழ்ந்


கல்கி
22.6.80
இதழில்
ஜோதிர்லதா எழுதும்
உறவின் கைதிகள்
புதிய தொடர்கதை
ஆரம்பமாகிறது.

கல்கி

சந்தா விவரம்

★

	ஓராண்டு	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 46	ரூ. 23
இலங்கை (இந்திய நாணயப்படி)	ரூ. 64	ரூ. 32
இதர வெளிநாடுகள்	ரூ. 100	ரூ. 50

மானேஜர்
கல்கி, சென்னை - 600 032



OSR

திருக்க வேண்டும். அங்கிருந்த மூவரும் கண்ணீர் சிந்தினார்கள். மல்லிக்தான் அதிகம் தேம்பிக் கொண்டிருந்தான்.

—மல்லிக்! அழாதே! ஜூலி இப்போது மூனு மைல் கீழே போயிட்டாள். சீக்கிரம் அமெரிக்கா போயி இவ்வளவு ஆழத்திலிருந்து அவளை எடுக்க வேண்டியதற்கு உண்டான டெக்னிக்குகளைக் கத்துக்கிட்டு வருவோம். எக்விப்மெண்ட்களையும் கொண்டு வருவோம். அப்புறம் சாவகாசமாக ஜூலியை எடுப்போம். பயப்படாதே!

அவன் சொன்னது ஒரு நம்பிக்கை போலத் தோன்றியது.

ஒரே நம்பிக்கை அதுதான்.

மல்லிக் கண்ணீரைத் துடைத்தான்.

ராம்சந்த் அதற்குள் கேபினில் உட்கார்ந்தான். விசைகளை ஒவ்வொன்றாக இயக்க, ரூபா நங்கூரங்களைக் கழற்றிக் கொண்டு, மெள்ள நகர்ந்தது. பரந்த கடல் வெளியில் நுரைக் கிழிசலை ஏற்படுத்திக் கொண்டு ஓட ஆரம்பித்தது.

கரையில் இறங்கும்போது ரீடா இறங்கினாள். ஸ்கூட்டரை ராம்சந்திடம் மகிழ்ச்சியுடன் வெகுமதி அளித்துவிட்டு மல்லிக்கிடம் வந்தாள். அவசரமாகத் தன் இடுப்பிலிருந்து துணுக்குப் பேப்பரை எடுத்துக் கொடுத்தாள்.

(உங்களுக்கு எப்போது முழு நம்பிக்கையும் விசுவாசமும் என்மீது பிறக்கிறதோ அப்போது என்னைப் பார்க்க வாருங்கள்.)

கொடுத்துவிட்டு நிற்காமலே போனாள்.

மல்லிக், சம்பகா, கோபி ஆகியோரின் விசுவாசம் ராம்சந்துக்குத் தெரிந்து விட்டதால், அவர்களைத் தனது பரந்த நிறுவனத்தில் நிரந்தரமாக ஏற்றுக்கொண்டான்.

அவர்கள் தங்கக் கண்டுபிடிப்புக்களை அவன் தனக்குப் பங்கு முதலீடாகச் சேர்த்துக் கொண்டான்.

விரைவில் ராம்சந்த் அவர்களை அமெரிக்காவுக்கு அழைத்துப் போய் வெகு ஆழ மீட்சிக்கான டெக்னிக்குகளைக் கற்று வருவான். அதுவரை ஜூலி கடலுக்குள்தான் இருப்பாள்.

சம்பகாவும் மல்லிக்கும் இயல்பான வெட்கத்தால் ஒருவரிடம் ஒருவர் பேசாமல் முதலில் பிரிய,

மறு வாரமே மல்லிக் மனம் பொறுமல் கனிநாகலாபுரம் கடற்கரைக்கு வந்தான்.

அவன் வருகை அவளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி கொடுத்தது!

அவன் எதற்காக அங்கே வந்திருக்கிறான் என்பதை அவள் ஊகித்துவிட,

அவள் ஏன் அந்த கடற்கரைக்கு வந்திருக்கிறாள் என்பதை அவனும் ஊகித்துவிட்டான்.

இருவரும் ஒருவரை யொருவர் தேடித்தான்.

—சம்பகா! என்று அவன் அழைத்து அவளை நெருங்க,

அவள் வெட்கத்துடன் மேலும் மேலும் நடந்து கொண்டே போக,

முடிவில் கனிநாகலாபுரீசுவரர் கோவிலில் ஏறியபோது அவன் அவள் கையைப் பிடிக்க,

அது என்ன சுவர்க்கமாக மாறியது அவர்களுக்கு!

(முற்றும்)

நட்சத்திர வடிவம்

பரிசுத்திட்டம்-3

போட்டி முடிவு



ரஜனிகாந்த்தின் முழு உருவத்தையும் சரியானபடி ஒட்டி அனுப்பியவர்கள் இரண்டே பேர்கள் தான்.

1. குமாரி விஜயலக்ஷ்மி, மே. பா. திரு வி. கண்ணன், 12, காசி விசுவநாதர் கோயில் தெரு, மேற்கு மாம்பலம் சென்னை-33.

2. க. இலக்குமார், 4/25 அள. அரு. அரு. வீதி, காளையார் கோயில் 623551


மீதம் தொகை ரூ. 200/-

ஜாக்பாட்டுக்கு (11வது போட்டி) சேர்ந்துள்ள மொத்த தொகை ரூ. 475/-

ஜாக்பாட்டுக்கு சேர்ந்துள்ள புகைப்படங்கள் 19.

ஆசிரியர்: கல்கி

புகைப்படம்: ஏ. சுந்தரம்


முயற்சி திருவினை ஆக்கும்! -பழமொழி
அம்முயற்சிக்கு ஒரு சாதனம்
தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு
ரூ 50,000
2 முதல் பரிசுகள் ஒவ்வொரு வரிசைக்கும்
ரூ. 50,000
குலுக்கல் 20-6-1980
3 இரண்டாவது பரிசுகள் ரூ. 10,000
பரிசுச்சீட்டின் விலை ரூ. 1/-
தமிழ்நாடு பரிசுச் சீட்டு இயக்குநர்
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

பாங்குகளில் என்ன நடக்கிறது?



காழ்ப்புணர்ச்சிக்கு ஒரு வடிகால் தான்!

பாங்குகளில் என்ன நடக்கிறது? என்ற கட்டுரை பாங்க் கிளார்க்குகள் மீதுள்ள காழ்ப்புணர்ச்சிக்கு வடிகால் என்று தான் சொல்ல வேண்டும்.

சக்தி வாய்ந்த தொழிற்சங்கங்கள் இருப்பது தவறு? தொழிலாளர்களுக்கு முழுப் பாதுகாப்பு இருப்பதுதான் தவறு? JobSecurity இல்லாமல் இருக்க வேண்டும் என்று கூறுகிறீர்களா? அப்படி இருந்தால் அழகான Service கிடைக்கும் என்றுதான் எதிர்பார்க்கிறீர்களா?

கை நிறையச் சம்பளம் அடடா! மற்றவர்கள் என்ன இளைத்தவர்களா? தொழிற்சாலையில் வேலை செய்யும் படிப்பு வாசனை இல்லாத, நைட் ஷிப்டில் தூங்கி வழியும் எத்தனையோ பேர் பாங்க் க்ளார்க்குகளையே முழுங்கி விடுகிறார்கள். அவர்கள் பெறும் சம்பளம் என்ன? போனஸ் என்ன? அவர்கள் தொழிற் சங்கங்கள் இல்லாதவர்களா? ஸ்டிரைக் செய்யாதவர்களா? அவர்கள் பணம் என்ன வானத்திலிருந்து மழையாகக் கொட்டுகிறதா? அதுவும் தான் மக்கள் பணம்.

பணத்தைக் கொண்டு பாங்கில் போட்டு விட்டால் உடனே பாங்க் தொழிலாளிகள் அவர்கள் கைச் சாட்டைக்குப் பம்பரமாகச் சுழல வேண்டும் என்று எதிர்பார்த்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

பண முதலைகளுக்கு பாங்க் க்ளார்க்குகள் மீது ஆட்சி செலுத்த முடியாதது குறையாக இருக்கலாம்.

'செக்'கைக் கொடுத்தால் 'லெட்ஜரில்' போஸ்ட் பண்ணுவது க்ளார்க் வேலை. அதை 'செக்' செய்வது ஆபீசர் வேலை. அவரவர் வேலை அவரவர்க்கு.

இந்தியாவில் 'இந்தக் கையில்' செக் கொடுத்து அந்தக் கையில் பணம் வாங்குவதற்கு ரொம்ப நாள் ஆகும். அது நம் தலை விதி.

தி. நகர் எம்.ஆர். சத்யநாராயணன்

பாங்குகள் பற்றிய கிருஷ்ணன் கட்டுரை அதிர்ச்சி அளித்தது.

Confidential report பாங்குகளில் உண்டு ? பியூன்களைத்தவிர பாக்கி அனைவருக்கும்.

கிளார்க்குகளுக்கும் பொறுப்பு உண்டு.. கொஞ்சம் குறைவாக வேண்டுமானால் இருக்குமே தவிர, ஓரேயடியாகக் கிடையாது என்பது தவறு.

டெபாசிட்டுகள், கடன்கள் — இவைகளுக்கான வட்டி விகிதம் ரிசர்வ் பாங்க் நிர்ணயிக்கிறது. உதாரணமாக அன்றைய காங்கிரஸ் அரசு மத்தியில் உள்ள போது, 74ல் உயர்த்தின வட்டி விகிதத்தை 77ல் ஜனதா குறைத்தது. பிறகு மறுபடியும் வோக்தால் அரசு கூட்டியது. இதற்குத் தனிப்பட்ட பாங்குகளைக் குறை கூறுவது அபத்தம்.

கடைசியில் ஒரு வார்த்தை. எந்த ஸ்தாபனத்திலும் எந்தத் தொழிலிலும் சில புல்லுருவிகள் உண்டு. ஏதோ பாங்கில் மட்டும் தான் அவர்கள் இருக்கிறார்கள் என்ற நினைப்பில் கட்டுரை ஆசிரியர் வரிந்துகட்டிக் கொண்டு எழுதியுள்ளார்.

ராயப்பன்பட்டி ஈஸ்வர்குமார்

அவல நிலைமையை பிட்டு பிட்டு வைத்திருக்கிறார்

'பாங்குகளில் என்ன நடக்கிறது' — இன்றைய அவல நிலைமைகளைப் பிட்டுப் பிட்டு வைத்திருக்கிறார் ஆர். கிருஷ்ணன். காண்ட்ராக்ட். ஓவர்டைம் என்ற பெயரில் வருடத்துக்கு நூற்றி இருபது மணி நேர ஓ.டி. வேலைகளை அலுவலக நேரத்துக்குள்ளேயே செய்து முடித்துவிட்டு (அதுவும் முழுதும் முடிக்கப்படாமல் மீதியை ஆபீஸர்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற நிலையிலேயே) வாங்கிக்கொள்வது, நாலு மணிக்கே கேரம், டேபிள் டென்னிஸ் விளையாடுவது, எல்லா வார இதழ்களையும் ஆபீஸ் நேரத்திலேயே படிப்பது, அரை மணி நேரம் லஞ்ச் அவர் என்றால் ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் எடுத்துக்கொள்வது, அடிக்கடி பர்மிஷன்கள் என்ற பெயரில் 'லேட்டாக' வருவது, சீக்கிரம் போவது, லெட்டர் கொடுக்காமல் லீவு போடுவது, கஸ்டமர்களை மிரட்டி, அதட்டி, உருட்டி, சினிமாவுக்கு ஓசி பாஸ் முதல் அரிசி, எண்ணெய், நவதானியம் போன்ற பல பொருள்களை ஓசியில் அல்லது குறைந்த விலையில் வாங்கிக்கொள்வது, கடன் என்ற பெயரில் கஸ்டமர்களிடம் பணம் வாங்கி, பின்னால் நாமம் போடுவது— இப்படி கிளார்க்குகள் செய்யும் தில்லு முல்லு ஒன்று இரண்டா! ஒரு பாங்கில் ஆபீஸர் என்றால் அவனுக்கு உறவினர்களிடமும், மற்ற நண்பர்களிடமும்தான் மதிப்பு இருக்

கும். ஒரு ஊளார்க்கிடமிருந்தோ, ஒரு பியூ னிடமிருந்தோ ஒரு சதவிகிதம் கூட எதிர் பார்க்க முடியாது. மாறாக, அவர்களின் கேலி; கிண்டல், பொறுமை இதையும் (இவை போன்ற சாட்டையடிகளையும்) தாங் கிக்கொள்ள வேண்டும். இந்தக் கட்டுரையை ஒவ்வொரு பாங்க் நிர்வாகமும் எல்லாருக்கும் சுற்றறிக்கையாக அனுப்ப வேண்டும்..

விழுப்புரம் எஸ். கணபதி சுப்பிரமணியன்

ரிசர்வ் வங்கியும், நிர்வாகமும் அரசாங்க மும் விதித்துள்ள விதிகளைப் பற்றி ஏதும் அறியாதவர்களாய் திரு கே. ஸ்ரீனிவாசன், திரு கிருஷ்ணன் போன்ற 'மேலிடத்து' ஆட்களே இருக்கிறார்கள் என்றால் பாமரர்கள் பற்றிக் கேட்கவா வேண்டும்?

கடைகளில் லாட்டரிச் சீட்டு வாங்குவது போல் இந்தக் கரத்தால் பணம் கொடுத்து மறு கையால் சீட்டு வாங்கும் யுக்தியை வங்கிகளில் செயல்படுத்த முடியாது. கையெழுத்துப் பரிசீலனை, ரொக்க இருப்பு பரிசீலனை, காசோலை கொணர்ந்து இருப் போரின் சூழ்நிலை பற்றிப் பரிசோதனை என பலவித பரிசோதனைகளைச் சட்டம் எங்கள் மீது திணித்து இருக்கிறது. அப்படியிருக் கையில் எப்படி விரைவில் செயல்பட முடியும்?

கிழிந்த நோட்டுக்களை வாங்குவது பற்றிய ரிசர்வ் வங்கியின் விதிகளைக் கட்டுரை யாளர்கள் படித்திருந்தால் வங்கி ஊழியர் களின் தியாக உணர்ச்சியையும் தைரியத்தை யும் பாராட்டுவார்கள்.

வெளியூர் காசோலைகள் பணமாவதில் கால தாமதத்தைத் தவிர்க்க ரிசர்வ் வங்கியும் நிர்வாகமும்தான் முனைய வேண்டும். ஊழி யன் அதைச் செய்ய முடியாது.

டெல்லர் முறை பற்றிய விதிகள் கடுமை யானவை. அவற்றை விரித்தால் கடிதம் மிக நீளும்.

பாஸ் புத்தகங்களை மாதக் கணக்கில் தூங்க வைத்துவிட்டுக் கடைசி நேரத்தில் வங்கி ஊழியர்களின் மென்னியைப் பிடிப் பதும், கால தாமதமானால் அவர்களைத் திட்டுவதும் என்ன நியாயம்?

கடனுதவி பற்றி திரு சீனிவாசனுக்குப் பதில். அரசு வங்கிகளின் பணம் அரசாங் கச் சொத்து. அதை அரசு இயற்றியுள்ள விதிகளுக்கு உட்பட்டுத்தான் யாருக்கும் கடனுகத் தர முடியும். மீறினால் மேனேஜர் கம்பி எண்ண வேண்டி இருக்கும்.

தனியார் துறையில் பலர் செல்வாக்கின் அடிப்படையில் அந்தஸ்து அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால் அரசு வங்கி ஊழியர்களோ தங்கள் திறமையையும், உள்ளார்ந்த அறிவையும், நேர்மையையும் நிரூபித்து ஊழியர்களாகச் சேர்ந்தவர்கள். அவர்கள் cream of the-educated. அவர்களையா தாக்குகிறீர்கள்?

சென்னை—14 கே. சூரியநாராயணன்

புதிய தலைமுறை புதிய தலைமுறை



திரு பாலகுமாரன்
(எழுத்தாளர்)

தஞ்சை மாவட்டம் பழமானேரிக்காரரான பாலகுமாரன் 1947 ஜூலை 7ந் தேதி பிறந்தவர். 'டஃபே' நிறுவனத்தில் பணியாற்றும் இவர் இதுவரை எழுதியுள்ள சிறுகதைகள் நாற்பத்தைந்து. முதல் நாவல் 'மெர்க்குரிப் பூக்கள்' (சாவியில் தொடராய் வருகிறது) இளைஞர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. இவர் பெயருக்கே நேரடியாக இந்த நாவலைப் பாராட்டி வந்துள்ள கடிதங்கள் முந்நூறுக்கும் மேல். பல கடிதங்களில் இலக்கியச் சுவை மிளிர்கிறது.

சிறுகதைகளை எழுதும்போது 'ஸின்ஸியராக' எழுதுகிறேன் என்று நெஞ்சு நிமிர்த்திக் கூறும் பாலா, ஆரம்ப நாட்களில் சில கதைகளைப் பத்திரிகைகள் திருப்பி அனுப்பிய போது சோர்வு பெற்றதில்லை. மாறாகத் தன்னம்பிக்கை காரணமாக ஆத்திரம் வருமாம்!

பதினாறு வயதுக்குள்ளேயே பாலாவுக்குத் தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள் எல்லாவற்றையும் முறைப்படி கற்பித்தவர் தமிழ் வித்துவானான இவருடைய அன்னையார்தான். சங்க இலக்கியங்களையும் நன்கு கற்றுணர்ந்தவர் பாலா.


''வாலிபத்து அசட்டுத்தனமான, காதல் கவிதைகளை எழுதினேன்'' என்று கூறும் பாலா புதுக் கவிதைகளும் எழுதினார். இவருடைய இப்போதைய கருத்து ''கவிதைகள் இனிமேல் தமிழுக்குத் தேவையில்லை. அந்த இடத்தைச் சிறுகதைகளே பிடித்துக் கொண்டு விட்டன!''

ஆல்டஸ் ஹக்ஸ்லி, ஆர்தர் கோஸ்லர் போன்ற மேற்கத்திய தத்துவ அறிஞர்களின் எழுத்துக்களே தமக்குத் தூண்டுதலாய் அமைகின்றன என்று கூறும் பாலாவுக்கு ஜே கிருஷ்ணமூர்த்தியிடமும் ஈடுபாடு உண்டு.

'ஸ்கெட்ச்' ஓவியத்திறன், கர்நாடக இசையில் நாட்டம் உள்ள பாலா தினசரி பூஜை செய்கிற ஆசாரக்காரர். ''பூஜை ஒரு எக்ஸர்சைஸ் மாதிரி... மனத்துக்கு இதமளிக்கிறது'' என்று கூறும் இவர் நீட்ஷேயின் ''கடவுள் இல்லை'' கருத்தையும் மதிக்கிறவர்!

திரு. எஸ். இராமலிங்கம்
(நவீனபாணி ஓவியம்)

பட்டுக்கோட்டையை அடுத்த மதுக்கூரில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் ஓவியக் கலையை முறையாகப் பயின்றது கும்பகோணம், சென்னை ஓவியக் கல்லூரிகளில். இப்போது பணியாற்றுவது கண்ணனூரில், அகில இந்திய கைத்தறிக் கழக நெசவாளர் பணி மையத்தில் ஆர்ட்டிசனராக.



''கிரேகட்'' என்னும் வண்ண ஓவிய முறையில் தனித் திறமை பெற்ற ராமலிங்கம், பதிக் வேலைப்பாடு, பீங்கான் கலைப் பொருள்கள் தயாரிப்பு இவற்றிலும் திறமை வாய்ந்தவர். பல ஓவியக் காட்சிகளில் இவருடைய படைப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

''மாடர்ன் ஆர்ட் என்பது வெறும் கோலங்களும் கிறுக்கல்களும் இல்லை. பார்க்கும்போது ஒழுங்கற்றது போல் தோன்றினாலும் ஆழ்ந்து நோக்கின் ஒழுங்கான அமைப்பு இருப்பதைக் காண முடியும். அதுதான் ரசனை'' என்கிறார், இந்த இருபத்தெட்டு வயதுக் கலைஞர்.

படம் போட பிரஷ்தான் வேண்டுமென்பதில்லை. வெறும் கத்தி முனைகளால் கூட வண்ணங்களை எடுத்து அப்பி உருவம் தந்து விடுகிறார்!

திரு கே. சந்தானம்
(உரிமையாளர், டி. எஸ். ஆர். அண் கோ., சென்னை)

தம்முடைய பதினேழாவது வயதிலேயே இந்தத் தொழில் துறைக்கு வந்தவர் திரு சந்தானம். பி.காம். பட்டதாரியான இவருக்கு இப்போது வயது 28.

மெல்லிசைக் குழுவொன்றை, ஆர்க்கெஸ்ட்ராவுடன் வைத்திருந்த இவர் பாடக்கூடியவர். தாளக் கருவியில் பயிற்சியுண்டு. ஒரு பொழுதுபோக்காக நண்பர்களுடன் சேர்ந்து நடத்தி வந்த அந்த இசைக் குழு இப்போது இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்னால் குத்துச் சண்டையும், வாட் போரும் கற்றுக் கொண்டார். பயிற்சி பெற்ற காலம் சுமார் இரண்டு ஆண்டுகள். வாட் போர் பயிற்சி அளித்தவர் எம். ஜி. ஆரின் ஆசிரியரே.

சந்தனத் தயாரிப்புக்களுக்கு ஜப்பானிலும் அமெரிக்காவில் கலிபோர்னியாவிலும் பெருமளவில் கிராக்கி உள்ளது என்று கூறும் இவர், இதுவரை டி. எஸ். ஆர். தயாரிப்புக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியதில்லை என்றும், குறைவான அளவே உற்பத்தித் திறன் இருந்ததுதான் காரணமென்றும் சொல்கிறார்.

இந்த ஆண்டில்தான் வெளி நாட்டு ஏற்றுமதியைத் தொடங்கவிருக்கிறார்களாம்.

- சுப்ரபாலன்



மூலஸ்தானம்



கண்ணதாசன்

ஆசை கொண்ட மனிதனுக்கு அறிவு வேலை செய்வதில்லை. ஞானியிடம் மட்டுமே அது உத்வேகத்தோடு நிற்கிறது. பதப் படுத்தப்பட்ட தோலைப் போல் உடம்பு பாடமாகிவிடுகிறது. மாவுத்தனின் அங்குசத்துக்கு அடங்கும் யானையைப் போல் உள்ளம் அடங்கி விடுகிறது.

ஆசை பெருகும்போது, மனம் மிருகமாகிறது. ஆசையை நிறைவேற்றிக் கொள்ள எதற்கும் அது துணிந்து விடுகிறது. வஞ்சம், சூது, சூழ்ச்சி, பொறாமை, எல்லாமே ஆசை பெற்றெடுத்த குழந்தைகள்.

அந்த ஆசை நதிக்குத்தான் எத்தனை கிளை நதிகள்?

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்றார்கள் அந்நாளில். இந்நாளில் மேலும் சில ஆசைகள் துணை அட்டவணையில் சேருகின்றன.

மன்னர்கள் காலத்தில், மண்ணாசை.

ஜனநாயகத்தில் அதிகார ஆசை.

அதிகாரத்தை ஒரு முறை ருசி பார்த்தவன் அதிலிருந்து இறங்குவதற்கு விரும்புவதில்லை. அவன் மீண்டும் மீண்டும் அந்த இடத்தைச் சுற்றியே வட்டமிடுகிறான்.

பூனைக்கு எந்த இடத்தில் பால் கிடைத்ததோ அந்த இடத்தில் அதைத் தினசரி காணலாம்.

நாய்க்கு எந்த இடத்தில் எலும்பு கிடைத்ததோ, அந்த இடத்தில் அதை நாள் முழுதும் காணலாம்.

ஒரு வீட்டில் சர்க்கரை தீர்ந்து போனால் அதிலிருந்த எறும்பு இன்னொரு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறதே!

மனிதத்துவத்தின் அறிவும் ஆக்கமும் ஆசையிலேயே அடங்கி விடுகின்றன.

துரியோதனன்தான் அயோக்கியன், சூதாட அழைத்தான்; யோக்யனான தருமன் ஏன் சூதாடப் போனான்?

ஆசை யாரை விட்டது?

சர்வக்ஞனான ராவணன் வஞ்சம் தீர்ப்பதற்காகச் சீதையைச் சிறை எடுத்தான். ஆனால் நெஞ்சத்தில் ஆசை குடிபுகுந்துவிட்டதே?

விசுவாமித்திரனுக்கு மேனகையிடம்தான் ஆசையாம்; அவள் பெற்ற குழந்தையிடம் இல்லையாம்; புராணம் சொல்கிறது.

அகலிகை 'கெட்டுப் போனாள் என்று கல்லாக்கத் தெரிந்ததே கவுதமனுக்கு. அவனுக்கு ஏன் ஒரு மனைவி?

தவமும் ஞானமும் தன் செயல் என்று இருக்க வேண்டியவனுக்குச் சம்சாரம் எதற்கு?

தெய்வானை எதில் குறைந்து விட்டாள் என்று வள்ளியை மணந்தான் முருகன்?

ஆசை மன்னனை விட்டதா, இறைவனை விட்டதா, முனிவனை விட்டதா?

ஆசையை அறவே ஒழித்தவர்கள் எத்தனை பேர்?

என் வாழ்நாளில் நான் பார்த்தது ஒரே ஒரு காஞ்சிப் பெரியவாளைத்தான்.

மற்றவர்களால் அது முடியவில்லையென்றால் அது குற்றமல்ல; காரணம் அது கடவுளாலேயே முடியவில்லை.

நான் பார்த்தவரை ஆசைகளிலேயே கொடுமையானவ் ஆசை பதவி ஆசை. அந்த ஆசையில் சிக்குண்டு அலைமோதிய நபர்கள் ஏராளம்.

அந்த ஆசை நிராசை ஆனபோது அவர்கள் புத்தி பேதலித்து விட்டார்கள். அது வெற்றி பெற்றிருந்தால் அவர்கள் யார் யாரையோ வஞ்சம் தீர்த்துக் கொண்டிருப்பார்கள்.

கடவுள் ஆசையைக் கொடுத்தாலும், வெற்றியை அளந்து கொடுத்திருக்கிறான்.

பாம்புக்கு விஷத்தை வைத்த இறைவன், ஈக்கும் கொசுவுக்கும் வைத்திருந்தால் இப்போது உலகத்தில் ஜனங்களே இருக்க மாட்டார்கள். சிருஷ்டியின் அற்புதம் இதுதான்!

எல்லா விலங்குகளுக்கு இடையிலும் ஒரு விளக்கொளி தெரிகிறது.

ஆசை மேகம் மூட்டிய இருள், அந்த விளக்கின் ஒளியிலேதான் மறைந்து நிற்கிறது.

அதன் பெயரே தெய்வ நம்பிக்கை.

ஜுரம் உச்சத்துக்குப் போகும்போது தானே மனிதன் வாயைக் கட்டுகிறான்? தெய்வ நம்பிக்கை ஒரு ஜுரமாகவே இருக்கட்டும். அது உச்சத்துக்குப் போனால்தான் ஆசை அடங்கும்.

லைசலாட்டத்தில் ஆசை பெருகும்.

நாத்திகன் ஆசையிலேயே சாகிறான். அவனுக்குத்தான் கடவுள் இல்லையே? 'நான் நான்' என்று அலைகிறான்.

எனது வீடு, எனது வாசல், எனது பிள்ளை, எனது பேரன் என்றே சிந்திக்கிறான். அதற்கு உதவி செய்யக் கூடியவர்களையே நேசிக்கிறான், பலனுக்காகவே அவன் கருமத்தைச் செய்கிறான். விளைவாகத் தோல்வியைச் சந்திக்கிறான். தோல்வியில் சுருண்டு படுக்கிறான்.

அப்போது அவனுக்குத் தெய்வ நம்பிக்கை வராவிட்டாலும் அவனது பெண்டாட்டி பிள்ளைகளுக்கு வந்துவிடுகிறது. .



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. Editor: K. Rajendran



ஹை பவர் ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவை—
அது வெட்டவெளிச்சம்.

உங்கள் மகன் துணிகளை அழுக்காக்கிக் கொள்வதில் பலே சூரனா? அப்படியானால் உங்களுக்குத் தேவை: அழுக்கை அகற்றிட ஒரு பலே சூரன்; ஹை பவர் ஸர்ஃப்—வல்லவனுக்கு வல்லவன்.

அதிக வலுவுடைய பொருள்கள் அடங்கியது ஹை பவர் ஸர்ஃப், அதிக சலவை சக்தி: தூசி, அழுக்கு எதனையும் சுவடு தெரியாமல் அகற்றிடும். படு அழுக்கான துணிகளையும் கூட பளிச்சிட வைக்கும். வர்ணத் துணிகளுக்கும் உகந்தது ஸர்ஃப்—தூய்மை ஒளி மிளிர வைக்கிறது.

ஹை பவர் ஸர்ஃப்—குடும்பத்தில் உள்ள அனைவரின் துணிகளுக்கும் அதிக வெண்மை அதிக ஒளி, கேட்பானேன், வேறெந்த சலவைப் பவுடரையும் விட ஸர்ஃப் உபயோகிக்கும் தாய்மார்களே அதிகம்.



வேறெந்த சலவைப் பவுடரையும் விட ஸர்ஃப் உபயோகிக்கும் தாய்மார்களே அதிகம்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.


700 வோட்டு வித்தியாசத்தில்
ஹாண்டேயின் தோல்வி,
தோல்வியே அல்ல
மு.க வின் வெற்றி
வெற்றியே அல்ல!